Canada Karai Cultural Association

கனடா காரை கலாச்சார மன்றம்

# காரை வசந்தம் 2011





OCTOBER 09,

# Karai Vasantham 2011

TORONTO, ONTARIO, CANADA




DOUBLESEAL
INSULATING GLASS LTD.
453 SIGNET DRIVE
NORTH YORK, ONTARIO, M9L 1V5
TEL: 416. 742 0146
FAX: 416. 742 4593
CONTACT: MAHADEVAN BALASUBRAMANIAM
EMAIL: mo@doubleseal.ca
CELL: 416. 716 7052
Manufacturing high performance
insulating glass units
for commercial and residental use.

## கனடா - காரை கலாச்சார மன்றம்
## பெருமையுடன் வழங்கும்

# காரை வசந்தம் -2011

## பதினொராவது ஆண்டு கலைவிழா
## சிறப்பிதழ்

ஒக்ரோபர் 09, 2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:30 மணி

**Chinese Cultural Centre**

**5183 Sheppard Ave East (Markham & Sheppard )**

பிரதம விருந்தினர்

## திரு. கந்தையா கனகராசா

C.G.A. (Sri Lanka), F. C. M. A. (U.K.)

SENIOR INTERNATIONAL TAX AUDITOR, C.R.A.

# கனடா-காரை கலாச்சார மன்ற கீதம்

கனடா காரை கலாசார மன்றம்
வாழிய வாழியவே!
இனிதே காரை நகர்வாழ் மக்கள்
இன்புற்று வாழியவே!

மருதமும் நெய்தலும் மருவித் தோன்றும்
மாநிலம் காரைநகர்
கருதும் கல்வி கலையொடு ஒழுக்கமும்
கண்டபண் பாட்டுநகர்!

பால்நிறமான கடலலை மோதிப்
பரவிடும் கரையினிலே
மேலொளி வீசும கலங்கரை விளக்கம்
விளங்கிடும் மேன்மைநகர்!

அருளம் பலவனார் அல்லின் ஏபிரகாம்
ஆனோர் வளர்த்தநகர்
பொருளை வளர்க்கும் வர்த்தக ராலே
பொலியும் பொன்னகரம்!

பாரிற் புகழொடு பஞ்ச ரதம் வரும்
பதியும் இதுவே தான்
தேரில் பொலிதரு சுந்தரேஸ் வரரும்
திகழ்வதும் இங்கேதான்!

ஈழத்துச் சிதம்பரம் இலங்கிடும் காரை
என்றென்றும் வாழியவே!
தோளொத்த காரை - கனடா மக்கள்
தொடர் பென்றும் வாழியவே!

இம்மன்ற கீதத்தை ஆக்கியவர்: தமிழருவி ஆசிரியமணி
த.சிவகுமாரன்

இசையமைப்பு

குரல்: சங்கீத பூஷணம் காரை ஆ. புண்ணியமூர்த்தி

வயலின்: அளவையூர் இசை ஞானபூபதி கேசவமூர்த்தி

மிருதங்கம்: மிருதங்க கலாவித்தகர் பரஞ்சோதி ரதிரூபன்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

# நடப்பாண்டு நிர்வாக சபை (2011-2012)

| | |
|---|---|
| தலைவர் : | திரு. ரவி. ரவீந்திரன் |
| உபதலைவர் : | திரு. தர்மலிங்கம் பரமசிவம்(துரை) |
| செயலாளர் : | திருமதி. மலர் குழந்தைவேலு |
| உபசெயலாளர் : | திரு. பாலசுப்பிரமணியம் கணேசன்(பாலன்) |
| பொருளாளர் : | திரு. தவராஜா சங்கரப்பிள்ளை |
| உபபொருளாளர் : | திரு. திரு. நடனசபேசன் பொன்னம்பலம்(ரூபன்) |

**நிர்வாக சபை உறுப்பினர்கள் :**

திரு. கோபால் மயில்வாகனம்

திரு. குகதாசன் சோமசுந்தரம்

திரு. மோகன் சங்கரப்பிள்ளை

திரு. நாதன் தர்மலிங்கம்

திரு. உருத்திரலிங்கம் தம்பையா

**திட்டமிடல் போஷகர் சபை உறுப்பினர்கள்:**

திரு. கனக. சிவகுமாரன்

திரு. சிவராமலிங்கம் சிவசுப்பிரமணியம்

திரு. சிவசுப்பிரமணியம் குகனேசபவன்

திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன்

திரு. கந்தப்பு அம்பலவாணர்

| | |
|---|---|
| **கணக்காய்வாளர் :** | திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதம்பிள்ளை |
| **இணையத்தள பராமரிப்பு:** | திருமதி. மலர் குழந்தைவேலு |
| **இணையத்தள பராமரிப்பு ஆலோசனை:** | திரு.விமலராஜா குலசேகரம் |

முன் அட்டை வடிவமைப்பு: பா. ஞானபண்டிதன்

மலர் வடிவமைப்பு: மா. கனகசபாபதி

கணணி அச்சுப் பதிவு: திருமதி மலர் குழந்தைவேலு

**காரை மாதா பெற்றெடுத்த அன்பு நெஞ்சங்களே!**
காரை வசந்தம் சிறப்பு மலரின் 11வது இதழ் விரிந்து உங்கள் கைகளில் தவழுகின்ற இந்தவேளையில் உங்களோடு மலர்க்குழுவின் சில வார்த்தைகள்!

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்'
நற்றவ வானினும் நனி சிறந்தனவே.

என்ற புனிதமான வாக்கினை உள்ளத்தில் நிறுத்தி காரை மண்ணின் வளம் பெருக்க பயன் மிக்க பணிகளை முன்னெடுத்து வருவது மட்டுமல்லாது கனடாவில் வாழும் காரை மக்களிடையே ஒருமைப்பாட்டைப் பேணி உறவுப் பிணைப்பினை வலுப்படுத்தும் செயற்பாட்டிலும் அர்ப்பணிப்புடன் தொண்டாற்றி வருகின்ற கனடா-காரை கலாச்சார மன்றமானது பல சாதனைப் பெறுபேறுகளைப் பெற்று ஏனைய அமைப்புக்களிற்கு முன்னுதாரணமாக விளங்கி வருகின்றது எனக் கூறினால் அது மிகையாகாது எனலாம்.இம்மன்றத்தின் சாதனைப்பட்டியலில் காரைநகர் மக்கள் அனைவருக்கும் பெருமை தருகின்றதும் சிறப்புக்கள் பல பொருந்தியதுமான காரை வசந்தம் கலை விழாவும் இவ்விழாவினை பதிவாக்கி வருகின்ற சிறப்பு மலரும் விளங்கப்பெற்றுவருகின்றன..இதற்கு அனைவராலும் போற்றப்படுகின்ற காரை மக்களின் சாதனைப் பாரம்பரியமும் ஆழமான மண் பற்றும் ஆதாரமாகவிருந்து வருகின்றன என்பதை சுட்டிக்காட்டுவதில் பேருவகை அடைகின்றோம்.

பிறந்த மண்ணின் வரலாற்றுப் பின்புலம் பண்பாட்டுப் பின்புலம் என்பனவற்றை நயப்புற்று அவை இரண்டினையும் தாய் தந்தையராக கொள்ளவேண்டும். இவ்விரண்டு செல்வங்களையும் அறிந்திராதவர்கள் தாய் தந்தையரை அறியமுடியாத அறிவிலிகளிற்கு சமமானவர்கள்.இது அறிஞர்களதும் ஞானிகளதும் கூற்றாகும்.இதனை சிந்தையில் கொண்டு மண் தொடர்பான ஆக்கங்களையும் தகவல்களையும் இச்சிறப்பு மலரில் பதிவாக்கி வருகின்றோம்.அந்த வகையில் இதுவரை வெற்றிகரமாக வெளிவந்துள்ள சிறப்பு மலர்கள் வரிசையில் 11வது மலராக இடம்பிடித்துக்கொண்ட இம்மலரானது மிகவும் பயனுடையதாக அமையும் என நாம் நம்புகின்றோம்.

இது போன்ற மலரினை தொகுத்து வெளியிடும் பணியில் எதிர்கொள்ளக்கூடிய சிரமங்களை அனுபவித்தும் பாரத்தும் தெரிந்தவர்கள் விளங்கிக்கொள்வார்கள்.ஆனாலும் எல்லாவற்றையும் தாண்டி வெற்றியுடன் இம்மலரானது சிறப்பாக வெளியிடப்பட்டுள்ளது என்றால் அதற்கு உந்து சத்தியாகவும் ஊக்க சத்தியாகவும் உதவி சத்தியாகவும் விளங்கிய பல அன்பு உள்ளங்களை நன்றி என்கின்ற மூன்றெழுத்து சொல்லினுள் அடக்குவது எமது கடமையாகும்.

வாழ்த்துச் செய்திகள் ஆக்கங்கள் தகவல்கள் என்பனவற்றைவழங்கி பெருமைப்படுத்திய பெருந்தகைகள்
விளம்பரங்கள் தந்து ஊக்கிவித்த பரந்த நோக்குடைய வர்த்தகப் பெருமக்கள் பல்துறை சார்ந்த சேவையுள்ளம் கொண்ட காரையின் பற்றாளர்கள்
Karainagar.com இணையத்தள சேவையின் காரைநகர் செய்தியாளர் சயந்தன்
இம்மலரினை முற்றிலும் இலவசமாக அழகுற வடிவமைத்து உதவிய திரு.மா.கனகசபாபதி
கவர்ச்சிமிகு முன் அட்டையினை ஆக்கி அளித்த திரு.பா.ஞானபண்டிதன்
விளம்பர வடிவமைப்புக்களை செய்துதவிய திரு.கணேசன் திருமாறன்
பல்லாற்றாலும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புக்களை வழங்கிய மன்ற நிர்வாகத்தினர் ஆகிய அனைவரையும் மனதில் நிறுத்தி உள்ளார்ந்த நன்றியையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
நீருக்கு நுரையுண்டு நெல்லுக்கு உமியுண்டு புல்லிதழ் பூவிற்குமுண்டு என நினைந்து குற்றம் குறைகள் தவறுகளை நீக்கி நிறை காண வேண்டிநிற்கின்றோம.

இங்ஙனம்
மலர்க்குழு
**கனக.சிவகுமாரன் (இதழாசிரியர்)**
**கிருஷ்ணவேணி சோதிநாதன் (விளம்பர இணைப்பாளர்)**
**கந்தப்பு அம்பலவாணர்**
**சிவசுப்பிரமணியம் குகநேசபவன்**
**சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம்**

# உங்களுடன் நாங்கள் ...

ஒற்றுமை உணர்வும் ஊர்ப்பற்றும் கொண்ட கனடா வாழ் காரை மக்களின் கலை விழாவே 'காரை வசந்தம்'. உலகம் வாழ் காரை மக்களிற்கு உதாரணமாக விளங்கும் இம் மன்றம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்து வருவது கண்டு பேருவகை அடைகின்றோம்.

மன்ற கீதம், மன்ற இணையத்தளம் (karainagar.com), மன்ற இதழ் (காரை ஒளி), கலை விழா (காரை வசந்தம்) எம் மண்ணிற்கான மக்கள் சேவை என வளர்ச்சியடைந்து வருகின்றது.

எமது மண்ணின் வளர்ச்சியில் அக்கறைகொண்ட மக்களாலும், மன்ற உறுப்பினர்களின் ஒப்பற்ற சேவை மனப்பான்மையாலும், வர்த்தகப் பெருமக்களினதும், கொடை வள்ளல்களினதும் நன்கொடையாலும், ஒத்துழைப்பாலும், எமது வருடாந்த நிகழ்வான 'காரை வசந்தம்' தரமான வெற்றிகரமான விழாவாக அமைகின்றது.

இம் மன்றம் கனடா வாழ் காரை மக்களின் உணர்வுகளுடன் மட்டும் நின்றுவிடாது, காரைநகரில் வாழும் எம் உடன் பிறப்புக்களின் இன்னோரன்ன தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முழு முயற்சியுடன் ஈடுபடுகின்றது என்தில் திருப்தியும் பெருமையும் அடைகின்றோம்.

உங்கள் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும, கருத்துக்களையும் எமக்கு அறியத்தந்து எமது மண்ணின் வளர்ச்சியையும் மன்றத்தின் வளர்ச்சியையும் முன்னெடுப்பதற்கு உதவுமாறு அன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

நன்றியுடன்
**நிர்வாகம்**
**கனடா-காரை கலாச்சார மன்றம்**

# காரை வசந்தம் – 2011
# நிகழ்ச்சி நிரல்

**மங்கள விளக்கேற்றல்**

கலாநிதி தி. சிவகுமாரன், திருமதி. சிவகுமாரன், குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் வி.விஜயரட்ணம், பல் வைத்திய நிபுணர் டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம், திருமதி ஆதிகணபதி.

**அகவணக்கம்**

**தமிழ்த்தாய் வாழ்த்து**

**கனேடிய தேசிய கீதம்**

பங்குபற்றுவோர்: வைஸ்ணவி குமரேசன், பைரவி குமரேசன், ஷிரோமி காந்திநாதன், பிரவீணா விக்கினராஜா ஆரணி சந்திரேஸ்வரன், தாரணி தேவகுமார், சந்தியா சுந்தரேசன், சங்கவி சண்முகலிங்கம் லக்ஷிகா சந்திரசோதி, நிதுஷா பரமானந்தராஜா, லக்ஷிகா மோகனேந்திரன், காயத்திரி பரமேஸ்வரன், மதுரா சோதிநாதன், மயூரா சோதிநாதன், நிஷாந்தி கணேசலிங்கம், ஹரிணி தயானந்தராஜா, சுபன்யா சிவஜோதி, கிபிஷா சிவஜோதி, அனுஷா ஸ்ரீவர்ணசூர்யா வைஸ்ணவி ரவீந்திரன்

**வரவேற்புரை:** பாலசுப்பிரமணியம் கணேசன், உப - செயலாளர்

**நாதம் கீதம் சங்கீதம்:**

வயலின்: இசைக்கலாபாரதி சத்தியசொரூபி தீபன்
மிருதங்கம்: மிருதங்க கலாவித்தகர் ரதிரூபன் பரஞ்சோதி
தவில்: செல்வன் யான்சன் ராஜ்மோகன்
மோர்ஷிங்: செல்வன் ஜனகன் ஜெயகுமார்

**பரதத்தில் காரைநகர்:**

**தயாரிப்பு:** ரொறன்ரோ கலாபவனம் நடனக் கல்லூரி இயக்குனர் நாட்டியக்கலைமணி திருமதி.குமுதினி ஸ்ரீகாந்தன்

பங்குபற்றுவோர்: மதுவந்தி ஸ்ரீகாந்தன், நர்மிதா ஞானகாந்தன், கோசலா ஞானகாந்தன், டக்சனா ஞானகாந்தன், வானதி சிவானந்தன், ரம்மியா கணேஸ், ஹனுஜா கணேஸ்

**தமிழ்ப் பேச்சு:** பாலர் பிரிவு - துளசி தவராஜா

**நடனம்:** **பாப்பாப் பாட்டு** - பரத கலா வித்தகர் திருமதி சித்ரா தர்மலிங்கம் அவர்களின் மாணவிகள்

பங்குபற்றுவோர்: Adshaya Bharathithas, Anchana Satkunarajah, Diya Patel, Harrinie Lanfrank, Nethra Nathan Nithusha Sivapathasuntharam, Ragavi Rathan, Tharunega Balasubramaniam, Thivesha Umachandran, Thiyana Tharmalingam

**தமிழ்ப் பேச்சு**: கீழ்ப் பிரிவு - துளசி யோகேஸ்வரன்

**புத்தகப் பொங்கல் - நாடகம்**

**ஆக்கம்:** கிருஸ்ணவேணி சோதிநாதன்

**பிரதியாக்கம்:** விஜயா சண்முகலிங்கம்

பங்குபற்றுவோர்: சங்கவி சண்முகலிங்கம், மதுரா சோதிநாதன், காயத்திரி பரமேஸ்வரன், மயூரா சோதிநாதன்

**தலைவர் உரை** - ரவி ரவீந்திரன்

**நூல்நிலையத் திட்ட அறிமுகவுரை:** திரு. நடராஜா அமிர்தலிங்கம்

Heal the World - நிரோ டான்ஸ் கிரியேஷன்ஸ் - நிரோதினி பரராஜசிங்கம்

பங்கு பெற்றுவோர்: சுவேதா பரராஜசிங்கம், அபினா நிமல்ராஜ், கல்வினி பொன்னையா

**திரையில்:** தசாப்தத்தைக் கடந்த காரை வசந்தம் - தயாரிப்பு: கே.கே.எலெக்ரோனிக்ஸ்

**பிரதம விருந்தினர் உரை:** – சர்வதேச சிரேஷ்ட கணக்காளர் திரு. கந்தையா கனகராசா

**நடனம்:** நடனகலா பாரதி, நாட்டியக் கலைமைணி நிர்த்திகா சித்திரவடிவேல் அவர்களின் மாணவிகள்
பங்குபற்றுவோர்: அபிராபி ஜெகநாத், அகிம்ஷா குகன், கவிநயா பரமேஸ்வரன், நிர்த்திகா சித்திரவடிவேல்
பிரணவி சந்திரபாலன், தயனி ஜெகநாத், வைஷ்ணவி சந்திரபாலன்

**Thillana & Fusion - நடனம்**: - பரதகலா வித்தகர் திருமதி சித்ரா தர்மலிங்கத்தின் மாணவிகள்
பங்குபற்றுவோர்: Darsi Panchalingam, Lacsy Panchalingam, Shalavi Sivabalan, Shreya Motkur
Simantha Sritharan, Tharaniya Sivarajah, Varshini Tokala

**உயிரும் நீயே** - நிரோ டான்ஸ் கிரியேஷன்ஸ் - நிரோதினி பரராஜசிங்கம்
பங்குபற்றுவோர்: சுவேதா பரராஜசிங்கம், கல்வினி பொன்னையா, அபினா நிமல்ராஜ்
விதுஷா இளங்குமரன், துஷிதா கோபிகிருஸ்ணா, சங்கவி செல்வகுமரன்

# இடைவேளை

**பரிசளிப்பு:** தமிழ் திறன் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசளிப்பு: பாலர் பிரிவு, கீழ்ப் பிரிவு

**வீணா கானம்:** தயாரிப்பு - வீணாலயம் அதிபர் திருமதி. ஜெயந்தி ரட்ணகுமார்
பங்கு பெறும் கலைஞர்கள்: ஜெயந்தி ரட்ணகுமார், ஸ்ரீதா சிவராஜ், துவாரகா சிவதாசன், கிருபாகரி
கிருபாகரன், சுபாங்கி சூரசங்காரம், பிரியா ரட்ணகுமார், நிவேதா உதயகுமார்
வைஸ்ணவி ரவீந்திரன், அபர்ணா தர்மகுலசிங்கம், ஐஸ்வர்யா தயாபரன்
சுரேகா செல்வகுமரன்

**தனி நடனம்: 'அம்மா அழகே உலகின் ஒளியே'** பரதசூடாமணி நடனக் கல்லூரி அதிபர் கலைமணி
கலாபூஷணம் திருமதி. துவாரகா கேதீஸ்வரனின் மாணவி செல்வி காயத்திரி பரமேஸ்வரன்

**பேச்சு:** மத்திய பிரிவு – தனுஷ்காந்த் யோகேஸ்வரன்
**பேச்சு:** மேற் பிரிவு – நிஷாந்தி கணேசலிங்கம்
**பேச்சு** - அதிமேற் பிரிவு – நிதுஷா பரமானந்தராஜா

**நன்றியுரை:** திருமதி. மலர் குழந்தைவேலு - செயலாளர்

**நாடகம்: Open House**: ஆக்கம்: காரை மணிவண்ணன் பிரதியாக்கம்:: வேலணையூர் செல்வம்
நடிப்பில்: திருவாதர் தருமராஜா, சிவலோகநாதன், திருமதி. அன்ரன் பூபதி, திருமதி. S. தவம்
சுப்ரா சுப்பிரமணியம், பாபு சித்ரா, பாலா கணேசன், கதிரேசன் ஸ்ரீகரா, ராகவன் சுப்பிரமணியம்
பிரவீன், சுரேன்

**நாடகம்:** Luxury வறுமை **தயாரிப்பு:** கனடா-காரை கலாச்சார மன்ற கலைப்பிரிவு
பங்கு பற்றுவோர்: V. மயூரன், N. சுதாகரன், P. தர்மலிங்கம், S. தவராஜா, T. ஜீவானந்தராஜா
N. பிரகலாதீஸ்வரன், K. பகீரதி, R. ரவீந்திரன்

**பரிசளிப்பு:** தமிழ் திறன் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசளிப்பு:
மத்திய பிரிவு, மேற் பிரிவு, அதிமேற் பிரிவு.

**நிகழ்ச்சித் தொகுப்பு:** S. தவராஜா, P.ஞானபண்டிதன், P.S.சுதாகரன், கிருஸ்ணவேணி சோதிநாதன்,
சாலினி குழந்தைவேலு

# பிரதம விருந்தினரின் வாழ்த்து



காரை வசந்தம் -2011 க்கு என்னையும் மனைவியையும் பிரதம அதிதியாக அழைத்தமைக்கு கனடா-காரை கலாச்சார மன்றத்திற்கும் காரை பெருமக்களுக்கும் எமது நன்றியையும் விழாவில் கலந்துகொள்ளும் எமது மகிழ்ச்சியையும் அதேவேளையில் அன்பையும் தெரிவிக்கின்றோம்.

நாங்கள் காரைநகருக்குச் சென்று திரும்பி வந்த ஒரு மாதத்திற்குள் இவ்வாய்ப்பு கிடைத்தமை ஒரு வரப்பிரசாதமே. Charge ஐ இழந்த Battery ஒன்று திரும்ப Charge செய்யப்படுவது நீங்கள் அனைவரும் அறிந்ததே. எங்கள் காரைநகர் விஜயமும் அப்படி ஒன்றாகத்தான் இருந்தது. எங்கள் உடல் உள்ளம் இரண்டும் (ஏன் உயிர்கூட) முழுக்க முழுக்க Charge செய்யப்பட்டுள்ளது. போங்க காரைநகருக்கு தாராளமாக Charge செய்யுங்க.

காரை விஜயத்தின் ஊடாக நான் பெற்ற அனுபவத்தில் உங்களுடன் இரண்டு விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

காரைநகரில் தொழில் சார்ந்த கல்வி பயிற்சி நிலையம் மூலம் அங்கு மேற்படிப்பு மேற்கொள்ள வாய்ப்புக்கிட்டாத இளைஞர் யுவதிகளுக்குப் பயிற்சி வழங்கி தொழில் வேலை வாய்ப்புக்களுக்கு அநுசரணை வழங்கப்பட வேண்டும். வெளிநாடுகளில் சேர்க்கும் பணத்தின் பெரும்பகுதி காரை மண்ணில் செலவு செய்யக்கூடிய வகையில் மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பலவிதமான போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து இளம்பிள்ளைகளையும், பரிசு பெறுபவர்களையும் மனதாரப் பாராட்டுகிறேன். அத்துடன் நிகழ்ச்சிகளை வழங்கும் கலைஞர்கள், சிறார்கள், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி மகிழ்கிறேன். இறுதியாக வேலைப்பழு நேரப்பற்றாக்குறை போன்ற பல அழுத்தங்களுக்கும் இடங்கொடுக்காமல் தாம் பிறந்த மண்ணையும் மக்களையும் முன்னேற்ற வேண்டும் என்ற ஒரே ஒரு உன்னத நோக்குடன் இவை அனைத்தையும் முன்னின்று நடாத்தி வருகின்ற மன்ற அங்கத்தவர்களுக்கும் அவர்களுக்கு ஆதரவை வழங்கும் காரை மாதாவின் செல்வங்களுக்கும் எனது மானசீகமான நன்றி கலந்த பாராட்டுக்கள்.

காரைவசந்தம் -2011 பொலிவுபெற்று நிறைவேற எமது வாழ்த்துக்களும் - பிரார்த்தனைகளும்.

க. கனகராசா



Rathika Sitsabaiesan, MP
Scarborough-Rouge River

719 Confederation Building
House of Commons
Ottawa, ON
K1A 0A6

Tel: 613-996-9681
Fax: 613-996-6643

26 September 2011

Dear Canada-Karai Cultural Association,

Congratulations on your Annual Cultural Show: Karai Vasantham. Your aim of promoting arts and culture in celebration of your community and their contribution to life here in Canada is a noble one. This not only enhances the Canadian Karainagar community but brings together former residents to enhance and strengthen the lives of those abroad.

Your active work of empowering society with cultural, social and humanitarian efforts is to be acknowledged and celebrated.

My sincere congratulations and all the best wishes to your continued success and growth.

Sincerely,

MP

Rathika Sitsabaiesan, Member of Parliament
Scarborough-Rouge River

**Rathika.Sitsabaiesan@parl.gc.ca**

DR. V. VIJAYARATNAM, M.D.
M.R.C.P. (UK), M.R.C.P.C.H, F.R.C.P (C.), F.A.A.P, D.C.H. (LOND.), D.C.C.H. (EDIN.)
PAEDIATRICS. GASTROENTEROLOGY AND NUTRITION

*6A-3430 Finch Avenue East, Scarborough, Ontario M1W 2R5 Tel: 416-496-1990 Fax: 416-496-1984*

# பிரதம அனுசரணை வழங்கி வருகின்ற குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் வி. விஜயரத்தினம் வழங்கிய வாழ்த்து



முச்சங்கம் அமைத்து மூவேந்தர் வளர்த்த முத்தமிழ் கனடா வாழ் காரை மக்களின் நெஞ்சங்களில் 2000 ஆம் ஆண்டு காரை வசந்தமாக துளிர்விட்டு வளர்ந்து இன்று 11வது ஆண்டில் பாதம் பதிப்பதுடன் இவ்விழாவினை பதிவாக்கி வெளியிடப்பட்டு வருகின்ற சிறப்புமலர் 11வது இதழை விரித்து பரப்புகின்ற இன்றைய நன்நாளில் எனது இதம் கனிந்த வாழ்த்துக்களை வழங்குவதில் காரையின் மைந்தன் என்றவகையில் பேருவகையடைகின்றேன்.

'காக்கை பறவாத இடமும் இல்லை
காரைதீவான் செல்லாத ஊரும் இல்லை'

என்பது பழமொழி. தீவு நகராவதற்கு முன்னரும் இத்தீவின் வர்த்தகப் பெருமக்கள் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வர்த்தகத் துறையில் ஈடுபட்டு அப்பகுதிகளில் மிகப்பெரிய செல்வாக்குடன் வாழ்ந்து பொதுக்கைங்கரியங்களில் ஈடுபட்டதுடன் காரைநகரையும் மேன்மையுறச் செய்திருந்த காலகட்டத்திலேயே இப்பழமொழி உருவானதாக நம்பப்படுகிறது. இக்காலகட்டத்தில் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிற்கும் காரை மக்கள் பலர் சென்று உத்தியோகங்களில் அமர்ந்திருந்தனர். இப்படியாக அனைத்து இடங்களிலும் வாழ்ந்த மக்கள் காரைநகரின் பெயரை விளங்க வைத்தனர்.

அத்தகைய பெருமைக்குரிய காரை மக்கள் கனடாவில் ஒன்றுசேர்ந்து எடுக்கின்ற பெருவிழாவாகவும் ரொறன்ரோ வாழ் அனைத்து தமிழ் மக்களாலும் ஊடகங்களினாலும் பேசப்பட்டு போற்றப்படுகின்ற சிறப்புப்பொருந்திய கலைவிழாவாகவும் காரை வசந்தம் அமையப் பெற்றிருப்பதானது காரைநகர் மக்கள் அனைவரும் பெருமைப்படக்கூடிய செய்தியாகும். இத்தகைய பெருமைக்கு ஆதாரமாக இருந்து வரும் கனடா-காரை கலாச்சார மன்றத்தின் நிர்வாக உறுப்பினர்களையும் தொண்டர்களையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. இங்கு நிலவுகின்ற பல்வேறு அழுத்தங்களிற்கு மத்தியிலும் ஊர்ப்பற்றோடும் அர்ப்பணிப்போடும் செயலாற்றி வருவது என்னை வியக்க வைக்கின்றது. இவர்களது பணி தொடரவும் காரை வசந்தம் என்றும்போல் உன்னதம் பெற்று விளங்கவும் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

டாக்டர் வி. விஜயரத்தினம்

# AAS Customs Services Inc

## Customs Brokerage and Freight Services







**KANA SUNDARAM, CCS**
**(SIVA)**
Certified Customs Specialist

**Tel: 905 785 7319**
**Cell: 416 529 8872**
**Fax: 905 785 8479**
kanasundaram@hotmail.com



**3958 Milkwood Crescent**
**Mississauga, ON, L5N 8H2**



The customer driven solutions of AAS Customs Services will make your cross-border shipping, importing and exporting seamless

காரைநகர் கல்விக்கோட்ட பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



வருடா வருடம் கனடா-காரை கலாச்சார மன்றத்தினால் வெளியிடப்படும் காரைவசந்தம் மலருக்கு வாழ்த்துரை வழங்க சந்தர்ப்பம் தந்த இறைவனைப் போற்றுகின்றேன். இம்மலர் வழமைபோல் சிறப்பாக நறுமணம் பரப்ப இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன். சமய விழுமியங்களையும் தமிழ்ப்பாரம்பரியங்களையும் தமது இருகண்களாக போற்றிப் பேணிவரும் நன்மக்களைக்கொண்ட காரைநகர் பிரதேசத்தில் கல்வியை முன்னெடுக்க காலத்துக்குக் காலம் கல்விமான்களும் தொழிலதிபர்களும் பலபணிகளை ஆற்றி வருகின்றனர். தற்காலத்தில் காரைநகர் அபிவிருத்திச் சபையின் பணி போற்றுவதற்குரியது. இவர்கள் சமூகப்பணி, கல்விப்பணிகளை பல செயற் திட்டங்கள் மூலம் முன்னெடுப்பதை யாவரும் கண்டுமகிழ்வர். தம் பிரதேச மக்களின் மகிழ்ச்சிக்காக தம்மை அர்ப்பணிக்கும் இச்சபையினர் இறை அருள் பெற்றவர்கள். காரைநகர் கல்விக்கோட்டம் கடந்த வருடம் 27.12.2010 அன்று வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. ப.விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் வடமாகாண ஆளுனர் திரு.G.. A. சந்திரசிறி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அந்தக் காலத்திலிருந்து எமது பிரதேசத்துக்குட்பட்ட 10பாடசாலைகளுக்கும் காரைநகர் அபிவிருத்திச்சபையினர் குடிநீர் வழங்கி வருவதுடன் பாடசாலைக்கு அவசியமான வளங்களை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் எமது கோட்ட மட்ட விளையாட்டு நிகழ்வை நடாத்தி நிதியுதவி நல்கிய காரைநகர் அபிவிருத்திச் சபையினர் மாணவரின் திறனை முன்னெடுக்க ஊக்கமளித்துள்ளனர். இவ்வருடம் தரம் 5 புலமைப்பரிசிலுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு பயிற்சிப் பரீட்சைகளை மேற்கொண்டு அந்தப் பரீட்சையில் சித்திபெற்ற முதல் 20 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கியும் ஊக்கப்படுத்தினர். இதன் மூலமாக எமது கல்விக்கோட்டம் தீவகத்திலேயே அதிகூடிய புலமைப்பரிசில் மாணவர்களை சித்தியடைய வைத்த பெருமைக்கு கனடா - காரை கலாச்சார மன்றத்தின் நிதியுதவியும் ஒரு முக்கிய காரணமாகும். இப்பரீட்சை வினாத்தாள்கள் காரைநகர் பிரதேசத்திற்கு மட்டுமல்லாமல் தீவக கல்வி வலயம் முழுவதற்கும் வழங்கியமை பெருமைக்குரியது. இச் செயற்பாட்டின் வெளிப்பாட்டை பரீட்சை பெறுபேறின் மூலம் அறிந்து கொள்ளமுடியும். ஆதலால் இச்சிறப்பான பணிகளைச் செய்துவரும் கனடா-காரை கலாச்சார மன்றத்தினர் இறையருள் பெற்று அருளுடன் மேலும் அவர்களது பணி தொடர வாழ்த்துகிறேன்.

பு. ஸ்ரீவிக்கினேஸ்வரன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்

# குடும்பப் பல் வைத்தியர்

## அவசர பல் சிகிச்சை நிலையம்



- முரசு கரைதலை நிறுத்துதல்
- பல் வேர்களை அடைத்தல்
- அழகுபடுத்தும் பல் சிகிச்சை
- முதியோர் பல் பராமரிப்பு
- கிளிப் போடுதல்
- பற்களை வெண்மையாக்கல்
- ஞானப்பல் எடுத்தல்
- கட்டுப்பற்கள்
- நிரந்தரமான செயற்கைப்பற்கள்
- பவுண்பல் கட்டுதல்
- குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
- வாய் துர்நாற்றம் அகற்றல்
- பல்அடைத்தல்
- IMPLANT

பிரபல பல் வைத்திய நிபுணர் :

**DR. ஆதிகணபதி சோமசுந்தரம்**

**416-750-9969**

**2191 Warden Ave.(Warden & Sheppard)**

**OPEN 7 DAYS A WEEK**





# ஸ்ரீ வரசித்தி & கோ

அனைத்து பூஜைப்பொருட்களின் களஞ்சியம்

- பூஜைப்பொருட்கள்
- மளிகைப்பொருட்கள்
- சமயப்புத்தகங்கள்
- கர்நாடக Audio CD's / DVD's
- பூக்கள், பூமாலைகள்
- பரதநாட்டிய ஆடை ஆபரணங்கள்
- உங்கள் விழாக்களுக்கான Video & Photo தேவைகளுக்கும்

2950 Kennedy Road, Unit 10A, Scarborough
(Between Finch & McNicoll)

Tel: 416-292-0033

Web: www.srivarasiththi.com

"உங்கள் இல்லந்தோறும் இறையருள் பெற..."

# KK ELECTRONICS

Digital Video Production & State-of-the-art Digital Imaging





## FULLY DIGITAL VIDEO DVD PRODUCTION

- Specializing in the Fine Art of Video Production
- DVD Mastering/Authoring
- Media Duplication CD, DVD, Tape, Disk
- Videos Available on DVD
- Overseas-PAL-NTSC-SECAM Transfers
- Custom Packages Available

*We capture memories forever...*
*Simply the best in quality, service & price*
*Satisfied customers since 1985*

tel: 905.472.0877 • 416.566.9776 • 416.566.4139

**www.kkelectronics.ca**



# ANDY AUTO

## Andy Thiruchelvam

**QUALITY PRE-OWNED VEHICLES SALES & SERVICE**

**416-321-1900 Direct:416-419-2300**


**BAD CREDIT, BANKRUPTCY, NEW TO THE COUNTRY, SELF -EMPLOYED?**

**NO PROBLEM - WE FINANCE EVERYONE**


**IF BANKS SAY NO ANDY SAYS YES!!**

**WE SELL ALL MAKES & MODELS**

OVER 18 YEARS CANADIAN SALES EXPERIENCE



**1933 KENNEDY ROAD,**
**SCARBOROUGH, ON. M1P 2C9**
**(SOUTH OF HWY 401)**






# Home Life GTA Realty Inc., Brokerage

தரமான சுற்றாடலில்
உங்கள் முகவரியை தெரிவு செய்திட...
அழையுங்கள்



***Sekhar Kandiah*** ***B.Sc.Eng***
*Sales Representative*

**5215 Finch Ave East, Suit 203, Toronto, Ontario, M1S 0C2**

**Bus: 416-321-6969 Fax: 416-321-6963**

**Cell: 416 918 8079**

**email: s.kandiah@rogers.com**

# யா/யாழ்ற்ரன் கல்லூரி -காரைநகர்
# J/YARLTON COLLEGE - KARAINAGAR

**PRINCIPAL**
**Mr. V. Murugamoorthy, B.Sc.**
**Dip. in Edu., Dip. in Sch. Mgt., SLPS I**
T.P No: 0213215357
Fax No: 0213215357



புறப்பற்று மகப்பற்றும் விட்டுமும்மைப்
புரமெரித்தான் பூங்க ழல்கள்
உறப்புகலாய் நின்றவராந் தூர்வாச
வரவோனு மும்ப ரேத்துஞ்
சிறப்பமைந்த வகத்தியனு மாண்டியெனுஞ்
சிவமுனியுந் தேடிப் போந்தே
அறப்பெரிய தவமாற்றி வீடுற்ற
தலப்பெருமை யுடைய தவ்வூர்

-ஈழத்துச்சிதம்பர புராணம்

என்ற பெருமையுடைய காரைநகர் புலவர்கள், பண்டிதர்கள், வானசாஸ்திரநிபுணர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், மருத்துவர்கள், இசைவல்லுனர்கள் ஆகியோர் வாழ்ந்ததும், தற்போது வாழ்ந்தும் வருகின்றதுமான தொல்லூர்.

ஒரு பிள்ளை தனது பெற்றதாய் மீது எவ்வளவு பற்றினையுடையதோ அவ்வாறே எமது ஊர் மக்கள் தமது ஊரான காரைநகர் மீது அளவற்ற பற்றுக்கொண்டவர்கள். கடல் கடந்து எந்த நாட்டுக்குச் சென்றாலும் தமது ஊரை நேசித்து அதற்கு அளப்பெரும் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் கனடா காரை கலாச்சார மன்றம் நமது ஊருக்கு பல்வேறு சேவைகளையும் வளங்களையும் வழங்கி வருகிறது. பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலைகள் ஆகியவற்றிற்கான சேவைகளோடு வேறும் பல பொதுப்பணிகளை முன்னெடுத்துச் செய்கிறது.

இம்மன்றத்தின் பணிகள் மேலும் விருத்தியடையவும், அவர்களின் வருடாந்த விழாவான "காரை வசந்தம்" சிறப்பாக அமைந்து கனடா வாழ் எமது ஊர்ச்சிறார்களிடையே இயல், இசை, நாடகம் ஆகியவற்றை வளர்க்கவும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

வே.முருகமூர்த்தி
அதிபர்
யாழ்ற்ரன் கல்லூரி
காரைநகர்




# Scotiabank Residential Mortgages

Whether you're buying or selling a home, or renewing or refinancing your existing mortgage, you can look to my 15 years of banking experience for:

- Expert Advice
- Competitive Rates and
- Innovative Financing Solutions

I am available at a time convenient for your schedule.



## Ask me about...

- The Scotia Free Down Payment™ Mortgage
- The Welcome to Canada Program
- The *Scotia* Total Equity™ Plan
- Refinancing
- Switching to Scotiabank
- Financing for the Self-Employed

Scotiabank has a mortgage plan that will suit your personal needs and meet your financial goals.

**Let's get started. Call today!**

**Sri T.Sridharan, B.Sc., AMP**
Mortgage Development Manager
(Scotiabank Residential Mortgages)
**Tel: 416.953.3297**
**Fax: 416.287-2483**
**E-mail: tharma.sridharan@scotiabank.com**

Scotiabank™

Life. Money. Balance both.™

™ Trademarks of The Bank of Nova Scotia.
All mortgages are subject to certain credit criteria and the home meeting Scotiabank residential property standards. Mortgage plans can be changed or withdrawn at any time without notice.

# யா / சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்
# காரைநகர்
# J/ Sundaramoorthi Nayanar Vidyalayam
# Karainagar

## சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபரின்
# வாழ்த்து



எமது ஊரில் இருந்து புலம் பெயர்ந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் வாழ்ந்து கொண்டிருக்கின்ற போதும்
"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

என்பதற்கொப்ப தாய்மண்ணையும், உறவுகளையும் மறவாது தங்கள் மன்றத்தினூடாக தாங்கள் ஆற்றி வருகின்ற பணிகளுள் கல்விக்காக ஆற்றுகின்ற பணி மகத்தானதும் போற்றுதற்குரியதுமாகும். சமூகத்தின் முன்னேற்றத்திற்கு சமூக அங்கத்தவர்களின் கல்வி அறிவு முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். அந்த வகையில் இங்குள்ள பாடசாலைகளில் கற்கின்ற தரம் 5 மாணவர்கட்கான பயிற்சிப் பரீட்சைச் செயற் திட்டத்திற்கு நிதியுதவி அளித்ததன் மூலம் பல ஏழைச் சிறார்களின் கல்வித்தர மேம்பாட்டிற்கு உதவியுள்ளமை பலரது பாராட்டையும் பெற்றுள்ளது. இதேபோன்று ஏனைய கல்வித்தர மேம்பாட்டு செயற்திட்டங்களுக்கான தங்களின் காத்திரமான பங்களிப்பு தொடர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

சு. கணேசமூர்த்தி


வாடகைப் பணத்தை சொந்த வீடாக்க
இன்றைய சேமிப்பை நாளைய முதலீடாக்க.....
வீடு வாங்க விற்க
நம்பிக்கையுடன் அழையுங்கள்
HOMELIFE
HomeLife/Future
Realty Inc., Brokerage
Gugarajan Mahathevan
Sales Representative
7 Eastvale Drive #205 Markham , ON L3S 4N8
Tel:(905)201-9977, Fax:(905)201-9229,
Cell:(647)388-7065
Any kind of realestate needs please contact me.

# தொடர்ந்து வீசட்டும் வசந்தம்

## காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வாழ்த்துகிறார்



கனடா - காரை கலாச்சார மன்றத்தின் காரை வசந்தம் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். ஏனெனில் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த பெருமையிருக்க இன்று மன்றம் அமைத்து எமது மண்ணை அபிவிருத்தி செய்துவரும் தங்கள் முயற்சி பாராட்டுக்குரியது.

காரைநகர் பிரதேச சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் காரைநகர் அபிவிருத்திச் சபை நடாத்திய மாணவர் கௌரவிப்பு விழாவிற்கு செல்லும் சர்ந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு புலம்பெயர் எமது அமைப்புக்கள் மேற்கொள்ளும் கல்விசார் மற்றும் இதர அபிவிருத்திகளையும் கல்விமான்கள் பாராட்டிய உரைகள் என்னை வியக்கவைத்தன. தாங்கள் வாழ்ந்த கிராமம் இன்னமும் வளரவேண்டும் என்ற ஆதங்கம் புலம்பெயர் மக்களிடம் இருப்பது கண்கூடாக தெரிகின்றது.

தங்கள் பங்களிப்புக்கு மேலாக உட்நாட்டு அரச,அரச சார்பற்ற நிதிகளைக்கொண்டு காரைநகரை அபிவிருத்தி செய்ய எங்களிற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனைக்கொண்டு எமது கிராமிய உடகட்டுமான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளேன். இவ்வாறு எமது வேலைத்திட்டங்கள் ஒருபுறம் நடைபெறும்வேளை மறுபுறத்தில் உங்கள் பணிகள் விரைவாக அமையும்போது காரைநகர் விரைவாக மேலும் அபிவிருத்தியடையும் என்பது உண்மை.

இன்று லண்டன், கனடா போன்ற காரை அபிவிருத்தி சங்கங்கள் போன்று ஏனைய நாட்டிலுள்ள காரை அமைப்புக்களும் சிறப்பாக சேவையாற்ற முன்வரல் வேண்டும் என்ற கோரிக்கையோடு என்னை இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கும் தகுதியை வழங்கிய கனடா வாழ் காரைநகர் மக்களுக்கும் இந் நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழ்க புலம்பெயர் அமைப்புக்கள்! வளர்க அவர்கள் சேவைகள்!

**வே. ஆனைமுகன்**
தலைவர்,
காரைநகர் பிரதேச சபை,
காரைநகர்.

காரை வசந்தம் சிறப்புற வாழ்த்துக்கள்

*With the best compliments*

*from*

# யசோ சின்னத்துரை

சட்ட நிறுவனம்

**2100 Ellesmere Road, Suite 202**
**(Markham & Ellesmere)**
**Scarborough, ON. M1H 3B7**

**TEL:416-265-3456 FAX: 416-265-2770**

# Heartiest Wishes from Divisional Medical officer, Karainagar



It is a privilege for myself to be appointed as the Head of the institution at the Karainagar Divisional Hospital and I would like to extend my heartiest wishes and appreciation to the Canada-Karai Cultural Association for their continuous support in uplifting the standards of living in the island.

Having said this, I would also like to highlight the services rendered by the society in refurnishing the hospital campus to a very superb level.

I wish them every success and hope the society continues their noble job in developing the island.

Dr. M. Shafraz Majumudeen
SLMC Reg. No: 25662
Divisional Medical Officer
DH, Karainagar

# உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடு, வியாபார நிலையம் வாங்க, விற்க



Direct: 416.918.7346
Bus: 905.305.1600
Fax: 905.305.1609
rajeeiyadurai@yahoo.ca

Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
7240 Woodbine Ave #103, Markham, ON L3R 1A4

## For all your Mortgage Needs!

Residential & Commercial
Purchase & Refinancing
Renewal / Switch
Bankruptcy & Challenged Credit
Solution for Bad Credit



Direct: 416.918.7346
Fax: 866.726.4031
riyadurai@rmabroker.ca

**Rajee Iyadurai**
Agent
Licence No.: M08009269


காரை வசந்தம் 2011
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

## கொழும்பு நடேஸ்வராலயா நுண்கலைக் கல்லூரி இயக்குனர், நாட்டியக்கலாசிகாமணி

## திருமதி மாலதி சிவகுமார்

## வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



"திக்கெட்டும் தமிழ் முழக்கம் செய்வோம்" எனும் எட்டயபுரத்துப் புலவர் சொற்படி தமிழர் தம் கலைகளை வளர்த்து, அதன்மூலம் காரைவாழ் மக்களுக்குப் பற்பல சேவைகளாற்றி வரும் கனடா-காரை கலாச்சார மன்றம் தனது 11வது கலைவிழாவினைக் கொண்டாடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழாவில் வெளியிடவுள்ள "காரை வசந்தம்" எனும் சிறப்புமலர் பற்றியும் பெருமைப்படுகிறேன்.


இயல், இசை, நாடகம் என உலகளாவிய முத்தமிழுக்கு வருடாவருடம் எடுக்கும் விழா பாராட்டுதற்குரியது. இக்கலாச்சாரமன்றம் மேன்லும் பல நல்ல கைங்கரியங்களைக் காரைமண் வாழ் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் செய்ய வேண்டும். அதன் சேவை மேன்மேலும் வளர எனது அன்பும் ஆசிகளும் உரித்தாகுக.

காரை. திருமதி மாலதி சிவகுமார்

முன்னாள் அதிபரும் முன்னாள் பரீட்சைத் திணைக்களத்தின் பரதநாட்டியத்திற்கான பிரதம பரீட்சகரும்,

# வீட்டுக்கு ஒரு பனை வளர்ப்போம்

இணையதள வானொலி ஒலிபரப்புகளை
உலகம் எங்கும் கேட்டு மகிழ்ந்திட
இன்றிலிருந்தே உங்களோடு இணைந்திருக்கட்டும்
மணியின் பல்மேறா இணைய வானொலிப் பெட்டி.



- Mani Digital Wireless internet radio
- LCD display
- Listen to 10,000 radio stations from around the world
- Select stations by county or musical genre or by favorite
- Works with any wireless internet connection (802.11b and 802.11g compatible)
- Supports MP3, real audio, windows media audio, AAC and OGG format playbacks
- With USB host port
- Time and date display
- With clock and alarm functions
- 5 presets for favorite stations
- Full function IR remote control
- Also can be used as media player

MANI
a life style

**Mani National Corporation**
**416-570-1990**
www.maninational.com

உங்கள் அபிமான வானொலி
நிலையங்களிலும், தமிழ் வணிக
நிலையங்களிலும் கிடைக்கிறது.

உள்ளூரக்
கள்ளூறும் இனி...

# உலகம் வாழ் காரை மக்களுடன் ஒரு நிமிடம் .....

""விண்ணிலே பறந்தாலும் மண்ணிலே ஒரு கண்வை""



என்ற வாசகத்திற்கு இணங்க , இன்று கனடா வாழ் காரை மக்கள், கனடா - காரை கலாச்சார மன்றத்தினூடாக இதனை நிறைவேற்றி வருகின்றார்கள் என்றால் அது மிகையாகாது. இன்று தனது 11வது இதழை விரித்து புன்னகை பூக்கும் ""காரை வசந்தம் "" எனும் பூவிற்கு எனது இனிய வாழ்த்துக்களை பிரித்தானிய காரை நலன் புரிச் சங்கத்தின் சார்பில் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி.

கல்வி, கலை, கலாச்சாரம், பொருளாதாரம், இயற்கை எழில் இன்றும் பூத்து குலுங்கும் எங்கள் காரை மண்ணில் அவதரித்து ஒரு கூட்டு கிளிகளாக வாழ்ந்திருந்த நாம் நாட்டின் பலபல காரணங்களால் சிறகு விரித்து பறக்க வேண்டிய சூழ்நிலை...........இருந்தும் விடவில்லை எங்கள் சொந்தங்களை......சென்றோம்.......கண்டோம்......களித்தோம்........என்று இருக்காமல் இன்றும் எங்கள் ஊரில் உள்ள சொந்தங்களை எங்களால் முடிந்தளவு கல்வி, மருத்துவம், சமையம், சுற்றுச் சூழல் என்று பல துறைகளிலும் நீங்கள் எங்களுடன் சேர்ந்து ஆற்றி வரும் சேவை அளவற்றது. இச் சேவை மேன்மேலும் வேறுபல எம்மவர் நலன்களுக்காக, இனிவரும் காலங்களிலும் நீங்கள் முனைப்புடன் செயல்பட பிருத்தானிய காரை நலன் புரிச் சங்கம் ஒற்றுமையுடன் தங்களுடன் செயல்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

1960 தொடக்கம் - 1990 வரை உள்ள காலப்பகுதியில் எங்கள் ஊரில் இருந்த சூழலே வேறு..........அப்போ ஊரில் உள்ள எந்த கோவில்களாக இருந்தாலும் சரி, திருவிழாக் காலங்களில் பகல் நேர பூசை முடிந்து விட்டால் எம்மவர்களிடையே உள்ள பேச்சு என்னவென்றால் ""அப்ப என்னவாம் இண்டைக்கு இரவு விசேடம்....

சின்ன மேளமோ, பெரிய மேளமோ,சின்ன மணி வில்லிசையோ ....... அல்லது வெடி அரசன் நாடகமோ"" என்று அந்த காலங்கள் களை கட்டி நிற்கும்.....அங்கே அப்பொழுது இருந்தது எங்கள் கட்டமைப்பு, அன்பு, பக்தி, பாசம் எல்லாம்....

பாடசாலைகளை எடுத்துக் கொண்டால், உதாரணத்திற்கு காரை இந்துக் கல்லூரியில்........ வித்துவான் மாஸ்டர் என்றால்.......அவரது வைட் அண்ட் வைட் (white &white ) எங்கள் கண்களில் இன்னும் பொறி தட்டும். அவர் என்றுமே கலர் அணிந்ததை கண்டதில்லை நான். அன்றைய காலங்களில் எங்களை வெள்ளிக்கிழமைகளில் அதிகாலை தோறும் ஈழத்து சிதம்பரம் கூட்டிச் சென்று சரியை தொண்டு செய்ய வேண்டும் என்று சிரமதான முறையை ஊக்கப்படுத்தியவர் அவர். உதாரணமாக உள்வீதி கழுவுதல், இரண்டாம் வீதியில் புல் செருக்குதல், மூன்றாம் வீதியில் கோமியம் சுத்தம் செய்தல்.......இதன் போது நாங்கள் செய்யும் குறளிக் கூத்து இப்போ நினைத்தாலும்..........!!!!!! தேன் வந்து பாயுதென் உள்ளத்திலே ....

எல்லாவற்றையும் விடுங்கள் அப்போ வாரிவளவு நல்லியக்க சபை என்றால் அது வேறு ஒரு தனிக் கொண்டாட்டம்........பட்டு மாமாவை நினைவு கூராமல் இருக்க முடியவில்லை........

இவ்வாறு கூறிக்கொண்டு போனால் எங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் நாங்கள் இன்னும் பல இனிய மறக்க முடியாத சம்பவங்களை, மனிதர்களை இதன் மூலம் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம், காரணம் எமது மண்ணின் வாசமது. எனது கடந்த மாத ஊர் விஜயத்தின்போது நான் சுமந்து சென்ற கனவுகளை, கற்பனைகளை, ஆசைகளை கிரோஷிமா அமைதிப் பிரகடன கவிதைகள் மூலம்.........உங்களுடன்.... பகிர்ந்துகொள்ள விருப்புகின்றேன்..

நாங்கள் கடந்து வந்த துயரங்கள் ஆயிரம் ஆயிரம்...
நாங்கள் மறக்க நினைத்த கொடுமைகள் கோடானுகோடி ...
இயற்கை படைத்த வனப்புகளை எல்லாம் ஒரு நொடியில் ...
பாலைவனமாகிப்போன நெடிய துயரத்தின்
நிழல்கள் கூட இனி எங்களை தீண்ட வேண்டாம்
ஊருக்கு சென்ற உலகத் தலைவர்களே
எங்கள் நினைவை அனைவர்க்கும் சொல்லுங்கள்
கனவை அல்ல கனவு பயத்தை சொல்லுங்கள்

நாளையே கூட இன்னொரு நன்மையோ தீமையோ......நடக்கலாம்
என்று கனவில் கூட அடிக்கடி திடுக்கிட்டு எழுகின்றோம்
அன்பு நெஞ்சங்களே உங்கள் குழந்தைகளுக்கு
நல்ல வருங்காலத்தை விட்டுச் செல்லுங்கள்
இறைவனே, நடைப்பிணமாகி வாழும் துயரம்
எங்களோடு தொலையட்டும்..

இனியாவது நாம் மனிதநேயத்துடன்.....
கொஞ்சம் கொடுப்போம் ......
விட்டுக்கொடுப்போம் .............
அன்பை கொடுப்போம்.....
அரவணைப்பை கொடுப்போம்......
ஆதரவைக் கொடுப்போம்....
இவ்வளவும் தான் முடியாவிட்டாலும் .......... கொஞ்சம் அள்ளிக்கொடுப்போம்......

வாழ்க வையகம்.. வாழ்க வளமுடன்.

நன்றி.
வணக்கம்.

தலைவர்.
ப. தவராஜா
பிருத்தானிய காரை நலன் புரிச் சங்கம்.




ROGERS MOTORS

*Service & Repairs*

*Rajah*
Class Lic. Automotive Master Technician

45 Munham Gate, Unit #7
Scarborough, ON. M1P 2B3

Tel: 416 755 1846
Fax: 416 755 9476

# காரை வசந்தம் – 2011 மற்றுமொரு வெற்றி விழாவாக அமையட்டும்



வளர்ந்து வரும் கலைஞர்களின் கலைப் படைப்புக்களை மேடையேற்றுவதுடன் எமது ஊர் மக்களை ஒன்று கூட வைக்கும் 'காரை வசந்தம் - 2011' கலைவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்துச் சிதம்பரத் திருத்தொண்டர் சங்கம் - கனடா என்று கனடாவில் வாழ்ந்த சைவப்பற்றும் ஊர்ப்பற்றும் கொண்ட காரை அன்பர்களினால் இந்த மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பெயர் மாற்றம் பெற்று கனடா – காரை கலாச்சார மன்றம் என்ற பெயரில் இயங்கிவருகின்றது. ஆரம்பத்தில் இருந்து அடுத்தடுத்து வரும் ஒவ்வொரு நிர்வாகசபை உறுப்பினர்களும் மன்றத்தின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு மன்றத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்திச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில் 'காரை வசந்தம் - 2011' மற்றுமொரு வெற்றி விழாவாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இவ்விழா மிகச் சிறப்பாக நடந்தேறுவதோடு கனடா – காரை கலாச்சார மன்றத்தின் பணிகள் மேலும் சிறப்புற வேண்டும் என எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்துறை சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசுவரப் பெருமானை வேண்டுகின்றேன்.

மனம் நிறைந்த வாழ்த்துக்களுடன்

**அருணாசலம் கருணாகரன்**
கனடா - காரை கலாச்சார மன்றத்தின் முன்னாள் தலைவர்
முன்னாள் திட்டமிடல் போசகர் சபை உறுப்பினர்.


With the best compliments from
Abina's Textiles
அபினாஸ் ரெக்ஸ்டைல்ஸ்
BRAMPTON
We have a large selection of ready - made
Party & Casual Wear
105 Kennedy Road South, Unit#9 Brampton, ON L6W 3G2
Tel:905-459-4900 Fax:905-459-4909
e-mail: abinastex@hotmail.com Web:abinastextiles.com
by:gtm365.com, 647-706-6611

# தங்கடை எல்லாம் புட்டு

வணக்கம் என் இனிய தாய்க் கிராமத்தின் தமிழ் உறவுகளே!



உலகு தழுவும் ஓர் உறவின் விருட்சமாய், விண் தொட்டெழுந்த எம் மண்ணின் கனடாச் சொந்தங்களே! அந்த மேப்பிள் இலைக் கொடியின் கீழ், என் கிராமத்தின் உறவுகள் மற்றுமோர் ஆண்டில் கூடிக் களிக்கும் நாள் ஒன்றை, இந்த விழாமலர் பதிவு செய்கிறது. அதில் "வாழ்த்து" என்ற பெயரில் என் நினைவுகள்.

மேலே இடப்பட்டிருப்பது "வாழ்த்துச் செய்தி ஒன்றுக்கான தலைப்பு அல்ல", அல்லது "இப்படித் தலைப்பிட்டு வாழ்த்த முடியாது" என்றெல்லாம் உங்களில் பலர் நினைப்பது போலவே நானும் நினைக்கிறேன். ஆனாலும் இன்றே வாழ்த்துச் செய்தி அனுப்புகிறேன் என்று தொலைபேசியில் சொன்னதும், இப்படி ஒரு தலைப்பு மட்டுமே மனதின் எண்ண ஓட்டத்தில் வருகிறது. படைப்பிலக்கியம் தெரிந்தவர்கள் வேண்டுமென்றால் இத்தலைப்பை மிகையதார்த்தவாதமாக கொள்ளட்டும். என் மனதில் இருப்பதை பேனாவோடு இணைத்து வாழ்த்து என்ற பெயரில் இங்கு எழுதி வைக்க, இந்தத் தலைப்பே ஏதோ வகையில் பொருத்தமாய்ப் படுகிறது.

மீண்டும் புட்டுக்குள் வரலாம். பிட்டு என்பதா புட்டு என்பதா என்று பல முறை யோசித்தும் எனக்குச் சரிவரத் தெரியவில்லை. மதுரையில் சிவனுக்கு கொடுத்ததைப் பிட்டு என்கிறார்கள், ஆனாலும் நான் இதைப் 'புட்டு' என்றே சொல்கிறேன். எழுதுகிறபோது யாரும் பிட்டு வைப்பதை விட 'புட்டு' வைப்பதே பொருத்தம். இல்லையா என் தாய்க் கிராமச் சொந்தங்களே!

என்னோடு லண்டனில் பணியாற்றும் சக நண்பன் ஒருவன் அடிக்கடி ஒரு பழமொழியைச் சொல்லுவான். அந்தப் பழமொழியை நான் என் கிராமத்திலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ அல்லது நான் கற்ற சென்னையிலோ கேட்டதில்லை. "தங்கடை எல்லாம் புட்டு, எங்கடை எல்லாம் கழி " இதுதான் பழமொழி. தங்களுக்கானதெல்லாம் அற்புதமும் அர்த்தமுடையதும், பிறருக்கான தெல்லாம் அர்த்தமற்றதும் பயனற்றதும் என்று சொல்ல வருகிறது இந்தப் பழமொழி.

இந்தப் பழமொழிக்கும் வாழ்த்துக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் நினைக்கலாம். இப்படித்தான் எங்கள் உறவுகள் வாழ்கின்றன. இப்படித்தான் நான் உட்பட எங்கள் கிராமம் இருக்கிறது. மிகக் குறிப்பாக, இப்படித்தான் எல்லாப் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள எங்கள் மன்றங்களும் சபைகளும் இருக்கின்றன. புலம்பெயர் உறவுகளின் நேசக் கரத்தைப் பிடித்து தாம் வாழும் கிராமத்தை சரி செய்ய நினைப்பவர்கள் இருக்கிறார்கள். எல்லோருமே தங்களிடம் இருப்பது புட்டு என்றும், மற்றவர்களிடம் இருப்பதெல்லாம் கழி என்றுமே நம்புகிறார்கள். சொல்லப்படுவது தவறு என்பதற்காக அல்ல, இதை ஏற்றுக் கொள்வதால் ஒருவித வெட்கம் வரும் என்பதால், உங்களில் பலர் இதை ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள்.

என் சொந்தங்களே! அவரவர் வீடுகளில் சொந்த சகோதரர்களில் எத்தனை பேர் ஒற்றுமையாக இருக்கிறீர்கள். எத்தனை வீடுகளில் அம்மா, அப்பா, மாமா, மாமி என்ற மிக நெருங்கிய உறவுகள் விரிசலற்ற பாசத்தோடு வாழ்கிறார்கள், எத்தனை வீடுகளில் சொத்துச் சிக்கல் இன்னும் தீராமல் இருக்கிறது. மச்சாளும் மச்சாளும் மோதிக் கொள்ளாமல் இருக்கும் வீடு எது. மாமியைத் தாயாக பார்க்கும் மருமகள்மார் எத்தனைபேர் எம் தாயகத்துக்கு வெளியே மலேசியாவில் தொடங்கி பிரான்ஸ் ஈறாக நாம் எமக்காக தோற்றுவித்த மன்றங்களிலும் சபைகளிலும் எத்தனை மன்றங்களும் சபைகளும் பிச்சல் பிடுங்கல் இல்லாமல் இருக்கின்றன. இப்படியாக மிக நீளமாக வருகிற எல்லாக் கேள்விகளுக்கும், என்னிடம் இருக்கும் ஒரே பதில் நாம் எல்லோரும் மற்றவர்களிடம் கழி இருப்பதாக நம்புகிறோம், அல்லது எம்மிடம் இருப்பதெல்லாம் புட்டு என்று நம்புகிறோம்.

மனதில் பட்டதையே வாழ்த்தாய் அல்லது எம் வாழ்வாய் இங்கு பதிந்திருக்கிறேன். எல்லாக் குற்றங்களும் பிறர்க்கானதாய் இல்லாமல் எனக்குமானதாய் எண்ணியே இது எழுதப்பட்டிருக்கிறது. யாருக்கேனும் இதில்

கோபம் இருந்தால், முதலில் மன்னிப்புக்கள். உங்களில் யாரேனும் இப்படி ஒரு வாழ்த்துக்காக என்னை மன்னிக்க நினைப்பீர்களானால், தவிர்க்க முடியாமல் நானும் எனக்கு மூத்த ஒரு தமிழனை மன்னிக்க வேண்டி இருக்கிறது. அவன் பெயர் கணியன். பிறந்த ஊர் இன்றைய தமிழ் நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் மகிபாலன் பட்டி என அறியப்படும், அன்றைய பூங்குன்றம், மதம்- ஆசீவகம்,. அந்த மூத்த தமிழனையும் மன்னிக்க வேண்டும். அவனின் கவிதையே நான் சொல்ல வந்த விடயத்தின் ஆதார சுருதி.வெறும் பதின்மூன்று வரிகளால் இரண்டாயிரத்து ஐன்னூறு ஆண்டுகள் கழிந்தும் எம்மோடு வாழ்கிற கணியன் பூங்குன்றனார்!!

யாதும் ஊரே ' யாவரும் கேளிர் '
தீதும் நன்றும் பிறர்தர வாரா '
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன '
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்,
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

-புறநானூறு - பாடல்192

இன்றைய தமிழில்
எல்லா ஊரும் எம் ஊர்
எல்லா மக்களும் எம் உறவினர்
நன்மை தீமை அடுத்தவரால் வருவதில்லை
துன்பமும் ஆறுதலும்கூட மற்றவர் தருவதில்லை
சாதல் புதுமை யில்லை வாழ்தல்
இன்பமென்று மகிழ்ந்தது இல்லை
வெறுத்து வாழ்வு துன்பமென ஒதுங்கியதுமில்லை
பேராற்று நீர்வழி ஓடும் தெப்பம்போல
இயற்கைவழி நடக்கும் உயிர்வாழ்வென்று
தக்கோர் ஊட்டிய அறிவால் தெளிந்தோம்
ஆதலினால்
பிறந்து வாழ்வோரில்
சிறியோரை இகழ்ந்து தூற்றியதும் இல்லை
பெரியோரை வியந்து போற்றியதும் இல்லை

-English Translation in Tamil Heroic Poems

"To us all towns are one all men our kin.
Life's good comes not from others' gift nor ill
Man's pains and pains' relief are from within.
Death's no new thing; nor do our bosoms thrill
When Joyous life seems like a luscious draught.
When grieved we patient suffer; for we deem
This much - praised life of ours a fragile raft
Borne down the waters of some mountain stream

That o'er huge boulders roaring seeks the plain
Tho' storms with lightnings' flash from darken'd skies
Descend the raft goes on as fates ordain.
Thus have we seen in visions of the wise! -
We marvel not at greatness of the great;
Still less despise we men of low estate."

- By Rev. G.U.Pope

என்றும் உங்கள் அன்பின்,

**இளையதம்பி தயானந்தா**

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இளையதம்பி தயானந்தாவின் தமிழ்ப் புலமை செழிப்பானது. மரபு இலக்கியத்தோடு நவீன இலக்கியத்தையும் நன்கு அறிந்து வைத்திருப்பவர். யாப்பிலக்கணத்தை அறிந்தவர். இவர் நடாத்தும் கவிதை அரங்குகள் கச்சிதமாக இருக்கும். அறிஞர்களையும், கலைஞர்களையும் வானொலியில் செவ்வி காணும்போது செவ்வி கொடுப்பவரை திக்குமுக்காடவைத்துவிடுவார். அப்படியாக வானொலிப் பேட்டிகளுக்கு புதிய வடிவம் கொடுத்தவர். கொழும்பு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்களில் ஊடகத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் இதழியல்துறை, பொருளியல்துறை ஆகியவற்றில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். தற்போது லண்டனில் வசித்து வரும் பல்துறை ஆளுமை கொண்ட இவர் IBC வானொலிக்கலைஞராக பணியாற்றிவருகின்றா






Special Care For Nervous Drivers

Driving For All Ages

Discount Certificate for car Ins (With full course)

Early Road Test Arrangements

Defensive Driving Course (C.S.C)

Individual Lessons are also Available

# SAABI DRIVING SCHOOL

**M.T.O. Approved Beginner Driver Edu. Course Provider**

## A. A. KANDASAMY

41 Densgrove Rd. Scarborough, Ont. M1G 2A2

**Res: 416 431 0832** **Cell: 416 569 1421**

**Tel: 416 750 0411** **Cell: 416 879 3641**

# காரை வசந்தம் - 2010 சிறப்பிதழில் இடம்பெற்றிருந்த வாழ்த்துச் செய்திகளிலிருந்து எடுக்கப்பட்ட உணர்வுப் பதிவுகளின் தொகுப்பு

காரைநகர் மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு கனடா-காரை கலாச்சார மன்றத்தினால் செயற்படுத்தப்படும் கல்விப்பணிகள் பாராட்டத்தக்கவை.

**- திருமதி விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்**

பிறந்த மண்ணின் பண்பாட்டுடன் பிள்ளைகளை வளர்த்து அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் பணியாற்றிவரும் கனடா - காரை கலாச்சார மன்றம் பாராட்டுக்குரியதாகும்.

**- ப. விக்கினேஸ்வரன், வடமாகாண கல்விப் பணிப்பாளர்**

கனடா-காரை கலாச்சார மன்றம் பல சவால்களை வென்று தொடர்ந்து பத்தாண்டுகளாக காரை வசந்தம் என்கின்ற கலைவிழாவினை வெற்றியுடன் நடாத்தி வருவது காரைநகர் மக்களிற்கு முன்னுதாரணமாகும்.

**- பொன். சிவானந்தராசா, அதிபர், கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலயம்**

மலையில் இட்ட தீபம் போல் தேசமெங்கும் ஒளிபரப்பும் கனடா-காரை கலாச்சார மன்றத்தின் பணிகள் நதிபோல பரவிச் சென்று வளப்படுத்தவும் காரை வசந்தம் இதமாக வீசவும் வாழ்த்துகிறேன்.

**- கே. சுந்தரலிங்கம் அதிபர், வியாவில் சைவ வித்தியாலயம்**

தாய்மண்ணின் நினைவுடன் புலம்பெயர்ந்து வாழும் சேய்கள் முன்னெடுக்கும் இன்னோரன்ன பணிகளிற்கு வேறுபாடுகளைக் களைந்து தோள்கொடுத்து உதவுவதன் மூலம் காரையின் அபிவிருத்தி துரிதப்படும்.

**- இ. த. ஜெயசீலன், உ.அ. அதிபர்**

காரை மாதாவின் செல்வங்கள் கனடாவில் ஒன்றுகூடி எடுக்கும் வசந்தவிழா சிறக்க வாழ்த்துவதுடன் பிறந்த மண்ணின் சிந்தனையுடன் காரை உறவுகளிற்கு உதவி வருகின்ற உயரிய பணிகளைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

**- மகாராணி க. சோமசேகரம் J.P, தலைவர், காரை அபிவிருத்திச் சபை**

காரை மக்களின் தேவைகளை இனம்கண்டு அவற்றிற்கு உதவிவருகின்ற கனடா-காரை கலாச்சார மன்றத்தின் அளப்பரிய பணிகளைப் பாராட்டுவதுடன் காரைவசந்தமும் வெளியிடப்படும் சிறப்பு மலரும் சிறப்புற்று விளங்க வாழ்த்துகிறேன்.

**- மு. காசிப்பிள்ளை, முன்னாள் தலைவர், கனடா-காரை கலாச்சார மன்றம்**

கனடா வாழ் காரை மக்களை ஒன்றிணைத்து உறவாட வைக்கின்ற பணிகளிலும் காரை உறவுகளின் முன்னேற்றப் பாதைக்கு உதவி வருகின்ற பணிகளிலும் ஈடுபட்டு வரும் கனடா-காரை கலாச்சார மன்றத்தினைப் பாராட்டி காரை வசந்தம் வளமோடு வீச வாழ்த்துகிறேன்.

**- வே. இராஜேந்திரம், முன்னாள் தலைவர், கனடா-காரை கலாச்சார மன்றம்**

இடப்பெயர்வினால் சிதைவடைந்த காரை மண் புலம்பெயர் உறவுகளின் உதவியினால் வளம்பெற்று வருவது மகிழ்ச்சியளிக்கிறது. காரை மக்களின் வாழ்வை வசந்தமாக்கும் காரை வசந்தம் சிறக்க வாழ்த்துகிறேன்.

**- கோபால் மயில்வாகனம், முன்னாள் தலைவர், கனடா-காரை கலாச்சார மன்றம்**

காரை உறவுகளின் சமூக, கல்வி மேம்பாட்டிற்கு உதவி வருகின்ற கனடா-காரை கலாச்சார மன்றத்தின் பணிகளைப் பாராட்டி இவ்விழா மேன்மையுறவும் மன்றத்தின் பணிகள் உன்னதம் பெறவும் வாழ்த்துகிறேன்.

**- மு. வேலாயுதபிள்ளை, முன்னாள் திட்டமிடல் போசகர்சபை உறுப்பினரும், இணைப்பாளரும்**

# ஸ்ரீ கற்பக விநாயகர் கிரியாபீடம்



திருமணம், பதிவுத்திருமணம், உட்பட அனைத்து இந்து மத கிரியைகளும், ஆகம விதிமுறைப்படி செய்துகொள்வதுடன் திருமணத்திற்கு வேண்டிய முத்துமணவறை, பூமணவறை போன்ற அனைத்து ஒழுங்குகளும் செய்துகொள்ள நாடுங்கள்.

சிவஸ்ரீ. ஐயம். ஆரிஹரக்குருக்கள் (ஹரி ஐயா)
(உரும்பிராய் - கைதடி)

**905-458-9990**
**416-989-9797**
**647-892-6780**

# கிராமியக் கலைகள்





காரை. செ. சுந்தரம்பிள்ளை

கலை என்பது கருத்தின் உறைவிடமாகவும் அழகின் சிறப்பிடமாகவும் உள்ளது. இன்பம் அதன் பயனாகும். "ஒருவன் முன்பு அனுபவித்த உணர்வைத் தன் உள்ளத்தில் மீண்டும் எழுப்பி அசைவுகள், கோடுகள், வர்ணங்கள், ஒலிகள் அல்லது சொல் வடிவங்கள் மூலம் அந்த உணர்வைப் பிறரும் உணரும்படி செய்ய வேண்டும். இதுவே கலையின் செயலாகும்." என்பர் டால்ஸ்ராய்.

"கலைகள் மனித சமூகத்தின் தொழிற்போக்கில் தோன்றியவை. அதனால் அவை மனித சமூகமயமானவை. இவற்றின் இயல்புகள் மனித சமூக அமைப்பின் பொதுவான தன்மைகளைப் பொறுத்து அமைகின்றன" என்பர் தொம்ஸன்.

"எந்த ஒரு மனிதன் ஒரு கல்லைத் தனக்குப் பயன்படும் ஒரு கருவியாக அமைத்துப் பயன்படுத்த ஆரம்பித்தானோ அந்த மனிதனே உலகின் முதலாவது கலைஞனாவான்" என்பர் ஏர்ணஸ்ட் பிஷர். இவ்வாறு தான் கலைகள் வடிவம் பெறத் தொடங்கின.

கலையில் செயல், பயன், திறமை, அழகு, சுவை என்ற அமிசங்கள் உண்டு. பயன் அமிசம் அதிகப்படுமானால் அது கைவினை என்ற பிரிவில் அடங்கும். அழகு அல்லது முருகியல் அமிசம் அதிகப்டுமானால் அது அழகுக் கலையாக அல்லது நுண்கலையாக வடிவம் பெறுகிறது. இவற்றுள் நுண்கலைகளை இரு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

(அ) செந்நெறிக்கலைகள்

(ஆ) கிராமியக் கலைகள்

கல்வி அறிவு மிக்க நகரப்புற, உயர்மட்ட மக்களாற் பேணப்பட்டு வரும் கலைகள் செந்நெறிக் கலைகளாகும். (Classical Art) படிப்பறிவில்லாப் பாமர, நாட்டுப்புற, கிராமிய மக்களாற் பேணப்பட்டு வருவன கிராமியக் கலைகளாகும். (Folk Art)

இவற்றுள் ஈழத்தமிழ் மக்களுடைய கிராமியக் கலைகள் பற்றி இனி ஆராய்வோம்.

(கிராமியக் கலைகளை இப்பொழுது நாட்டுப்புறக் கலைகள் என்றே குறிப்பிடுகின்றனர்.)

ஈழத் தமிழ் மக்களிடையே பயின்று வந்த, பயின்று வரும் கிராமியக் கலைகளுள் முக்கியமானவையாக கும்மி, கோலாட்டம், வசந்தன், காவடி, கரகம், பொய்க்காலாட்டம்(புருவியாட்டம்), மகிடி, உடுக்கடிக்கதை, நாட்டுக் கூத்து என்பன விளங்குகின்றன. கும்மியாட்டம் பொதுவாக விழாக்காலங்களில் ஆடப்படுகின்றது. ஆண்களோ பெண்களோ வட்டமாக வளைந்து நின்று பாட்டுப்பாடிக்கொண்டு கைகளால் தட்டி ஆடுவது கும்மியாகும். ஆண்களை விடப் பெண்களே இதில் அதிகமாக ஈடுபடுகின்றனர். ஆண்கள் மட்டும் ஆடும்கும்மியை ஒயில் கும்மியென்றும் பெண்கள் ஆடும் கும்மியை வெறுமனே கும்மியென்றும் அழைப்பர்.

கைகளில் சிறிய கோல்களை வைத்துக்கொண்டு பாடியாடும் ஆட்டமே கோலாட்டமாகும். பாடப்படும் பாடல்களின் ஓசைக்கும் பக்கவாத்தியங்களின் ஓசைக்கும் ஏற்றபடி ஆடிய வண்ணம் தங்கள் இரு கைகளிலும் உள்ள கோல்களை ஒன்றோடு ஒன்று தட்டி ஒலி எழுப்புவர். மாறிமாறி ஆடும்போது ஒருவர் கையில் உள்ள கோலால் மற்றவருடைய கையில் உள்ள கோலைத் தட்டி ஒலி எழுப்பி ஆடிப்பாடுல் இன்னோர் சிறப்பம்சமாகும். கும்மியிற் கையாற் தட்டித்தாளம் போடுவதை இங்கே கோலால் தட்டிப் போடுகின்றனர். கும்மி, கோலாட்டம் என்பவற்றுக்கென தனிப்பட்ட மெட்டிலமைந்த கிராமிய இசைப்பாடல்கள் உண்டு.

இற்றைக்கு நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கும்மி, கோலாட்டம் என்பன ஈழத்தமிழ் மக்களிடையே பண்டிகைகளின்போது பரவலாக ஆடப்பட்டு வந்தன. வருடப்பிறப்பு, தீபாவளி, நவராத்திரி, ஆகிய தினங்களில் வீடு வீடாகச் சென்று கும்மி, கோலாட்டம் என்பவற்றை ஆடி மகிழ்ந்து வரும் மரபு இருந்தது. இப்பொழுது இம் மரபு அற்றுப் போனாலும் இவ்வடிவங்கள் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

வசந்தனாட்டம் யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் பரவலாக ஆடப்பட்டு வந்தது. வானம் பொய்க்கும்போது இந்த ஆட்டம் நிகழ்த்தப்பட்டது. இது ஓரளவு கோலாட்டத்தை ஒத்தபோதும் பலவகையான ஆடல் முறைமைகளைக் கொண்டது. கட்டுவன் எனும் ஊரில் வீரபத்திரர் வசந்தனும் **காரைநகரில்** அம்மன் வசந்தனும் அண்மைக்காலம் வரை ஆடப்பட்டுவந்தன.

மட்டக்களப்பில் ஆடப்படும் வசந்தனுக்கும், யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் வசந்தனுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. யாழ்ப்பாணத்து வசந்தன் கதை தழுவாத கூத்து மரபை ஒட்டியது. தெய்வத்தை வாழ்த்துதல்-வேண்டுதல் என்பனவே முக்கியமாக இதில் இடம்பெறும். மட்டக்களப்பு வசந்தனில் வசந்தராசன் கொலு, வசந்தராசன்-வாசல், கட்டியக்காரன் வரவு ஆகிய நாட்டுக்கூத்து அம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

காவடி, கரகம் ஆகிய ஆட்டங்கள் சமயத்தொடர்பு உடையவை. நேர்த்திக் கடனுக்காகத் தமிழ் மக்களால் ஆடப்பட்டுவரும் கலைவடிவங்களாகும். எனினும் பாடசாலை விழாக்களிலும் கலைவிழாக்களிலும் சமயத் தொடர்பின்றி ஆடப்படும கலையாகவும் இப்பொழுது இடம்பிடித்துவிட்டது. காவடி ஆட்டத்தின் நோக்கம், அமைப்பு, ஆட்டமுறைமை என்பவற்றைக்கொண்டு இதனைப் பல பெயரிட்டு அழைப்பர். அவையாவன: அன்னக்காவடி, பாற்காவடி, பன்னீர்க்காவடி, பறவைக்காவடி.

ஒரு காலத்தில் பொய்க்காற் குதிரையாட்டமும் ஈழத்தில் பரவலாக ஆடப்பட்டு வந்தது. சொந்தக் காலினால் ஆடாமல் மரத்தினால் செய்யப்பட்ட பொய்க்கால்களின் மேல் நின்று ஆடுகின்ற காரணத்தால் இது பொய்க்காலாட்டம் எனவும் பெரிய பொம்மைக் குதிரையைத் தோளில் மாட்டி குதிரைச் சவாரி செய்வதுபோல ஆடுகிற காரணத்தால் புரவியாட்டம் எனவும் இது பெயர் பெறுகின்றது. பொய்க்காற் குதிரையாட்டத்திற்குப் பெயர் பெற்ற ஊர்களாக அரியாலை, வட்டுக்கோட்டை, கள்ளியங்காடு ஆகிய இடங்கள் விளங்கின. இப்பொழுது மலையகத்தில் மட்டும் இரண்டொரு கலைஞர்கள் உள்ளனர்.

பொம்மலாட்டத்தைப் பாவைக்கூத்து, பாவைநாடகம் என்றும் கூறுவர். பாவைக்கூத்தைத் தோற்பாவைக்கூத்து, மரப்பாவைக்கூத்து எனவும் இருவகையாக அமைத்துக் காண்பித்தனர்.
பொம்மைகளை நடிகர்களாகக் கொண்ட நாடகமே பொம்மலாட்டமாகும். சூத்திரதாரிகள் பொம்மைகளை மறைந்து நின்று இயக்குவதோடு மறைந்திருக்கும் இருவரோ, மூவரோ உரையாடல்களையும் பாடல்களையும் பேசிப்பாடுவதன் மூலம் நாடகம் ஒன்றைப் பார்க்கின்ற உணர்வினை ஏற்படுத்துவர். ஒரு காலத்தில் ஈழத்தமிழ் மக்களிடையே உயிர்த்துடிப்புடன் வாழ்ந்து கொண்டிருந்த பொம்மலாட்டக்கலை இன்று முற்றாக மறைந்துவிட்டது.

ஈழத்தமிழ் மக்களுடைய கிராமியக்கலை வடிவங்களுள் ஒன்றாக மகிடிக்கூத்து உள்ளது. யாழ்ப்பாணம்-முல்லைத்தீவு ஆகிய இடங்களில் வாழ்ந்த இக்கலை இப்பொழுது மட்டக்களப்பில் மட்டும் ஆடப்பட்டு வருகின்றது. மந்திர தந்திரம் நிறைந்த இக்கூத்து வடிவம் புலம் பெயர் ஐதீகத்துடன் தொடர்புடையதாகும். உடுக்கடிக்கதை தமிழ் மக்களுடைய முக்கியமான கிராமியக் கலையாக அண்மைக்காலம் வரை விளங்கி வந்திருக்கின்றது. கோவில் திருவிழாக்களின்போதும், பண்டிகைகளின் போதும் ஏனைய கொண்டாட்டங்களின் போதும் உடுக்கடிக் கதை நிகழ்ச்சிகள் இடம்பெற்று வந்தன. கலைஞர் ஒருவர் உடுக்கடித்துக் கதைகூறும் மரபில் இருந்தே காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து என்பன வடிவம் பெற்றன என்பர்.

கிராமியக்கலைகளுள் சிறப்பான வடிவமாக இன்றும் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருப்பது நாட்டுக் கூத்தாகும். இது யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இப்பொழுதும் ஆடப்பட்டு வருகின்றது. இக்கூத்துள் வடமோடி, தென்மோடி, வடப்பாங்கு, தென்பாங்கு, காத்தவராயன் கூத்து எனப் பல வகைகள் அடங்கும். சிங்கள மக்களிடையே காணப்படும் "நாடகம" எனும் கூத்து வடிவம் தமிழ் மக்களிடம் இருந்து பெறப்பட்ட நாட்டுக்கூத்து வடிவமேயாகும்.

மன்னாரில் 'வாசாப்பு', 'வசனவாசாப்பு' எனும் கூத்து வடிவங்களும் உண்டு. இவை குறைந்த பாத்திரங்களைக் கொண்ட சிறிய கூத்து வடிவங்களாகும். மலையகத்தில் மிகவும் பிரபலமான கிராமியக் கலைவடிவமாக 'காமன் கூத்து' உள்ளது. இது தவிர 'பொன்னர் சங்கர்' 'அருச்சுனன் தபசு' ஆகிய கிராமியக் கூத்துக்களும், மேலே குறிப்பிட்ட காவடி, கரகம், கும்மி, கோலாட்டம் ஆகிய கலைவடிவங்களும் இன்று உள்ளன.

கிராமியக்கலை வடிவங்களுக்கும், செந்நெறிக் கலைவடிவங்களுக்கும் ஓரளவு ஒற்றுமை இருப்பது போலத் தோன்றினும் வேறுபாடுகளே அதிகமாகும்.

நாட்டுப்புறக் கலைகள் தொழிற்சார்பு உடையவை. அடி நிலை மக்களுடையவை. ஆடுவோரும் பார்ப்போரும் நுகர்வோரும் ஒத்த தன்மையுடைய பாமர மக்களாவர். இவர்கள் தங்களுடைய ஆத்ம திருப்திக்காக நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஆடிப்பாடி மகிழ் கின்றனர். செந்நெறிக் கலைகள் தொழிற்சார்பற்றவை. உயர் மட்டமக்களுடையவை.

கிராமியக் கலைகள் குறிப்பிட்ட கிராமங்களுக்கு அல்லது பிரதேசங்களுக்கு மட்டுமுரிய சிறப்பியல் புகளைக் கொண்டிருக்கம். (உ-ம்: வடமோடி, தென்மோடி முதலியன) செந்நெறிக்கலைகள் இவற்றைக் கடந்து அனைத்துப் பிரதேசங்களுக்கும் உரியவையாக

விளங்கும். (உ-ம்: பரதநாட்டியம்) கிராமியக் கலைகளை நிகழ்த்துவோர் தொழிலாளர்களும் பாமர மக்களுமாவர். தொழில் முறைக்கலைஞர்கள் (Professionals) இவர்களிடையே கிடையாது. செந்நெறிக்கலைகளை நிகழ்த்துவோர் பெரும்பாலும் தொழில்முறைக் கலைஞர்களாகவே இருப்பர்.

கிராமியக் கலைகளில் யதார்த்தம் வெளிப்படும். இம்மக்களுடைய மனோபாவம் வாழ்க்கையுடன் தொடர்புடையனவாக முரண்பாடின்றிக் காணப்படும். ஆனால் செந்நெறிக்கலைஞர்களுடைய மனோபாவம் இவ்வாறு அமைவதில்லை.

கிராமியக் கலைகள் சமகாலச் சமுதாயத்தைப் படம்பிடித்துக்காட்டும் காலக் கண்ணாடியாகவே பெரிதும் விளங்கும். இவை சமூக விழாக்களாகவே இடம்பெறும். இவ் இயல்பு செந்நெறிக்கலைகளில் குறைவானதாகவே இருக்கும். கிராமியக்கலைகள் கட்டுப்பாடற்று மதர்த்து வளரும் குளத்தங்கரைச் செடிகொடிகளை ஒத்தவை. பூந்தோட்டத்தில் நீரூற்றி, கத்தரித்தும் வெட்டியும் செம்மைப்படுத்தப்பட்டு வளர்க்கப்படும் செடிகொடிகளை ஒத்தவை செந்நெறிக்கலைகள். இரண்டும் அழகுடையவேயாயினும் இயற்கை அழகை கிராமியக் கலைகளில் தான் காணமுடியும். இவ்வழகினைப் பொழிந்து வரும் இக்கலைவடிவங்களைப் பேணிவரும் கடப்பாடு ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு என்பதை ஈழத்தமிழ் மக்கள் நெஞ்சில் நிறுத்துதல் வேண்டும்.

நன்றி: noolaham.org
மூலம்: கலைமுகம் 1991

---

கட்டுரையில் குறிப்பிட்ட வசந்தன் கூத்து என்கின்ற கிராமியக் கலையானது இன்றும் வாழ்ந்து கொண்டுள்ள பெருமைக்குரிய காரைநகரின் களபூமி (காளிகோவிலடி) என்ற குறிச்சிக்கு நேரடியாக சென்றிருந்த முயசயயையெபயச.உழஅஇணையத்தளத்தின் நிருபர் சயந்தனால் எழுதப்படட குறிப்பும், சேகரித்து தொகுத்த தகவல்களும்:

பண்டைய கலை, கலாச்சார விழுமியங்கள் தற்காலத்தில் அருகி அழிவடைந்து செல்வதை உணரமுடிகின்றது. அவ்வாறு அழிவதற்கு உள்நாட்டிலேற்பட்டிருந்த யுத்தசூழல் ஒரு முக்கியகாரணம் என்று சொல்வதைவிட இக்காலத்து சமூகத்தின் நவநாகரீக வளர்ச்சி என்ற பெயரில் பண்டைய கலை, கலாச்சாரங்கள் புறம்தள்ளப்படுகிறது என்பதே உண்மையானதாகும்.

காரைநகரில் முப்பதாண்டுகளிற்கு முன்னர் காத்தவராயன் கூத்து, வசந்தன்கூத்து, பூதத்தம்பி நாடகம், சிந்துநடைக்கூத்து போன்றவற்றுடன் பறை, உடுக்கு, ஒப்பாரி என்பன பிரபல்யம் பெற்றுக் காணப்பட்டன. இன்று அவை வெகுவாக அருகி வந்துகொண்டுள்ளன. அந்தவகையில் மறைந்துசெல்லும் வசந்தன்கூத்து தொடர்பாக அக்கூத்தினை பாடி, அடிக்கும் களபூமி காளிகோயிலடியைச் சேர்ந்த பிரபல ஆசாரியார் திரு. து. திருநாவுக்கரசுடன் நேரடியாக கலந்துரையாடினேன். அதன்போது விளக்கமாக வசந்தன் கூத்துபற்றிய கதைகளைக் கூறினார்.

பன்னை மரக்கம்புகள் ஒருசாண் அளவில் வெட்டப்பட்டு எட்டு நாட்களிற்கு காளிகோவில் பூசையில் வைத்து வழிபட்டு இக்கூத்தினை இளைஞர்களிற்கு பயிற்றுவிப்போம். எட்டாவது நாள் விசேட பூசை வழிபாட்டுடன் முதியவர்கள் வசந்தன் பாட்டுபாட இளைஞர்கள் வசந்தன் கம்பமாடிக்கொண்டு களபூமி கண்ணகி அம்மன் (மாதாவின் கோவில்) கோவிலிற்கு செல்வோம். அங்கு பெரிய அளவில் பொங்கல் பொங்கி மடையும் பரப்பப்படும். அங்கும் விசேட பூசைகளுடன் வசந்தன் கம்பாடப்படும். பாடும்போதும் உடுக்கடிக்கும்போதும் வயோதிபப் பெண்கள் உள்ளம் உருகி ஒப்புப்பாடி அழுவார்கள். அப்போது எவ்விதமான அருங்கோடையாயினும் மேகம் கறுத்து மழை பெய்யும். இந்த உறுதியான நம்பிக்கை ஒருபோதும் பொய்க்கவே யில்லை. இன்று வயதான பெண்கள் உருகிப்பாடி அழுவதும் இல்லை. இதனால் இயற்கையும் சீற்றம் அடைய காரணமாகின்றது என்று கவலையுடன் தெரிவித்த திருநாவுக்கரசு வசந்தன் கூத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றையும் பாடிக்காட்டினார். அப்பாடல் வருமாறு:

சொன்ன களப் பன்னைக் கம்பு வெட்டி
சொகுசாகவே சாணளவுக்கரிந்து
வாருமடா இளந் தம்பிமாரே
வண்ண வசந்தனடித்திடுவோம்.

வட்டிக்கொ நெல் வாங்கி தாயே
வயலையல்லோ விதைத்து வைத்தோம்
வயலையல்லோ விதைத்துமல்லோ - தாயே
வளர்ந்த பயிர் சாகுதையோ.


வட்டி வளருதல்லோ - தாயே
வளர்த்த பயிர் சாகுதல்லோ
மாதாவே மழை தாராயோ
மாதாவே மழை தாராயோ

இன்று அருகிவருகின்ற இதுபோன்ற கலைகளை ஊக்குவித்து பாதுகாக்க காரைநகரிலுள்ள சமூக, கலாச்சார அமைப்புக்கள் முன்வரவேண்டும். இது வெறுமனே கலாச்சார பாதுகாப்பு என்பதைவிட இயற்கைச் சமநிலையைப் பேணவும் சமூக

ஒழுக்கநெறியை பின்பற்றி இன்பமாக வாழவும் முடியும் என்பது பண்டையகால நம்பிக்கையாகும். அண்மையில் காரைநகரில் மழைபொய்த்ததைத் தொடர்ந்து வசந்தன் கூத்து நிகழ்ந்தபோது எடுக்கப்பட்ட படம்..







MARKVILLE
TOYOTA
TOYOTA
Markville
Kumar Jegasothy
Product Advisior Sales & Leasing
416 451 0565
MARKVILLE TOYOTA
5362 HWY. #7 (Just East of McCowan Road)
905-294-8100
1-800-828-6585


பாலவிமல நர்த்தனாலயம்
நடன வகுப்புகள்
புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.
ஆர்வமுள்ள மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
மாணவர்கள் பரீட்சைக்கும்,
நிகழ்ச்சிகளுக்கும் தயார் செய்து அனுப்பப்படுவர்.
பரத கலாவித்தகர்
திருமதி. சித்ரா தர்மலிங்கம்
(905) 956 9385
339 Derrydale Drive
McLaughlin Rd & Derry Rd
(416) 459 0766
SSSB Centre
5321 Finch Ave East (Markam and Finch)
Scarborough ON

# 11வது காரை வசந்தத்தை அலங்கரித்த கலைஞர்கள் வரிசையில் இடம்பெற்ற காரை கலைஞர்களின் கலை வரலாற்றுக் குறிப்புக்கள்

**தொகுப்பு: காரைக் கூத்தன்**

## மிருதங்க கலாவித்தகர் ரதிரூபன் பரஞ்சோதி



இன்று கனடாவில் இசை ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்ற முன்னணி மிருதங்க இசைக்கலைஞராக விளங்குகின்ற மிருதங்க கலாவித்தகர் ரதிரூபன் பரஞ்சோதி அவர்கள் இசைக்கலைமணி கே. கண்ணதாசன் அவர்களிடம் மிருதங்க இசையைப் பயின்று கொண்டவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 'A' தர கலைஞராக விளங்கி மிருதங்கம், கடம் ஆகிய வாத்தியங்களை வாசித்து ஈழத்து ரசிகர்கள் மத்தியில் புகழுடன் விளங்கியவர். கனடாவில் பல அரங்கேற்ற அரங்குகளில் இவரது மிருதங்க இசையானது பலத்த வரவேற்பினைப் பெற்று வருவதுடன் புகழ் படைத்த இசைக்கலைஞர்களிற்கு பக்கவாத்தியம் இசைத்துவருகின்ற சிறப்புப் பொருந்தியவர் என்பதுடன் ஈழத்தில் ரூபவாகினி தொலைக்காட்சியிலும் கனடாவில் TVI தொலைக்காட்சியிலும் பல நிகழ்ச்சிகளை நடாத்தி ஆற்றல்மிக்க கலைஞர் என்பதை நிலைநிறுத்தி வருகின்றார். இவருக்கு வடஇலங்கை சங்கீத சபை மிருதங்க கலாவித்தகர் என்ற பட்டம் வழங்கி கௌரவித்திருந்தது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கு கலைப்பயணம் மேற்கொண்டு பல இசை நிகழ்வுகளை நடாத்தி வெற்றியுடன் திரும்பிய இவர் கனடாவில் 'லயபிருந்தம்' நுண்கலைக்கல்லூரியினை ஆரம்பித்து இதனூடாக மிருதங்கம், கடம், கஞ்சிரா மோர்சிங் ஆகிய வாத்தியங்களில் பல கலைஞர்களை உருவாக்கும் கலைப்பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றார். கலைமாணவர்கள் அரங்க அனுபவத்தைப் பெறுவதற்கும் கலைத்திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும் வாய்ப்பளிக்கும் விதத்தில் 'ஆவர்த்தனா' என்கின்ற தொனிப்பொருளில் இசைநிகழ்ச்சிகளை நாடத்தி வரும் இவரது கலைப் பணி இசை ஆர்வலர்களால் பாராட்டப்பட்டு வருகிறது. கனடாவில் கணக்கியல் துறையில் பணியாற்றி வருகின்ற ரதிரூபனின் கலைச்சேவையினாலும் வெளிப்படுத்தி வருகின்ற இசைத்திறமையினாலும் தான் பிறந்த மண்ணான காரைநகருக்கும் தனக்கும் புகழ் சேர்த்துவரும் கலைஞராக விளங்குகின்றார்.

## பரதகலாவித்தகர் திருமதி சித்ரா தர்மலிங்கம்



கனடாவில் பரதநாட்டியக் கலையில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் ஒரு நடனக் கலைஞராக மிளிரும் பரதகலாவித்தகர் திருமதி சித்ரா தர்மலிங்கம் தற்போது லண்டனில் நர்த்தனாலயம் என்கின்ற நடனக் கல்லூரியை நிறுவி பணியாற்றி வருகின்றவரும் கொழும்பு கல்விப் பகுதியில் நடனத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தவருமாகிய திருமதி நளாயினி இராசதுரை அவர்களிடம் பரதநாட்டியத்தை பயின்று 1998 ஆம் ஆண்டு கொழும்பில் அரங்கேற்றம் செய்துகொண்டவர். வடஇலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தராதரப் பரீட்சையில் சித்திபெற்ற சித்ரா சபையினால் பரதகலா வித்தகர் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் நடனக் கலையை பயின்று கொண்டிருந்த காலகட்டத்தில் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற பல போட்டிகளில் பங்கு பற்றி தங்கப் பதக்கங்களை வென்று இளமைக்காலத்திலேயே நடன ஆற்றலை வெளிப்படுத்தியவர். 2000 ஆம் ஆண்டு வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியில் நடன ஆசிரியையாக நியமனம் பெற்ற இவர் பல ஐரோப்பிய நாடுகளிற்கும் சென்று சிறந்த நடன நிகழ்வுகளை நடாத்தி புகழ் சேர்த்தவர். மிசிசாகா நகரில் பால-விமல நர்த்தனாலயா என்ற பெயரில் நடனக் கல்லூரியை ஸ்தாபித்து இயக்கி வரும் இவரின் இரு மாணவிகளின் சிறப்புமிகு அரங்கேற்றம் இவரது முதல் அரங்கேற்றமாக அமைந்து ரசிகர்களின் ஆதரவினையும் வரவேற்பினையும் பெற்றுக்கொண்டவர். கனடாவில் பல அமைப்புக்களின் கலைவிழாக்களில் இவரது சிறந்த நடனத் தயாரிப்புக்கள்

இடம்பெற்று வருவதுடன் கடந்த ஏழு ஆண்டுகளாக காரை வசந்தத்தில் இவர் வழங்கி வரும் வித்தியாசமான நடனங்கள் மூலமாக ரசிகர்கள் மத்தியில் இவருக்கு நல்ல பெயரும் மதிப்பும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## காரை மணிவண்ணன்



கனடாவில் பல வெற்றி நாடகங்களை இயக்கியும், அவற்றில் நடித்தும் அவற்றிற்கு வசனம் எழுதியும் சிறந்த நாடகத்துறைக் கலைஞர் என்கின்ற பெயரை நிலைநாட்டி வருகின்ற காரை மணிவண்ணனின் இத்துறையிலான ஈடுபாட்டிற்கு தமிழர்களின் மரபுக் கலைகளுள் ஒன்றான கூத்து என அழைக்கப்படுகின்ற கிராமிய நாடகங்களில் இவரது குடும்ப உறுப்பினர்கள் பங்கேற்று வந்தமையும் சிவகாமி அம்பாள் வீதியில் விடியவிடிய நடந்து வந்த நாடகங்களை சிறுவயது முதலாக ஆர்வத்துடன் பார்த்து ரசித்து வந்தமையும் அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்றன. CTBC வானொலியில் ஒலிபரப்பாளராக கடமையாற்ற வாய்ப்புக் கிடைத்தபோது இளையபாரதியுடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிவு, அனுபவம் என்பனவே தனக்கு நாடகத்துறையில் நல்லபெயரைப் பெற்றுத்தந்திருப்பதுடன் தனது குருவாக இளையபாரதியையே குறிப்பிடும் காரை மணிவண்ணன் தம்பையா கருணாநிதி என்கின்ற தனக்கு காரை மணிவண்ணன் என்கின்ற புகழ் தந்த புனைபெயரை இளையபாரதியே வழங்கி காரைநகரையும், தன்னையும் பெருமைப்படுத்தியதாக நன்றியோடு நினைவுகூருகின்றார். காரைவசந்த அரங்கில் இன்றுவரை ஐந்து வெற்றி நாடகங்கைள வழங்கிய காரை மணிவண்ணனின் Open House என்ற நாடகம் இம்முறையும் வெற்றிபெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## இசைக்கலாபாரதி சத்தியசொரூபி தீபன்



பிரபல வயலின் இசைக் கலைஞர் சங்கீத வித்துவான் திருமதி தனதேவி மித்திரதேவாவிடம் வயலின் இசையை பயின்று அரங்கப் பிரவேசம் செய்துகொண்ட சத்தியசொரூபி தமிழ் இசைக்கலாமன்றம் நடாத்திய ஆசிரியர் தராதரப் பரீட்சையில் முதற்தரத்தில் சித்திபெற்றுள்ளதுடன் மன்றத்தினால் இசைக்கலாபாரதி என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார். காரைநகர் நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ரொறன்ரோ பல்கலைக்கழக பட்டதாரியுமாவார். கனடாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் பல இசை அரங்குகளில் பக்கவாத்தியமாக இசைத்தும், தனித்து சோலோ இசையாக வழங்கியும் எதிர்காலத்தில் சிறந்த வயலின் இசைக் கலைஞராக மிளிரக்கூடிய ஆற்றல் மிக்கவர் என்பதை நிரூபித்து வருபவர். தமது இசைப்பயணத்தில் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம் இருப்பதாகக் குறிப்பிடும் சொரூபி அதுவே தனது சாதனை விருப்புக்கு உறுதுணையாக இருக்கும் எனவும் கூறும் இவர் தனது இசைத்திறமையை வளர்த்துக்கொள்ளும் நோக்கில் ரொறன்ரோவில் வருடாந்தம் இசை நிகழ்ச்சியை நடாத்தி ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்று வருகின்றார். இவரது குருவான திருமதி தனதேவி மித்திரதேவாவினால் நிர்வகிக்கப்படும் சுருதிலயா நுண்கலைக் கல்லூரியில் உதவி ஆசிரியராக கடமையாற்றிவரும் சொரூபியினால் தனியாக நடாத்தப்பட்டு வரும் வகுப்புக்களிலும் பல மாணவர்கள் வயலினை பயின்று வருகின்றார்கள். இன்று வளர்ந்து வருகின்ற முதன்மையான வயலின் இசைக்கலைஞர்களுள் ஒருவராக விளங்கும் இவர் 2001 ஆம் நடைபெற்ற காரை வசந்தத்தில் முதன்முதலாக பக்கவாத்தியம் வாசிக்க வாய்ப்புக் கிடைத்தமையை நன்றியுடன் நினைவுகூருகிறார்.

## நடனகலாபாரதி செல்வி நிர்த்திகா சித்திரவடிவேல்

சதங்கை நர்த்தனாலய நடனக்கல்லூரி அதிபர் திரு. வாசு சின்னராசா அவர்களிடம் பரதநாட்டியத்தைப் பயின்று சிறுவயதிலேயே அரங்கேற்றம் கண்டுகொண்ட செல்வி நிர்த்திகா சித்திரவடிவேல் தமிழ் இசைக்கலாமன்றம் நடாத்திய ஆசிரிய தராதரப் பரீட்சையில் முதற்தரத்தில் சித்திபெற்று நடனகலாபாரதி என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். தமிழ் கலை தொழில்நுட்பக் கல்லூரியினால் நடாத்தப்பட்டிருந்த




ஆசிரியதரப் பரீட்சையிலும் சிறப்புச் சித்தி பெற்றுக்கொண்ட இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழ கனடா வளாகத்தின் டிப்ளோமா பரீட்சையில் முதற்தர சித்தியடைந்தமைக்காக நாட்டியக் கலைமணி என்கின்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். நாட்டியக் கலையில் பல விருதுகளைப் பெற்றுக்கொண்ட செல்வி நிர்த்திகா கர்நாடக சங்கீதத்தையும் பியானோ வாத்தியத்தையும் பயின்று தமது கலை ஆர்வத்தினை வெளிப்படுத்தி வருவதுடன் ரொறன்ரோ Canadian Music Leage நடாத்திய பியானோ வாசிப்புப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை பெற்று வெற்றியும் பெற்று பரிசினைப் பெற்றுக்கொண்டவர். 2005ஆம் ஆண்டு TVI தொலைக்காட்சி நடாத்திய 'சலங்கையின் சங்கமம்' என்கின்ற நடன போட்டி நிகழ்வில் முதற் பரிசினைப் பெற்றுக்கொண்டு தனது நடன ஆற்றலை நிரூபித்தவர். அண்மையில் அவுஸ்திரேலிய காரை நலன்புரிச் சங்கத்தின் ஒன்றுகூடலின்போது சிறப்பான நடனத்தை வழங்கி பாராட்டுக்களைப் பெற்றவர். காரைநகர் நீலிப்பந்தனையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் யோர்க் பல்கலைக்கழக இறுதி ஆண்டு பட்டதாரி மாணவியாவார்.




# குவாலிற்றி பிறெட் பேக்கறி
# Quality Bread Bakery





பலவிதமான பாண்வகைகள், பணீஸ் (Buns), கேக் (Cakes) வகைகள், மப்(f)பின் (Muffins) இன்னும் பல......

வெல்ல முடியாத மலிவு விலையில்!!!



உங்களுக்குத் தேவையான சிற்றுண்டி வகைகளை எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**Tel: 416.431.9829**



**1221 Markham Road, Unit #13**

**(Markham & Ellesmere)**

*Best Wishes*

உங்கள் மனங்கவர்ந்த புகைப்பட நிறுவனம்

**Bharat Studio**

*Soma* 905 507 2999, Cell: 416 566 9552

# காரை கல்வி வரலாற்றில் திறக்கப்படும் புதிய அத்தியாயம் K. A. S நூலகத் திட்டம்

ஓர் ஊரின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான காரணிகளில் முதன்மையானதும், அடிப்படையானதுமாக விளங்குவது கல்வியே என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். காரைநகர் என்கின்ற புகழ்பூத்த கிராமமானது உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்று விளங்குவதற்கு இங்கு வாழ்ந்து கல்வியால் உயர்ந்து சாதனை படைத்த பல அறிஞர்கள் முக்கிய காரணமாக இருந்துள்ளனர். காரைநகரை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஊர்ப்பற்றாளர்கள் காரை மக்கள் அறிவுச்சேகரங்களையும் தகவல் வளத்தையும் பெற்றுக்கொள்ளும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டுதல் அவசியமாகும். இத்தகைய ஆர்வமும் ஈடுபாடும் மிக்க கல்வியாளர்கள் பலருடைய எண்ணக் கருவானது நூலகமாக உயிர்ப்புப் பெறுகின்ற ஒரு முக்கியமான சமூகப் பணியானது காரைநகர் மக்கள் ஒவ்வொருவரையும் பூரிப்படைய வைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பாடசாலைக் கல்வியினால் மட்டும் ஒருவனால் வல்லவனாக முடிவதில்லை. "கல்வி கரையில கற்பவர் நாள் சில", "வாசிப்பு மனிதனை பூரணத்துவமடையச் செய்கின்றது" போன்ற ஞானிகளின் வாக்குக்களிற்கேற்ப எமது உறவுகள் பயனடையும் வகையில் கல்வியை தொடர ஊக்குவித்து வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவல்ல மிகச்சிறந்த சாதனமாக பொது நூலகங்கள் விளங்குவனவாகும். பாடசாலை நூலகங்கள் கல்வித் திணைக்கள அதிகாரிகளின் திட்டத்திற்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட நூல்களை மட்டுமே கொண்டுள்ளவையாகும். மாணவர்கள் தமது பாடநூல்களுடன் அவற்றிற்கு துணையான பிற நூல்களையும் கற்று பரந்துபட்ட அறிவினைப் பெற்றுக்கொண்டு கல்வியின் உண்மைப் பயனைப் பெறுவதற்கு பொது நூலகங்கள் பெரிதும் உதவக் கூடியனவாகும். மேலைத்தேச நாடுகளிலுள்ள மக்கள் இதனை நன்கு உணர்ந்துகொண்டதனாலேயே ஒவ்வொரு ஊர்களிலும் நகரங்களிலும் பொது நூலகங்களை நிறுவி அவற்றின் மூலமாக அளவிடற்கரிய பயனைப்பெற்று வருகின்றனர்.

இன்று இலங்கையில் பொது நூலகங்கள் நகரங்களில் மட்டும் நிறுவப்பட்டுவந்த நிலை மாற்றமடைந்து கிராமங்களிலும் நிறுவப்பட்டு வருமளவிற்கு மக்கள் சிந்தனை வலுப்பெற்று வருவதுடன் பொது நூலகங்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்கவும் ஊக்குவிக்கவும் நூலகவாரம் போன்ற பல விழிப்புணர்வுச் செயற்பாடுகள் கிராம மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய பின்னணியில் புலம்பெயர்ந்த காரை மக்களுடைய அதிக நிதிப் பங்களிப்புடன் காரைநகர் மக்களின் பங்களிப்பும் இணைந்து ஆரம்பிக்கப்படவுள்ள நூலகத்திற்கான திட்டப்பணிகளை காரை அபிவிருத்திச் சபை முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டத்தின் இணைப்பாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ள இளைப்பாறிய உதவி வைத்திய அதிகாரி திரு. நடராசா அவர்கள் மிகுந்த முனைப்போடு திட்டப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

காரைநகர் மேற்கு பிரதான வீதியும் இடைப்பிட்டி வீதியும் ஒன்றுசேரும் இடத்தின் மூலைப்பகுதியில் அமைந்துள்ள 06 பரப்புக் காணி புலம்பெயர் அன்பர்கள் சிலரின் நிதிப்பங்களிப்புடன் கொள்முதல் செய்யப்பட்டு சமூகசேவைத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட அமைப்பான காரை அபிவிருத்திச் சபையின் பெயரில் எழுதப்பட்டுள்ளது. இக்காணியின் பள்ளப்பகுதிகள் யாவும் மணல்கொட்டப்பட்டு நிரவி செப்பனிடப்பட்டுள்ளதுடன் பாதுகாப்புச் சுற்றுமதில்களும் நான்கு பக்கங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

சென்ற 04-06-2011 இல் நூலகக் கட்டிடத்திற்கான அடிக்கல்லினை உ.அ.அதிபர் திரு.இ.த.ஜெயசீலன் நாட்டி வைத்த வைபவத்தில் கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தமை இத்திட்டத்திற்கான ஆதரவின் வெளிப்பாடாக அமைந்திருந்தது.

90x36 சதுர அடி பரப்பு விஸ்தீரணத்தையுடையதும் அறுபதாயிரம் டொலர்கள் மதிப்பீட்டிலானதுமான இந்நூலகக் கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் ஆரம்பிக்கப்பட்ட ஒரு

வருட காலத்திற்குள் அதனை நிறைவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.ஆரம்ப நிர்மாணப் பணிகளிற்கு தேவையான ஒருபகுதி கட்டிடப் பொருட்கள் தற்போது வவுனியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கான தமது முழுமையான ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் லண்டன், கனடா, பிரான்ஸ், சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள காரை அமைப்புக்கள் தெரிவித்துள்ள நிலையில் கனடா-காரை கலாச்சார மன்றம் லண்டன்-காரை நலன்புரிச் சங்கம் ஆகிய இரு அமைப்புக்களும் உப-குழுக்களை அமைத்து நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலுள்ள காரை அபிவிருத்திச் சபைகள் ஒரு தொகைப் பணத்தை உதவுவதாக உறுதியளித்துள்ளன. அறுபதாயிரம் டொலர்கள் என்ற குறிக்கோளை எட்டும் முயற்சியில் இத்தொகையின் அரைப்பகுதியினை பல காரை புலம்பெயர் அன்பர்கள் இவ்விரு அமைப்புக்கள் ஊடாக வழங்கியுள்ளமை மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளதுடன் தொடர்ந்தும் பல அன்பர்கள் மனமுவந்து தமது பங்களிப்புக்களைச் செய்துவருவது ஊக்கமளிப்பதாகவுள்ளது.

## K. A. S. நூலகத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1. ஆரம்ப பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரையான அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களிற்கும் பயன்படக்கூடிய நூல்களையும் கணினி, DVD, CD போன்ற நவீன கற்றல் சாதனங்களையும் உள்ளடக்கும் வகையில் முதற்கட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

2. படிப்படியாக அனைத்து பொதுமக்களும் பயன்படுத்தக்கூடிய முறையில் இலக்கணம், இலக்கியம், சமயம், வரலாறு உள்ளிட்ட பல்துறை சார்ந்த அனைத்து வகையான நூல்களையும் உள்ளடக்கி படிப்படியாக விஸ்தரிக்கப்படும்


3. காரைநகரின் வரலாறு, இங்கு வாழ்ந்த பெரியார்கள், ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் வரலாறு என அனைத்து வரலாற்று ஆவணங்களையும் சேகரித்து வைப்பதன் மூலம் வரலாற்று ஆவணக் காப்பகமாகவும் நூல்நிலையம் செயற்பட வழியேற்படுத்தப்படும்.

4. காரை அபிவிருத்திச் சபையே இந்நூலகத்தினை நிர்வகிக்கும் பொறுப்பினை மேற்கொள்ளவுள்ளது என்பதுடன் இச்சபைக்கான பிரத்தியேக காரியாலயம் ஒன்றும் இந்நூலகத்துடன் இணைந்து அமைக்கப்படவுள்ளது.

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் பிறந்த மண்ணை மறவாது அதன் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் மிக்க காரை மாதா பெற்றெடுத்த அன்பு நெஞ்சங்களே! சமூகப்பணிகளில் மிகவும் முக்கியமான பணியாகிய நூலக சேவையினை உங்கள் உறவுகள் பெற்றுக்கொண்டு மண்ணின் வளத்தைப் பெருக்கக்கூடிய வரலாற்றுப் பணி ஒன்று நிறைவேற உங்களது வசதிக்கேற்ப பெரிய அல்லது சிறிய அளவிலான நிதிப்பங்களிப்பினை வழங்கி உதவுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.



**நடராசா அமிர்தலிங்கம் B.Sc**
**நூலக அமைப்பு உப-குழு இணைப்பாளர்**
**கனடா-காரை கலாச்சார மன்றம்**


Buy or Sell your Home
வீடு வாங்க விற்க
President's Award
Top 5% in Canada
ஐயாத்துரை கணபதிபிள்ளை
Aiyathurai (AI) Kanapathipillai
Sales Representative
Res: 905 913 1170 / Cell: 416 817 0833
HOMELIFE
HIGHER STANDARDS
பீட்டர் ஐயாத்துரை
Peter Aiyathurai
Sales Representative
Cell: 416 817 5052
e-mail: pthurai@hotmail.com
www.getpeter.com
HOMELIFE SUPERSTARS
Realty Inc, Brokerage
Independently Owned and Operated
Tel : 416 740 4000
Fax : 416 740 8314
23 Westmore Dr, Suite102, Toronto. M9V 3Y7
Call now and start packing ...

# ஸ்ரீநிவாச மங்கள பவனம்



கதிர்காம முருகன் துணை

காரைநகர் கதிர்காமசுவாமி கோவில் பிரதம குருவும் கோவில் தர்மகர்த்தாவும் ஆகிய சிவஸ்ரீ ஸ்ரீநிவாசக ஐயர் மகனும், புன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் குருவும் சுழிபுரம் சுப்பையா குருக்கள் அவர்களின் பேரனுமாகிய

அலங்கார சிவாச்சாரியார்

# சிவஸ்ரீ வாகீஸ்வர குருக்கள்

(இந்துமத குரு, கனேடிய திருமணப் பதிவாளர்)

புதிய வில்லு மணவறை, முத்து மணவறை, பூ மணவறை, குத்து விளக்கு, வாழை மரம், மண்டப அலங்காரம், மணிமாலைகள், தவண்ணக் கோலங்கள், ஆராத்திப் பொருட்கள், நிறைகுடம், கொத்து நிறைநாழி அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்





சகல இந்துமத கிரியைகளுக்கும்
மங்களகர சேவைகளுக்கும்
**வாகீஸ் ஐயா**

கல்யாண மண்டபம், புதிய ஊஞ்சல், திருமணம், பதிவுத் திருமணம், ருதுசாந்தி, புதுமனைப் புகுவிழா, புதுக்கடைத் திறப்பு விழா, புண்ணியாக வாசனம், திவசம், நவக்கிரக சாந்தி மற்றும் பூ மாலைகள், ஜடை நாகம், தலைப் பாகை, தலைநகை, பூச் செண்டு, பூசைக் குரிய பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**Tel: 416 298 5942 Cell: 416 704 5942**

## A Message From DR.Veeramankai Yoharatnam......

" Reading maketh a full man,

Conference ready man and

Writing an exact man." – Franci's Bacon.

It gives me immense pleasure to pen this message about the plan of constructing a new library in Karainagar for our younger generations. A library is the temple of knowledge and a boon to the people. It is the place where knowledge is preserved and gained. It boosts not only to the students but also the elderly people to develop the habits of reading books.

A library provides suitable at Masphere where everyman wants to study books. It widens the knowledge of the students with new ideas and new thoughts. Reading gives the people a real satisfaction , pleasure, enlightenment and Wisdor. A library forms very important part of educational institution. A college library provides the students with means for utilizing brains bestowed with knowledge to give innovative ideas and information. Education must be rendered to all children in the rural areas like our native village Karainagar So the uses of library is very important for learning process.

A library increases our knowledge and Widenes our outlook. It reveals new experiences of men and nations, new wonders of this vast and varied world we an opportunity of sitting in the company of master minds of the old and the mighty brains of the present day world and knowing their view – points on various subjects. Knowledge is both a power as well as a joy. A Library, therefore gives us a real satisfaction. Robert Southey, a learned poet and scholar who spent most of his time in the company of books.

Thus a library winch is a store – house of knowledge is useful to professionals, general readers and research students. Nonals, general readers and research students. No research is possible without a good library. Carlyle said that a true university of our days is the collection of books. Libraries contain the essence of our civilization and culture and hence they should be maintained in the best possible.

They are the books, the arts, the academies that show, contain and nourish all the world. It is impossible to enter a large library without feeling an inward sensation of reference.

A Student has a burning desire to learn throughout his life, and also set an example for others. A perfect learner will not only learn for the classroom, but the environment as well. A man who reads anything and everything seriously gains a lot of information and good knowledge.

A man who is full information and has good knowledge becomes a scholar and very important person in a society. A knowledgeable person is called a man of letters or well read man.

" Karai Abiviruthi Sabai" OR " Karai Development Society" has been rendering immense help to develop our village in many directions. The philanthropists in Island and abroad consumed the land and laid the stone for new foundation ceremonially. This is a mile strne of karainagar educational sector. In addition, the new library will quench educational thirst of the people in this village. For this globalized world we need the sophisticated library which should have information technology as well as language development.

"Sons of soil" of Karainagar time to time assist the development of their mother place Karainagar. According to their timely action, a new library building is emerged. Not only are the infrastructure of this library but the necessary sources provided by them.

I am very proud to have this privilege as a daughter of Karainagar. Once again I pay my gratitude to the funding agencies. Who are ready to support to help this library? I shower my sincere thanks to our respected Dr. Nadarajah who gave me to this opportunity to share my ideas and opinions about this new project. May God bless the people who engage in this great, useful and painstaking task.

Dr(MRS) VEERAMANKAI STALINA YOHARATNAM,

SENIOR LECTURER IN ENGLISH,

DEPT. OF LINGUISTICS & ENGLISH,

UNIVERSITY OF JAFFNA.

# PEEL TAE - KWON DO

Independent Studies show that martial arts can improve mental focus, increase attention span, and the ability to make better decisions



**151 NASHDENE ROAD, UNIT # 33**
**SCARBOROUGH, ONTARIO. M1V 4C3**
**TP# (905) 840 5268**

**Gore Centre Unit #25**
**4525 Ebenezer Road**
**Brampton, ON L6P 2K8**
**905-913-2571**

**170 Bovaird Drive West, Unit#9,**
**Brampton, ON L7A 1A1**
**905-840-5268**

# யாதும் ஊரே யாவரும் கேளிர்



குரு. அரவிந்தன்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பதம் உலகமக்கள் எல்லோரும் ஒன்றுதான், மொழி மதம் இனம் என்ற எந்த வேறுபாடுமில்லை, எந்த ஊரும் நம்ம ஊருதான் என்ற தத்துவத்தை உணர்த்துவதாக இருக்கின்றது. கணியன் பூங்குன்றனாரின் இந்த எதிர்பார்ப்பை முழுமனதோடு ஏற்றுக்கொண்ட தமிழ் மக்கள் புலம் பெயர்ந்த போது எந்தெந்த நாடுகளுக்குச் சென்றார்களோ அந்தந்த நாட்டு மக்களுடன் ஒன்றுபட்டு ஒற்றுமையாய் வாழப்பழகிக் கொண்டார்கள். அவர்கள் சென்ற நாடுகள் எல்லாம் தாய் மொழியாம் தமிழ் மொழியை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார்கள். அதேபோல சிலர் அந்த நாட்டு மொழியையும் உள்வாங்கிக் கொண்டார்கள். அதனால் இலக்கிய ஆர்வம் கொண்ட சிலர் அந்த மொழியில் உள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும், தமிழில் உள்ள சிறந்த இலக்கியங்களை அந்த நாட்டு மொழியில் மொழிபெயர்க்கவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். பாரதியார் குறிப்பிட்டது போல, பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும், தேமதுரத் தமிழ் ஓசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும் என்ற கொள்கையோடு, மொழி விருத்திக்காக அவர்கள் செய்யும் தன்னலமற்ற இந்த சேவையை நாம் நிச்சயம் பாராட்ட வேண்டும்.

தமிழரின் தொன்மையை அறிவதற்குத் துணை நிற்பது சங்ககால நூல்களே என்றால் மிகையாகாது. எமது முன்னோரின் திறமையை, தாய்மொழியில் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டை எடுத்துக் காட்டுவது காலத்தின் அழிவில் இருந்து எஞ்சி நின்ற இந்த நூல்களே. காலத்திற்கேற்ப ஓலைச்சுவடிகளிலும், கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் பொறித்து எங்கள் அடுத்த தலைமுறைக்குத் தந்துவிட்டுச் சென்ற அளப்பரிய சொத்து இதுவாகும். ஏட்டுச் சுவடியைப் படித்து பதிப்பிப்பது என்பது மிகவும் கடினமானதாகும். பயிற்சி இல்லாதவர்களால் இதைச் செய்யமுடியாது. எழுத்துக்கள் மாறினால் பொருள் மாறிவிடச் சந்தர்ப்பம் உண்டு.

மெய் எழுத்துக்கள் புள்ளி எய்தா
ஒற்றைக் கொம்பும் சுழியின் கொம்பும்
வேறுபாடின்றி ஒத்து விளங்கும்
பகர யகரம் நிகருறத் திகழும்'

என்றெல்லாம் ஏட்டுச் சுவடிகளில் உள்ள எழுத்துக்கள் பற்றி அறிஞர் நா.ரா. முருகவேள் குறிப்பிடுகின்றார். இயற்கை அழிவில் இருந்து மட்டுமல்ல, செயற்கை அழிவிலிருந்தும் காப்பாற்றி இவற்றை எல்லாம் சேகரித்து தொகுத்து அடுத்த தலைமுறையான எமக்குத் தந்த, தமிழ் மீது அதீத பற்றுக் கொண்ட அந்த அறிஞர்களை நாம் நிச்சயம் பாராட்ட வேண்டும்.

தமிழில் உள்ள சிறந்த நூல்களை பிறமொழிகளில் பலர் மொழிபெயர்த்திருக்கிறார்கள். எனது சிந்தனைக்கு எட்டிய வகையில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல் திருவள்ளுவனாரின் திருக்குறள் என்றே நினைக்கின்றேன். 1812ம் ஆண்டில்தான் அச்சுப்பதிப்பு மூலம் திருக்குறள் மூலபாடமும், நாலடியார் மூலபாடமும் வெளியிடப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அச்சுப்பதிப்பு மூலம் வெளிவந்த தமிழ் இலக்கிய நூல்களும் இவையாகத்தான் இருக்கலாம் என நம்பப்படுகின்றது. அகத்தியம் என்ற தொன்மையான நூல் முழுமையாக எமக்குக் கிடைக்கவில்லை. ஓரளவு முழுமையாகக் கிடைத்த இலக்கண நூல் என்று பார்த்தால் தொல்காப்பியத்தைக் குறிப்பிடலாம். இக்கால கட்டத்தில்தான் தமிழ் விளக்கம் என்னும் உரைநடை இலக்கண நூல் வெளிவந்தது. தொடர்ந்து இலக்கணச்சுருக்கம், சதுர்அகராதி, தமிழ் அரிச்சுவடி, இலக்கண வினாவிடை, நன்னூல், நன்னூல் விருத்தியுரை போன்ற நூல்கள் பதிப்பிக்கப்பட்டன.

பழைய ஏட்டுச் சுவடிகளில் இருந்து மிகவும் கடின உழைப்பால் எடுக்கப்பட்டு அச்சுப்பதிவில் பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. தமிழில் வெளிவந்த திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய


நூல்களைப் பத்துப்பாட்டு என்றும், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றை எட்டுத்தொகை என்றும் அழைப்பர். திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவைநாற்பது, இன்னாநாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றம்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நாநூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, இன்னிலை ஆகிய நூல்களைப் பதினெண்கீழ்க் கணக்கு என்றும் அழைப்பர்.

தமிழ் மொழியில் அறத்தைப் போதிக்கும் நீதி நூல்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. நல்வழி, கொன்றைவேந்தன், ஆத்திசூடி, நீதிநெறி விளக்கம், உலகநீதி, மூதுரை, சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை, முதுமொழிக்காஞ்சி போன்றவற்றை இந்த நீதிநூல் வகையில் குறிப்பிடலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன ஐம்பெருங்காப்பியங்களில் அடங்கும். உதயணகுமார காவியம், நாககுமாரகாவியம், யசோதரகாவியம், நீலகேசி, சூளாமணி என்பன ஐஞ்சிறுகாப்பியங்கள் எனப்படும்.

மதபோதனைகளை முன்நிறுத்தும் சமய நூல்களும் தமிழ் இலக்கியத்திற்கு அணி செய்தன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர் அருளிய தேவாரங்கள் முதல் ஏழு திருமுறைகளிலும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகியன எட்டாம் திருமுறையிலும் அடங்கும். திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையிலும், திருமந்திரம் பத்தாம் திருமுறையிலும், திருமுருகாற்றுப்படை போன்றவை பதினொராம் திருமுறையிலும், பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையிலும் அடங்கும். இதைவிட நாலாயிரதிவ்யபிரபந்தம், சிவஞானபோதம், கந்தபுராணம் போன்ற நூல்களும், வைணவசமய நூல்களும், கிறிஸ்துவ நூல்களும், இஸ்லாமிய நூல்களும் தமிழ் வளர்த்த சமய நூல்களில் அடங்கும். கம்பராமாயணம், கலிங்கத்துப்பரணி போன்றவையும், தமிழ் இலக்கண நூல்களும், ஈழத்து தமிழ் இலக்கியங்களும் தமிழ் மொழி வளரச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக நின்றன என்பதில் ஐயமில்லை.

பட்டியலிட்டுச் சொல்ல முடியாத அளவிற்குத் தற்கால தமிழ் இலக்கியம் விரைவாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. அச்சு இயந்திரத்தின் ஆளுமையும், தொடர்ந்து கிடைத்த நவீன தொழில் நுட்பவசதிகளும், இன்றைய கணனியின் ஆதிக்கமும் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன. ஆனாலும் பரந்துபட்டளவில் சங்க இலக்கியங்கள் பேசப்படுமளவிற்குத் தற்கால தமிழ் இலக்கியம் பேசப்படவில்லை என்பதே தமிழ் தாயின் குறையாக இருக்கின்றது.

குரு அரவிந்தன் இன்று முன்னணியில் நிற்கின்ற ஈழத்துப் படைப்பாளிகள் சிலருள் ஒருவர். தமிழகத்தில் மட்டுமல்ல, சர்வதேசத் தமிழர்கள் மத்தியில் அறிமுகம் தேவையில்லாத சிறந்த ஓர் எழுத்தாளர். இவரது கதைகள் வேறு சர்வதேச மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டமை இவரது எழுத்தாற்றலுக்குக் கட்டியம் கூறுவதுடன் இவரது பரந்த வாசகர் வியாபகத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. கனடிய தமிழ் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடியாக இருக்கும் இவர் ஆசிரியராகவும் பணி புரிகின்றார். சிறுகதை, நாவலுக்கான பல விருதுகளைப் பெற்றிருக்கும் இவர், தமிழகத்தில் இருந்து வெளிவரும் மூத்த சஞ்சிகைகளில் ஒன்றான கலைமகள் நடத்திய குறுநாவல் போட்டி– 2011ல் கலைமகள் விருதையும் பெற்றிருக்கின்றார். திரைப்பட வசனகர்த்தாவாகவும், நாடக நெறியாளராகவும் இருக்கும் இவர் கனடிய தமிழ் வானொலி நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசையும், உதயன் சிறுகதைப் போட்டியில் தங்கப்பதக்கத்தையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# வயோதிபர்களுக்கான காப்புறுதி

## மிகக் குறைந்த விலையில்...

**$30^55**

$10000
60 years female
non smoker
Some conditions may apply

**Diabetic, Heart attack, Stroke, High blood pressure, cholesterol or decline from other companies**

**NO PROBLEM**

**HIRING NEW AGENTS**
**RESP & Insurance**

No Contract
No Obligation
Friendly Service
Quality Training

உங்களுக்கு காப்புறுதி நிராகரிக்கப்பட்டு அல்லது காப்புறுதி தெளிவற்ற முறையிலிருந்தால் மேலதிக ஆலோசனைகளுக்கு என்னை அழையுங்கள். CTBC வானொலியில் சனி காலை 9:00 – 10:00 மணிவரையிலும், ஞாயிறு இரவு 9:00 – 10:00 மணிவரையிலும் நான் கலந்துகொள்ளும் காப்புறுதி பற்றிய நிகழ்ச்சியைக் கேளுங்கள்.



ROYAL BROKERS CORPORATION

**Siva Kandiah**


CEO & Managing General Agent

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com
**www.royalbrokers.com**

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
INDUSTRIAL ALLIANCE

# இன்றைய காரைநகர்



ப. ஐங்கரன்



காரைநகரின் புகழ் பெரிது. அதனைக்கூறும் அல்லது விளக்கும் தகுதி என்னிடம் இல்லை. காரைநகரின் வரலாறுகள், புலமைகள், சாதனைகள் என்பனவற்றைப்பற்றி காலத்துக்குக் காலம் வெளிவந்த நூல்கள் மூலம் அறியக்கிடைத்தது. ஆனாலும் இன்றைய காரைநகரை உங்கள் மனக்கண்ணில் நிறுத்துவதே எனது நோக்கமாகும்.

காரைதீவு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது எனினும் பென்னாலைப்பாலம் தந்த பெருமை நகராக சான்றுப்படுத்தியது. கடந்த வருடம் இந்தப்பாலம் புனரமைக்கப்பட்டு இருவழிப் பாதையாக அகலப்படுத்தப் பட்டதுடன் வீதியும் நல்ல நிலையில் புனரமைக்கப்பட் டுள்ளது. இதனால் காரைநகருக்குள் வருபவர்கள் இலகுவாக வரக்கூடியதுடன் வருபவர்களை நுழைவாயில் அரச தினைக்களங்களான கமநலசேவை நிலையம், உதவி அரச அதிபர் பணிமனை என்பன உள்ளிட்ட பல காரியாலயங்கள் வரவேற்பது போல காட்சியளிக்கின்றன.

காரைநகரில் தற்போது பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் வாழ்ந்து வருகின்றனர். காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு ஒன்பது கிராமசேவையாளர் பிரிவாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது. காரை மேற்கு, காரை வடமேற்கு, காரை கிழக்கு, காரை தென்கிழக்கு, காரை தெற்கு, காரை தென்மேற்கு, காரை வடக்கு, காரை வடகிழக்கு, காரை மத்தி என முறையே ஜெ.40, ஜெ.41, ஜெ.42, ஜெ.43, ஜெ.44, ஜெ.45, ஜெ.46, ஜெ47, ஜெ.48 இலக்கங்களைக்கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது.

## கல்வி

காரைநகரில் மொத்தமாக பதின்னான்கு பாடசாலைகள் உள்ளபோதிலும் தற்போது பத்துப்பாடசாலைகளே இயங்குகின்றன. இவற்றுள் சுமார் இரண்டாயிரத்து இருநூறு மாணவர்கள் கல்வி கற்கும் அதேவேளை நூற்றுமுப்பத்துநான்கு ஆசிரியர்கள் கடமையாற்று கின்றனர். காரைநகரில் தேவைக்கு மேலதிகமாக ஆறு ஆசிரியர்கள் கடமையாற்றினாலும் கணித விஞ்ஞான பாடநெறிகளிற்கான ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருக்கின்றதை அறிய முடிகிறது. இது தொடர்பாக தீவக வலய கல்விப்பணிப்பாளர் திரு ப.இராதாகிருஸ்ணனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது பற்றாக்குறையாக உள்ள ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இவ்வருடம் தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாசாலை, வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை ஆகியன மீளத்திறக்கப்பட்டன. இவை இரண்டும் கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் அரச சார்பற்ற நிறுவனத்தினால் புனரமைக்கப்படுகிறது. பாடசாலை களின் அத்தியாவசியமான பௌதீகவளங்களை கல்வித்திணைக்களம் மேற்கொள்ளும் அதேவேளை ஏனைய அடிப்படைத் தேவைகளை காரைநகர் அபிவிருத்திச்சபையினூடாக புலம்பெயர் அமைப்புக்கள் மேற்கொண்டுவருகின்றன. இந்த வகையில் லண்டன் காரை நலன் புரிச்சங்கம், கனடா - காரை காலாச்சார மன்றம் ஆகியன சிறப்பாக பணியாற்றுகின்றன. அதேபோல் பிரான்ஸ் காரை அபிவிருத்திச்சபை முன்பள்ளி ஆசிரியர்களிற்கான உதவு தொகைகளை வழங்கிவருகின்றது.

காரைநகரின் இரு பெரிய பாடசாலைகளான கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம், யாழ்ற்ரன் கல்லூரி ஆகியன அரசின் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இது காரைநகர் கல்விக்கான மைல்கல் என்றே கூறமுடியும். காரைநகருக்கென தனியான கோட்டக்கல்வி அலுவலகம் திறக்கப்பட்டமை பாடசாலைகளின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய அனுகூலமாக அமைந்துள்ளது.

## விவசாயம்

காரைநகரில் வழமையாக சிறுபோகம், பெரும்போகம் என இருமுறை விவசாயம் செய்துவந்தனர். சிறுபோகத்தில் எள், பயறு, உழுந்து, கௌவுப்பி, சாமை போன்ற தானியங்களும் பெரும்போகத்தில் நெல்லும்

பயிரிட்டுவந்தனர். இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பின்னர் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை களினால் சிறுபோகம் முற்றாகவே பயிரிடப்படுவதில்லை. தற்போது நெல் மட்டுமே பயிரிடப்பட்டுவருகிறது.

காரைநகரில் ஐந்து கமக்கார அமைப்பின்கீழ் சுமார் ஆயிரத்து இருநூறு ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. காரைநகர் கமநல சேவைகள் நிலையம் இவ் விவசாயத்திற்கான செயற்கை உரத்தினை மானிய அடிப்படையில் வழங்கிவருவதோடு இம்முறை மிகக்குறைந்த விலையில் உழவு இயந்திரத்தினையும் வழங்கிவருகின்றது.

விவசாய நில வாய்க்கால்களையும், மதகுகளையும் லண்டன் காரை நலன்புரிச்சங்கத்தின் நிதி உதவியுடன் காரைநகர் அபிவிருத்திச்சபையினர் புனரமைத்துள்ளனர். சுமாராக நெற்செய்கை விளையுமிடத்து காரைநகரின் குறித்தளவு சுயதேவையை ஈடுசெய்யமுடியும்.

## சுகாதாரம்

காரைநகர் பிரதேசம் யாழ் குடா நாட்டுடன் ஒப்பிடுகையில் சுகாதார நிலமை நல்ல நிலையில் உள்ளது. இங்குள்ள கிராமிய வைத்தியசாலையில் சிறந்த வைத்திய அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர். இங்கு வெளிநோயாளர் பிரிவில் மாதாந்தம் சுமார் நாலாயிரத்திற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். இவ்வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறையாக உள்ளது. இக்குறைபாடு தொடர்பாக கடந்த அபிவிருத்திக்கூட்டத்தில் யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இவ்வருட இறுதிக்குள் புதிதாக சேர்த்துக்கொள்ளப்படும் தாதியர்கள் இவ் வைத்திய சாலைக்கு நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். அத்துடன் வெளிநோயாளர் பிரிவுக்கு அடுத்தவருட மளவில் கட்டிடம் அமைக்க உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் கடந்த காலங்களில் இவ் வைத்தியசாலைக்கு சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையினாலும், அமரர் திருமதி மனோன்மணி சண்முகம் ஞாபகார்த்தமாக அவரது மகன் திரு ச.சிவஞானம் அவர்களாலும் மருத்துவ ஆய்வுகூட கட்டிடமும் அதற்கான உபகரணங்களும் அன்பளிப்பு செய்யப்பட்டன. அமரர் இராசநாயகம் ஞாபகார்த்தமாக ஆண் நோயாளர்கள் உணவருந்தும் கட்டடமும் அமைக்கப் பட்டது. தற்போதும் லண்டன் காரை நலன்புரிச் சங்கத்தினரால் சமையலறை புனரமைப்கப் பட்டுள்ளதுடன் அவசரசிகிச்சைப்பிரிவும் அமைத்து வருகின்றனர். இங்கு ஒவ்வொரு புதன்கிழமையும் நடமாடும் வைத்திய சேவையும், மாதத்தின் மூன்றாவது புதன்கிழமையில் புற்றுநோய் கிளினிக் சேவையும், வாரந்தோறும் புதன், மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பற்சிகிச்சையும் நடைபெற்று வருகின்றன.

அதனைவிட ஒரு பொதுச்சுகாதார உத்தியோகத்தர் கடமையாற்றும் அதேநேரம் மூன்று குடும்ப நல மருத்துவ மாதுக்களும் வெளிக்களப்பணியாற்றுகின்றனர். இவர்களின் சிறப்பான செயற்பாட்டினால் பொதுத் தொற்று நோய்க்கிருமிகளின் தாக்கம் காரைநகரில் குறைவு என்றேகூறமுடிகிறது.

## குடிநீர்

காரைநகர் மட்டுமல்ல தீவுப்பகுதி முழுவதிலுமே குடிநீர் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. காரைநகரில் மல்லிகை, கோவளம், ஆலங்கன்றடி, தம்பன. கிளுவனை போன்ற சில இடங்களிலேயே குடி நீர் உண்டு. அவையும் கடந்த இரு மாதங்களாக வற்று நிலைக்கு சென்றுவிட்டன. இன்னிலையில் லண்டன் காரை நலன்புரிச்சங்கத்தின் இரு குடிநீர் பௌசர்களும் முழுமையாக சேவையில் ஈடுபடுகின்றன. காரைநகர் பிரதேச சபையின் வரட்சிகால குடிநீர் சேவையும் உரிய இடங்களிற்கு வழங்கப்பட்டுவருகிறது.

காரைநகர் கிழக்கு பகுதியில் குறிப்பாக களபூமி பாலாவோடை போன்ற பகுதிகளில் கோடை காலங்களில் கிணறுகளில் முற்றாகவே நீர் வற்றிவிடும். இந் நிலையில் மக்களின் நீர்த் தேவைகள் அதிகரித்துள்ளது. ஆனாலும் காரைநகர் அபிவிருத்திச் சபையினர் குடிநீர் பெறும் சுன்னாகம் கிணறுகளும் வற்றுநிலைக்கு சென்றுவிட்டன. அங்கும் கிணறு ஊறும்வரை காத்து நின்றுதான் பௌசர்களில் ஏற்றப்படுகின்றன. ஆதலால் அதிகரித்துவரும் நீர்த்தேவைகளை ஈடுசெய்வதற்கு காரைநகர் அபிவிருத்திச்சபையினர் பகீரதமுயற்சி மேற்கொண்டு வருகின்றனர். இந் நிலையில் காரைநகரில் வசிக்கும் அனைத்து மக்களும் பொறுப்புடன் சிந்தித்து பௌசர்கள்வழங்கும் நீரை குடிநீருக்கு மட்டும்பயன் படுத்தினால் ஓரளவு சமாளிக்க முடியும். அத்துடன் காரைநகரில் உள்ள நீர் நிலைகள் புனரமைக்கப்படும் பட்சத்தில் நிலத்தடி நீரைச் சேமித்து பாதுகாக்கமுடியும். இதன் ஓர் அங்கமாக வேணன் அணைக்கட்டு புனரமைக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொது

காரைநகரின் கடற்றொழில் நல்ல நிலையில் நடைபெற்றுவருகின்றது. அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் போதியளவு கடற்றொழில் உபகரணங் களை வழங்கியுள்ளன. இத்துடன் கடற்றொழிலில் நவீன தொழில்நுட்பம் கையாளப்படுமாகவிருந்தால் மேலும் முன்னேற்றமடைய வாய்ப்பு ஏற்படும். தற்போது பிடிக்கப்படும் மீன்கள் தென்னிலங்கைக்கு

ஏற்றப்படுகிறதாயினும் தொடர்ந்து ஏற்றுமதி செய்யப்போதுமானதாக இல்லை.

தற்போது உலக வங்கியின் வீட்டுத்திட்டங்கள் காரைநகரில் நிறைவுபெற்றுவருகின்றன. மீண்டும் இந்திய அரசின் வீட்டுத்திட்டத்தில் முதற்கட்டமாக முப்பது வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதில் ஊரி, தோப்புக்காடு கிராமங்களில் பதினைந்து வீடுகளிற்கு அத்திவாரம் இடப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட வீட்டுத்திட்டம் அடுத்த வருடஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

காரைநகரில் தற்போது அபிவிருத்திகளில் அரசாங்கம் கவனமெடுத்தாலும் சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் எமது புலம்பெயர் அமைப்புக்கள் அதிக அக்கறைகொள்ள வேண்டும். இந் நிலையில் லண்டன் காரை நலன்புரிச்சங்கமானது குடிநீர் விநியோகம், வைத்தியசாலை, விவசாய வாய்க்கால் உட்பட பலதிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. கனடா - காரை கலாச்சார மன்றம் கல்விசார் நடவடிக்கைகளிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவருகின்றது. இதற்கு இவ்வருட கல்விப் பெறுபேறுகள் சான்றாக அமைகின்றன. இந்நிலையில் காரைநகர் அபிவிருத்திச்சபையினர் அத்தியாவசிய தேவைகளை ஈடுசெய்து வழங்கி வருவது பாராட்டுக்குரியது.

இதேபோன்று கடந்த காலங்களில் இயங்கி வந்த சுவிஸ், பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நலன்புரிச்சங்கங்கள் மீண்டும் புதுப்பொலிவு பெற்று இயங்க முன்வரவேண்டும். இதன்போது காரைநகர் மக்களின் ஒற்றுமை மேலும் அதிகரிப்பதுடன் சமூக நலன்புரிச் செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியும். இதற்கு அனைவரும் ஒன்றுபடுவோமாக.

**வங்கிச்சேவை**

காரைநகரில் தற்போது நான்கு வங்கிச்சேவை அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, சமுர்த்தி வங்கி, கிராமிய கூட்டுறவு வங்கி என்பனவே அவ்வங்கி அமைப்புக்களாகும். இவை நான்குமே காரைநகர் மக்களின் வாழ்வியலில் மிகச்சிறப்பான சேவைகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்றன. இவ்வங்கிகள் அனைத்தும் சுயதொழில் கடனாக இரண்டு லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை வழங்கி வருவதுடன் விவசாய கடன், வீட்டுத்திட்டக் கடன், வாகன ஈட்டுக்கடன் (டுநயளலைெ) போன்றவற்றினையும் சேமிப்புக்களையும் இவ்வங்கிகளூடாக மேற்கொள்ள முடியும்.

இலங்கை வங்கியில் நடைமுறைக்கணக்கினை வைத்திருக்க முடியும் என்பதுடன் காசோலை மூலமான கொடுக்கல், வாங்கல்களை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியானது மக்களின் சேமிப்புக் கணக்குகளிற்கு அதிக வட்டிவீதத்தினை வழங்குவதுடன் தன்னியக்க பணப்பருமாற்று இயந்திரத்தின் இருபத்து நான்கு மணிநேர சேவையினையும் மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளது.

சமுர்த்தி வங்கி வாழ்வாதார செயற்திட்டங்களில் முக்கிய பங்குவகிக்கின்றது. குறைந்த வட்டிவீதத்தில் சுயதொழில் கடன்கள் வழங்கியும் வாழ்வாதார செயற்திட்டங்களை ஊக்கிவிக்கும் நோக்குடன் நேரடியாக சென்று கண்காணித்து வருவதுடன் மக்களை வாராவாரம் சேமிப்பதற்கு ஊக்குவித்தும் வருகின்றது.

கிராமிய வங்கியே ஆரம்பத்திலிருந்து நீண்டகாலாக சேவைகளை வழங்கி வரும் வங்கியாகும். சுயதொழில் கடன்களை வழங்கியும் சேமிப்புக்கணக்குகளிற்கு வட்டி வழங்கியும் வருவது இதன் சேவைகளாகவும் விளங்குகின்ன.

காரைநகர் வாரிவளவில் வசித்துவரும் திரு. ஐங்கரன் தற்போது காரைநகர் சமுர்த்தி வங்கியில் உதவி முகாமையாளராக கடமையாற்றுகின்றார். அச்சு ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் அனுபவம் கொண்ட இவர் யாழ் பல்கலைக்கழக இதழியல் டிப்ளோமா மாணவன் ஆவர். யாழ் பல்கலைக்கழகத்தினூடாக சென்னைப் பல்கலைக்கழகத்திலும், இந்திய பத்திரிகைகளிலும் ஊடக பயிற்சி பெற்றவர்.

## MAP SHOWING THE GN BOUNDARIES WITH IMPORTANT VILLAGE IN KARAINAGAR




1:30.000

| No | G.N Division | No of families | Male | Female | Total Population |
|---|---|---|---|---|---|
| 1 | J/40 Karainagar West | 411 | 613 | 636 | 1249 |
| 2 | J/41 Karainagar North West | 133 | 160 | 214 | 374 |
| 3 | J/42 Karainagar East | 543 | 788 | 855 | 1643 |
| 4 | J/43 Karainagar South East | 165 | 203 | 258 | 461 |
| 5 | J/44 Karainagar South | 532 | 769 | 926 | 1695 |
| 6 | J/45 Karainagar South West | 477 | 714 | 796 | 1510 |
| 7 | J/46 Karainagar North | 235 | 323 | 390 | 713 |
| 8 | J/47 Karainagar North East | 540 | 731 | 851 | 1582 |
| 9 | J/48 Karainagar centre | 443 | 615 | 722 | 1337 |
| Total | | 3479 | 4916 | 5648 | 10564 |

நன்றி:CIRM Northern Province

**காரை வசந்தம் 2011 சிறப்புற வாழ்த்துக்கள்**

*With the best compliments*

*from*

**Consult Ranjan**

**Project Management & Construction Services**

**www.consultranjan.com**

# காரைநகர் மண்ணை நெஞ்சில் நிறுத்திய காரை

திருமதி மாதவி சிவலீலன் B.A. (Hons.), M.Phil

ஈழத்தின் வடமாகாணத்திலுள்ள தீவுகளில் ஒன்று காரைநகர். அங்கு களபூமி எனும் கிராமத்தில் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையவர்கள் 1938ஆம் ஆண்டு வைகாசி மாதம் 20ஆம் திகதி செல்லர் - தங்கம் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். எழுத்தாளன் என்ற அடையாளத்துடன் கவிதைத் துறையில் தன்னை இணைத்தபோது தான் பிறந்த நிலத்தின் பெயரையே புனைபெயராக்கி அதனை ஈழத்துக்கும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளுக்கும் அடையாளப்படுத்தியவராக மிளிர்ந்தவர். 'காரை' என்றொருவர் வாழ்ந்தாரெனில் அது இவரையே குறிக்கும். தொடர்ந்து இவரது பிறப்புமண் அலசப்படும். அத்தகைய உயர்வுமிக்க மண்பற்றுமிக்க மனிதராக இவர் வாழ்ந்தார். ஆயினும் காரைநகர் மண்ணுக்கு மட்டுமுரியவராக இவர் தன்னை அடக்கிக்கொள்ள வில்லை. தன்னுடைய பன்முக அறிவால் விகாசித்து நின்றதனால் படித்த பாடசாலைகள், படிப்பித்த பாடசாலைகள், நிறுவனங்கள், ஆசிரியகலாசாலைகள், வாழ்ந்த பிரதேசங்கள் யாவும் இவர் எமக்குரியவரெனச் சொல்வதில் பெருமை கொள்கின்றேன்.

ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் தம்பெயர்களைப் பதிவுசெய்யும் வகையில் எழுத்து வடிவில் பல அறிஞர்கள் நூல்களை ஆக்கியுள்ளனர். அவர்கள் வரிசையில் தனக்கேயுரித்தான பன்முக ஆளுமைகளையும் பலவித இலக்கிய வடிவங்களாக, ஆராய்ச்சி நூல்களாகக் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையவர்கள் பதிவு செய்திருக்கின்றார். ஆரம்பத்தில் தன்னைக் கவிஞராக இனங்காட்டிய இவர் தேனாறு, சங்கிலியம் எனும் இரண்டு கவிதைத் தொகுதிகளுக்கும் அடுத்தடுத்து இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றிருந்தார்.


தணியாத அறிவுவேட்கையும் இயல்பாக அமைந்த எழுத்தாற்றலும் பத்திரிகை ஆசிரியராக, ஆய்வாளராக இவர் உருப்பெற வழிவகுத்தன. இவைதவிர நாடகப் பின்புலத்தில் வாழ்ந்த காரணத்தால் நாட்டுக்கூத்து, நாடகம் என்பவற்றுடனும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இலக்கிய முயற்சிகள் ஒருபுறமிருக்க மறுபுறம் தொழில் அடிப்படையில் ஆசிரியர், அதிபர், கல்வி நிர்வாக அதிகாரி, விரிவுரையாளர் முதலாகப் பல பதவிகள் இவரைச் செப்பனிட்டன. இலக்கியத் துறையிலும் தொழில்த் துறையிலும் சிறுகச் சிறுகத் தன் ஆளுமைகளை மெருகேற்றிப் பின்னர் சிறப்புற்று நின்றாரெனலாம்.



கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையவர்கள் யாழ் ஊரி தமிழ்க்கலவன் பாடைசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்றார். இப்பாடசாலைபற்றி கலாநிதி பண்டிதர் க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஈழத்து இசைநாடக வரலாறு எனும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார்.

திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ஒன்று காரைநகர் கிழக்கில் கொட்டைப்புலம் (ஊரி) என்னும் இடத்தில் சிறப்புடன் நடைபெற்று வந்தது. மாதர் எனும் பெரியார் இப்பள்ளிக்கூடத்தை நடாத்தி வந்தார். இவர் முருகேசு ஐயரின் மாணாக்கர், கார்த்திகேயப் புலவரின் சமகாலத்தவர். மாதருடைய மகன் மாத முருகரும் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். இவரைக் கணக்கர் என்றும் அழைத்து வந்தனர். கணக்கர் எடுத்த எடுப்பிலேயே பாடல் செய்யும் வரகவியாக விளங்கினார். மேலே குறிப்பிட்ட இரு பெரியார்களும் காரைநகர் கிழக்கில் சைவத் தையும் தமிழையும் வளர்த்துவந்த காரணத்தால் கிறிஸ்தவ மிசனரிமார் எவ்வளவோ முயற்சி எடுத்தும் இப்பகுதியில் ஒருவரைக்கூட மதம்மாற்ற முடியவில்லை. இப்பகுதி மக்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட கணக்கர் அன்பளிப்புச் செய்த காணியிலேயே ஊரித் தமிழ்ப் பாடசாலை இன்று இயங்கி வருகிறது. இத்தகு செயற்கரிய தொண்டு செய்து வந்த பெரியார்கள் வேறு யாருமல்ல கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்களின் பீட்டனாரும், பேரனாருமேயாவர்.

ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்து இவர் யாழ் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, யாழ் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, கொழும்பு அக்குவேனஸ் பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியன




காரை வசந்தம் சிறப்புற வாழ்த்துக்கள்

# FOR ALL YOUR REAL ESTATE NEEDS

## WORKING TOWARDS YOUR SATISFACTION

# SUMAN THARMARAJAH

## SALES REPRESENTATIVE

## 416-725-0527

## sumanthar@gmail.com



**HOMELIFE/CHAMPIONS REALTY INC., BROKERAGE**

**206-8130 SHEPPARD AVE E**
**SCARBOROUGH, ON**
**M1B 3W3**
**BUS: 416-281-8090**
**FAX: 416-281-2753**

HOMELIFE
HIGHER STANDARDS

வற்றில் கல்வி கற்று லண்டன் பட்டதாரியானார். மேலும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நாடகத் துறை டிப்ளோமாவையும், பின்னர் முதுகலைமாணிப் பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி, சிங்களம் ஆகிய மொழிகளில் மிகவும் பாண்டித்தியம் பெற்றிருந்தமையால் பன்மொழித் திறமையும் கூடிப் பன்முக அறிவு சார்ந்தவராக விளங்கினார்.

1960ஆம் ஆண்டில் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கிய இவர் பின்னர் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார். அவற்றைப் பின்வருமாறு வரையறுத்துக்கொள்ளலாம்.

ஆசிரியர்: புனித யோசப் கல்லூரி - மருதானை கொழும்பு
கேகாலை ஹெம்மாதகம முஸ்லிம் மகாவித்தியாலயம்
கேகாலை மாவனல்ல சாஹிராக் கல்லூரி
யாழ் தேவரையாளி இந்துக் கல்லூரி
யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி
யாழ் இந்துக் கல்லூரி
கல்லூரி அதிபர்: யாழ் காரைநகர் இந்துக் கல்லூரி
விரிவுரையாளர்: பலாலி ஆசிரியர் கலாசாலை
சிரேஷ்ட விரிவுரையாளர் (S.L.E.A.S. – II) கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
ஆசிரியர் கலாசாலை அதிபர்: தலவாக்கலை ஆசிரியர் கலாசாலை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இடைவரவு விரிவுரையாளர்: யாழ் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் (உளவியல்)
யாழ் பல்கலைக்கழகம் (நாடகமும் அரங்கியலும்)
யாழ்ப்பாணக் கல்லூரி (இந்துநாகரிகம்)
யாழ் பலாலி ஆசிரியர் கலாசாலை (கல்வியியல், உளவியல்)

யாழ்ப்பாணப் பிரதேசக் கவிஞர்களிடையே மரபு முறைக்கும், வசனக் கவிதை நடைக்கும் இடையில் உரசல் ஏற்பட்ட காலகட்டத்தில் மூத்த கவிஞர்களுடன் இணைந்து செயற்பட்டவரென இவர் பற்றி ஈழநாடு ஆசிரியர் சசிபாரதி குறிப்பிட்டுள்ளார். எழுத்து வடிவில் இருந்த கவிதைக்கு மேடை அந்தஸ்துக் கொடுத்துக் கவியரங்கமாக மாற்றிய குறிப்பிடத்தக்க ஈழத்துக் கவிஞர்களிடையே இவருக்கும் முக்கிய பங்குண்டு. இதுபற்றி கல்வயல் வே. குமாரசாமி குறிப்பிடும்போது 'வடநூற்றுறையும் தென்திசைத் தமிழும் விதிமுறை பயின்ற நெறியறி புலவ!' எனக் காரை சுந்தரம்பிள்ளை பற்றிச் சொல்லித் தொடர்ந்து,

'பனி பொழிய மழைபொழிய
பாலை நிலாப் பொழிய இனிய பல இரவு
பகல்!
அன்றெல்லாம் ஒன்றாக இ. நாகராஜன்
கந்த வன மம்பி
அரியாலையூர் ஐயாத்துரை
என்றிவர்களொடு ஒன்றாக நானும்
கனி அமுதக் கவிதைகளை
அரங்கேற்றி அரங்கேற்றி ...........'

எனத் தன் அனுபவங்களைப் பதிவு செய்துள்ளார். இச்சந்தர்ப்பத்தில் செங்கை ஆழியான் குறிப்பிட்டுள்ள கருத்தையும் இங்கு பதிவு செய்வது பொருத்தமெனலாம்.

காரையின் பல புரட்சிக் கவிதைகளைக் கவனத்திற்கும் எடுக்காத ஆய்வாளர் உலகு, அவரின் இயற்கை அழகு, காதல், பக்தி சம்பந்தமான கவிதைகளைச் சுட்டிக்காட்டி ஈழத்துக் கவிதாவுலகில் அவரைச் சரியான கவிதாபீடத்தில் அமர்த்தவில்லையோ என்ற ஆதங்கம் எனக்குண்டு'.

இவரது 'சங்கிலியம்' நூலிற்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் 'கம்பர், பாரதியார், பாரதிதாசன் போன்ற தமிழ்ப் புலவரின் பரம்பரையிலே வந்த கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் காலத்துக்கேற்ற வகையில் அரியதொரு காவியம் படைத்துள்ளார். இந்தக் காவியத்தின் மூலம் ஈழத்துக் கவிஞர் வரிசையில் சிறப்பிடம் பெறுகிறார்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

'இந்துநாகரிகத்திற் கலை' எனும் ஆய்வு நூலுக்கு அணிந்துரை எழுதிய இவரின் ஆசிரியர் நாரந்தனை ஆ. சபாரத்தினம் பின்வருமாறு கூறுகின்றார். 'தமிழும் வடமொழியும் வரலாறும் அரிய கல்விசார் அத்திபாரமாயமைந்த மேற்புல பயிற்சி விளைவாகிய ஒழுங்காற்றில் (Academic Discipline) பெற்ற சுந்தரம்பிள்ளை பட்டப்படிப்பு மாணவர்களுக்குப் பல ஆண்டுகளாக இந்துநாகரிகம், நுண்கலைகளைப் போதித்து அனுபவம் பெற்றவர். இந்திய கலாதத்துவம், கலை விமர்சனம், கலை வரலாறுகளை ஐரோப்பிய கலைநெறியுடன் ஒப்பிட்டு ஆராயும் ஆற்றல் பெற்றவர்'.

'ஈழத்து மலையகக் கூத்துக்கள்' எனும் நூலுக்கு அணிந்துரை எழுதிய விமர்சகர் திரு. மு. நித்தியானந்தன் 'மலையகத்தில் பணியாற்றிய அனுபவத்துடன் மாலையகக் கூத்துக்களை முறையாகக் கள ஆய்வுகள் மூலம் விரிவாக ஆராய்ந்து இந்த அரிய நூலைத் தந்திருக்கும் காரை. செ. சுந்தரம்பிள்ளைக்கு மலையகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது' என்கின்றார்.

அனைத்துக்கும் மேலாக 'வட இலங்கை நாட்டார் அரங்கு' நூலுக்கு அணிந்துரை வழங்கிய போராசிரியர் கா. சிவத்தம்பி 'ஆய்வு கருக்கொண்ட நிலையில் சுந்தரம்பிள்ளை என் பார்வைக்குள் வந்தார். ஆலோசனைகளை அறிவுறுத்தல்களைக் கொள்ளாது. உந்து பலகையாகக்கொண்டு உழைத்தார். பலன் தாடன வலுக்கொண்ட இந்த ஆய்வு' எனக்கூறுகின்றார்.

இவ்வாறு பலராலும் பாராட்டப்பட்ட இவரது ஆளுமை இன்று ஆய்வுப் பொருளாக ஆராய்ச்சி செய்யப்படுகின்றது. அதாவது கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் சுந்தரலிங்கம் சந்திரகுமார் எனும் ஆய்வு மாணவன் தனது முதுகலைப் பட்டத்திற்கு இவர் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புப்பற்றிய ஆய்வினை மேற்கொண்டுவருகின்றார்.

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையின் இலக்கிய நூல்களையும், ஆய்வு நூல்களையும் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

கவிதை நூல்கள்: தேனாறு, சங்கிலியம், தவம், உறவும் துறவும், பாதை மாறிய போது, காவேரி

ஆய்வு நூல்கள்: ஈழத்து இசைநாடக வரலாறு, இந்துநாகரிகத்திற் கலை, நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், சிங்களப் பாரம்பரிய அரங்கு, வட இலங்கை நாட்டார் அரங்கு, ஈழத்து மலையகக் கூத்துக்கள்

பதிப்பித்த நூல்கள்: விவேக சிந்தாமணி உரைநடை, நாடகதீபம், உளவியல், கல்வியியல் புள்ளிவிபரவியல்

இந்நூல்களிலே தேனாறு, சங்கிலியம், ஈழத்து இசைநாடக வரலாறு, நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், இந்துநாகரிகத்திற் கலை என்பன இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றன. இந்துநாகரிகத்திற் கலை, நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் வடகிழக்குமாகாண அரசின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றன. உதிரிகளாகவும் இவரது இலக்கிய செல்நெறியில் பல பரிசில்களைப் பெற்றிருக்கின்றார். அந்த வகையில் யாழ் மாநகர சபை 1969 இல் நடாத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசாகத் தங்கப் பதக்கம், சுதந்திரன் பத்திரிகை நடாத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு, தமிழ் காங்கிரஸ் நடாத்திய கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசு, யாழ் மாநகரசபை 1982இல் நடாத்திய மன்றக் கீதத்திற்கான கவிதைப் போட்டியில் முதற்பரிசுக்கான கேடயமும், பொற்கிழியும், ஈழநாடு தினசரிப் பத்திரிகை 1970இல் சமர்ப்பித்த ஆய்வுகளில் சிறந்த ஆய்வு எனக் கருதிக் கிடைத்த தம்பிமுத்து கனகசுந்தரம்பிள்ளை நினைவு விருது என இவர் பெற்ற பரிசு விபரங்கள் தொடர்கின்றன. மேலும் யாழ் மாநகரசபைக் கீதமும், யாழ் தாதியர் பயிற்சிக் கல்லூரிக் கீதமும் இவரால் ஆக்கப்பட்டு இன்றும் பாடப்பட்டுவருகின்றன.

இவரது இன்னுமொரு ஆளுமைச் சிறப்பாக நாடகங்கள் மீது கொண்ட ஈடுபாட்டையும் கூறலாம். நடிகனாக, நாடகப் பிரதியாளனாக, நாட்டுக்கூத்து நெறியாளனாகத் தன்னை விரிவுபடுத்தியிருந்தார். இதன் அடிப்படையில் இவரால் மேடையேற்றப்பட்ட நாடகங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

சமூக நாடகங்கள்: தரகர் தம்பர், தம்பி படிக்கிறான், வாழ்வும் தாழ்வும், சினிமா மோகம், சித்திரமே சித்திரமே

இதிகாச புராண நாடகங்கள்: பக்த நந்தனார், கர்ணன், சகுந்தலை, தமயந்தி, வில் ஒடித்த விதுரன், சிற்பியின் காதல் ஆட்டக் கூத்துக்கள்: பாஞ்சாலி சபதம், மூவிராசாக்கள், முத்தா மாணிக்கமா, காமன் கூத்து சிறுவர் நாடகங்கள்: மூத்தோர் சொல் வார்த்தை அமுதம், பாவம் நரியார்

ஆசிரியர் கலாசாலை அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதன் பின் இவர் தமிழ் நாட்டுக்குச் சென்று நாட்டுக்கூத்துச் சம்பந்தமான பல ஆய்வுகள் மேற்கொண்டதுடன், பல்கலைக்கழக மட்டத்தில் கருத்தரங்குகளையும் மேற்கொண்டிருந்தார். குறிப்பாகச் சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை அமெரிக்கன் கல்லூரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரி ஆகியவற்றில் கருத்தரங்குகளை நடாத்தியதுடன், மாணவர்களுடன் இணைந்து கள ஆய்வுகளையும் செய்திருந்தார்.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் மாணவர்களால் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்ற 'வளர்நிலை' தமிழ் நூலின் ஆலோசகர் குழுவிலும் அங்கம் வகித்திருந்தார். புலம்பெயர்ந்து இலண்டனில் வசிக்கும் காலப்பகுதியில் தீபம் தொலைக்காட்சி, ஐ.பி.சி. வானொலி ஆகியன இவரது கடந்தகால தமிழ், தமிழ்நாட்டுக்கூத்துக்கள் பற்றிய செயற்பாடுகளைச் செவ்வி கண்டிருந்தன.

காரைமண் தந்த மிகச் சிறந்த அறிஞராகிய இவர் 21.09.2005 இல் இலண்டனில் அமரத்துவமடைந்தார்.

**கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் பார்வையில்**

# கவிஞர் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை

காரைநகர் தந்த கவிஞர் திரு. செ. சுந்தரம்பிள்ளை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். இருபது வயதிலேயே இலண்டன் பல்கலைக் கழக பீ.ஏ. பட்டம் பெற்றவர். தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரிடமும் பண்டித வித்துவான் க.கி. நடராசாவிடமும் பண்டைய இலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் நன்கு கற்றவர். சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி மிக்கவர். ஆங்கில சமஸ்கிருத இலக்கியங்களில் நல்ல பாண்டித்தியமுடையவர்.

கவிஞர் சுந்தரம்பிள்ளையின் கவிதைகளை எல்லாப் பத்திரிகைகளும் விரும்பி வெளியிட்டன. சமூக சீர்திருத்தக் கருத்துக்களை இவரது கவிதைகள் பெரிதும் கொண்டிருக்கக் காணலாம். 1967ஆம் ஆண்டு பதுளை பாரதி கல்லூரி நடத்திய அகில இலங்கைக் கவிதைப் போட்டியில் முதற் பரிசாகத் தங்கப் பதக்கம் பெற்றவர்.

'சுதந்திரன்' நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசும் தமிழ்க் காங்கிரசு நடத்திய கவிதைப் போட்டியிற் சிறப்புப் பரிசும் பெற்றுத் தன்னை ஒரு நல்ல கவிஞராக நிலைநாட்டியவர்.

கவிஞர் மட்டுமன்றி அவர் ஒரு நகைச்சுவைப் பேச்சாளருமாவர். நல்ல தமிழ் அன்பர் சிறந்த பண்பாளர்.

சுந்தரம்பிள்ளை, இ. நாகராசன், அரியாலையூர் வே. ஐயாத்துரை, கல்வயல் வே. குமாரசாமி ஆகியோரும் நானும் ஒரு குழுவாக அதிகமான கவியரங்குகளை நடத்தியிருக்கின்றோம். கவிதை இரசனையை பொதுமக்கள் மத்தியில் வளர்த்தெடுத்ததில் எமது பங்கு அளப்பரியது.

ஆசிரிய ஆலோசகர் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், நாடக - அரங்கக் கல்வித் தகைமைச் சான்றிதழ் ஆகிய மூன்று தேர்வுகளுக்கும் ஒன்றாகச் சேர்ந்து படித்துச் சித்தி பெற்ற ஒருமைப்பாடும் எமக்குண்டு. நாடகக் கல்வி கற்ற காலத்தில் இருவரும் தெகிவளையில் இரண்டு வருடங்கள் ஒன்றாகவே இருந்தோம்.

நண்பர் சாந்துணையும் கற்றுக்கொண்டேயிருந்த கல்விமான். தொடர்ந்து படித்து M.Ed., M.Phil., Ph.D. ஆகிய பட்டங்களையும் பெற்றுக் கொண்டவர்.

இலக்கிய ஆக்கங்களாக தேனாறு, சங்கிலியம், தவம், உறவும் துறவும், பாதை மாறியபோது, காவேரி ஆகியவற்றைத் தமிழுக்குத் தந்திருக்கிறார்.

சுந்தரம்பிள்ளை நல்லதொரு நாட்டுக் கூத்து நடிகருமாவர். பல நாடகங்களில் நடித்த அனுபவமுடையவர். ஈழத்துக் கூத்து மரபை நன்கு அறிந்தவர். நாடகக் கலையைப் பல்கலைக் கழக மட்டத்திற் படித்தவர். அதனால் மிகுந்த தகைமையோடு நாடகத் துறையிலும் தனது கைவண்ணத்தைக் காட்டியிருக்கின்றார். சமூக சமய நாடகங்கள், ஆட்டக் கூத்துகள், சிறுவர் நாடகங்கள் எனப் பலவகையான நாடகங்களை மேடை யேற்றியிருக்கின்றார்.

ஈழத்து இசைநாடக வரலாறு, இந்து நாகரிகத்திற் கலை, நடிகமணி வி.வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், சிங்களப் பாரம்பரிய அரங்கம், மலையகக் கூத்து மரபு முதலிய ஆய்வு நூல்களால் நாடகத் தமிழுக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.


இவரது ஆக்கங்களில் தேனாறு, சங்கிலியம், ஈழத்து இசைநாடக வரலாறு, நடிகமணி வி.வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், இந்து நாகரிகத்திற் கலை ஆகியன இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசுகள் பெற்றவை. இவற்றுள் சங்கிலியம் ஈழநாடு நாளிதழ் அதன் 10ஆவது நிறைவுக் கொண்டாட்டத்தையொட்டி 1970ல் நடத்திய காவியப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றதுமாகும்.

இந்து நாகரிகத்திற் கலை, நடிகமணி வி.வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் ஆகிய இரண்டுக்கும் வடகிழக்கு மாகாண சாகித்தியப் பரிசுகளும் கிடைத்துள்ளன. யாழ் மாநகர சபை 1982ல் நடத்திய சபைக்குரிய கீதத்தை எழுதும் போட்டியில் சுந்தரம்பிள்ளையின் கீதமே தெரிவு செய்யப்பட்டது. அதற்கான முதற் பரிசும் அவருக்கு வழங்கப்பெற்றது.

இவ்விதம் விருதுகள் பல பெற்ற வித்தகக் கவிஞரும் அறிஞருமாகிய அரிய நண்பர் 21.09.2005ல் காலமாகியது கவலைக்குரியது.

வி. கந்தவனம்

# நேற்றும், இன்றும் நாளையும்...





கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

உலகின் முதலாவது 24 மணி நேர தனித் தமிழ் ஒலிபரப்பு

CTBC

88, Laird Drive
Toronto, Ontario
M4G 3V1

Tel: 416 - 429 - 2822
Fax: 416 - 429 - 2899
www.ctbc.com
E-mail:info@ctbc.com


Delta Limousine Services
Best Limousines in Town
Discounts available for All Day Packages
SERVICES
* Weddings
* Casino
* Birthday
* Parties
* Airport
* Night Out
* Niagara Tours
* City Wine Tours
* Meet & Greet
* Stork Services
* Corporate Functions
* Proms / Graduations
Bala or Raj
1677 Wilson Ave., Toronto, ON, M3L 1A5
Tel:905.677.6006, 647.802.5466
Toll Free:1.877.677.6006 Fax:647.438.6160
email: info@deltalimousineservices.com
Web: deltalimousineservices.com
Open 24 Hrs
7 Days A Week

# ஈழத்துச் சங்கநூற்செல்வர் திரு. சு. அருளம்பலவனார் அவர்களின் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரைக்கு எழுதப்பட்ட மதிப்புரை

**அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர், சித்தாந்தப் பேராசிரியர், விரிநூற்புலவர், உரைவளம் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகரவர்களால் எழுதப்பெற்றது.**

பதிற்றுப்பத்து எட்டுத்தொகை நூல்களில் ஒன்று. விழுமியநடை பழுநியசொல் கருத்தாழம் தன்மையொடு மருவிய கற்பனைத்திறம் வரலாற்று நுணுக்கம் முதலிய பல்லாற்றானும் பழமையும் செறிவும் உடையது. புலவர்கள் புலத்தாழம் காணும் அளவுகோலாக அமைந்தது. சேரமன்னர் எண்மருடைய மரபு மாண்பு வீரம் வெற்றி கொடை முதலிய வாழ்க்கை வரலாற்றை ஒரு சேர அறிந்து கொள்வதற்குப் பெருந்துணையாவது. பாடாண்திணை ஒன்றையே கூறும் நூறு பாடல்களையுடையது என நச்சினார்க்கினியர் கூறுவர்.

வரலாற்றுக்கருவூலமாகிய இந்நூலின் கருத்தாழத்தை அறியப் பரந்துபட்ட சங்க இலக்கிய அறிவும் தமிழக வரலாற்று நுண்மதியம் மிகமிக இன்றியமையாதன. இதற்கு ஊன்றுகோலாக மிகப்பழமையான அரும்பதவுரை ஒன்று உள்ளது. அது அரும்பதக்குறிப்புமாகாமல் பொழிப்புரையு மாகாமல் தேவையான இடங்களுக்குச் சொன்னயமும் பொருளும் இலக்கணக் குறிப்பும் தந்துசெல்கிறது.

இந்நூலை முதற்கண் பதிப்பித்த என் ஆசிரியப் பெருந்தகை மகாமகோபாத்தியாய ஐயர் அவர்களின் முற்சேர்க்கையும் பிற்சேர்க்கையும் அடிக்குறிப்பும் ஒப்புமைப் பகுதிகளும் பாடற்பொருளை அறிதற்குப் பெரிதும் துணைசெய்வன. ஆனாலும் தொடர்புறுத்திப் பொருளுணரும் வகையில் எல்லாருக்கும் இடர்ப்பாடு இருந்துகொண்டுதான் இருந்தது.

அடியேன், வித்துவான் புலவர் B.O.L ; M.A. மாணவர்கட்குப் பாடம்சொல்ல நேர்ந்தபோது யான் ஐயரவர்களிடம் கேட்டறிந்த காலத்தைக்காட்டிலும் சொற்றொடர்பு கண்டு பொருளமைதி கொண்டு ஆய்ந்துணர்ந்து அறிவிக்கமாட்டாமையால் சிற்சில இடங்களில் இடர்ப்பட நேர்ந்ததும் உண்டு. அதனை ஐயரவர்களுடைய வழிவழிப் பதிப்புக்களும் பின்னெழுந்த சேரர் வரலாற்று நூல்களும் செந்தமிழ்க் கட்டுரைகளும் பிறநூற் பதிப்புக்களில் எடுத்தாண்டுதவிய விளக்கங்களும் மாருதி தேடித்தந்த மருத்துமலையாகப் பயன்பட்டன. ஆனாலும் இந்நூலுக்குச் சிறந்த விருத்தியுரையில்லையே என்ற குறை இடைக்கிடை தோன்றிக்கொண்டுதான் இருந்தது.

இந்நிலையில் எங்கள் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பணிபுரிந்த வித்துவான் சிந்தாந்தகலாநிதி உயர்திரு ஔவை. துரைசாமிப்பிள்ளையவர்கள் தக்கதோருரை தந்தார்கள்.

இதுபோழ்து, நுண்மாண் நுழைபுலமும் சங்க இலக்கியங்களில் முறையான பயிற்சியும் பழையவுரையாசிரியர்கள்பால் மாறாத பற்றும் புலவரைப் போற்றும் பண்பும் செருக்கற்ற சிந்தையும் உடைய அன்பர், யாழ்ப்பாணம் **காரைநகர் பண்டிதர் சு. அருளம்பலவனார்** அவர்கள் சிறந்தவுரையைச் செந்தமிழுலகிற்கு அளிக்கின்றார்கள்.

பொதுவாக நூல்களுக்குத் தாம்பெற்ற பலதுறையறிவைப் பலரும் கண்டு மதிக்க எழுந்தவுரைகளும், படிப்பார் தகுதியறிந்து அவர்கட்குத் தேவையான அறிவுவேட்கையையகற்றும் உரைகளும், பலர்கண்ட நுணுக்கங்களைத் தமவாக்கிக்கொள்ள பொருளீட்ட பதவுரையைப் பொழிப்புரையாக்கிப் பொழிப்புரையைப் பதவுரையாக்கி எழுந்தவுரைகளும் எடுத்த நூற்கருத்தொடு ஒட்டியவாக எட்டப்பறந்து சென்று படிப்பவர்களைக் கண்காணாத் தூரம் இழுத்துச் சென்று மயங்கவைக்கும் உரைகளும் ஆகப் பலவகை உரைகள் எழுந்தன. அவை போலாது இந்நூலுரை நூலெழுந்தகாலத்துப் பழமையோடு ஒன்றித் தேவைக்கு வேண்டிய அளவு தன்னுரையானும் பிறநூலானும் கருத்தை விளக்கிச் செல்கின்றது.

இவ்வுரையாசிரியர் தாம் இடர்ப்பட்ட இடத்தும் தமது விளக்கத்தைப் புகுத்தக்கருதிய இடத்தும் பாடத்தைத் தம் விருப்பம்போல மாற்றிக்கொள்ளாமல் மரபுவழிவந்த பாடப்போக்கிலேயே இவ்வுரையை நடத்திச்செல்வது இவரது நாணயத்திற்கு நல்ல எடுத்துக்காட்டு.

இவ்வுரை ஒவ்வொரு பாடலுக்கும் பதவுரை, முடிபு ஆராய்ச்சியுரை பழையவுரை ஒப்புமைப்பகுதி மேற்கோள் என்ற ஆறுபிரிவாக எழுதப் பெற்றுள்ளது. பழையவுரை தந்த வளர்ச்சியே தம்முரையென்பதைப் பலவிடங்களில் படிப்போருக்கு வற்புறுத்திச் செல்கின்றது.

பதவுரை மாற்றுச்சொல்லாகமட்டும் அமையாமல் கருத்தறிய உதவும் வழக்குச் சொல்லால்

தேவைக்குமிகாமல் உருபு முதலியவற்றை வேண்டியவிடத்து விரித்து மரபு பிழையாது விளக்கமாக அமைந்திருக்கிறது.

முடிபு பாடத்திற் கருத்தைத் தொகுத்துணர உதவும் திறவுகோல். இதில் எங்கேயாவது தேய்வு வளைவு ஒடிவு பிசிர் இருக்குமாயின் பாட்டுப் பூட்டுத்திறக்காது. இதனை நன்றாக மனத்திருத்தி உரையாசிரியர் முடிபுகளைத் தொகுத்திருக்கிறார்.

உண்மை காணவும் உறுதியான அறிவு பெறவும் உதவுவது ஆராய்ச்சி. எடுத்த கருத்து மணிகள் ஆராய்ச்சிச் சாணையிற் றீட்டப்பட்டாலல்லது ஒளிராது. ஆகையால் இவ்வுரையாசிரியர் தம் கருத்துக்கொத்த - வலியுறுத்தக்கூடிய விளக்கங்களைப் பலநூல்களினின்றுந் தந்து செல்வது மிக உயர்ந்த முயற்சியாகும்.

பழையவுரை பழம் பதிப்புக்களிலுள்ளபடியே திருத்தமாகக் கொடுக்கப்பெற்றுள்ளது. புதியவுரையின் விரிவும் நயமும் உணரத் துணைசெய்கின்றது.

சற்றேறக்குறைய காலத்தால் ஒத்த சங்க இலக்கியங்களில் இந்நூற் கருத்துக்களும் சொற்றொடர்களும் எங்ஙனம் பரந்து வேரூன்றியுள்ளன என்பதை அறியவும் அக்காலத்து மரபுகளைத் தொகுத்துணரவும் பொருள்கொள்ளும் வகையில் துணிவு பிறக்கவும் ஒப்புமைப்பகுதிகள் மிக இன்றியமையாதன. இதனை நன்கெழுதவேண்டுமாயின் பரந்த சங்க இலக்கிய அறிவும் உரையாசிரியர்களின் நுணுக்கமான உரைகளில் நினைவுவன்மையும் பெரிதும் தேவை. அவற்றில் இவ்வுரையாசிரியர் முழுவெற்றியுடன் விளங்குகின்றார் என்பதை இவ்வுரை தெளிவாகக் காட்டுகின்றது.

இலக்கணவுரையாசிரியர்கள் தமதுரைகளில் ஆங்காங்கு எடுத்தாண்ட பகுதிகளை ஆங்காங்கே காட்டியிருப்பது உண்மையுணரப் பெரிதும் உபகாரப்படுகிறது.

இவ்வண்ணம் அமைந்த இவ்வுரைப்படைப்பு பல்லாற்றாலும் அறிஞர் உலகிற்கு நல்விருந்தாகும்.

இன்னும் பல நயங்களும் உரை நுணுக்கங்களும் மிளிர்கின்றனவாயினும் ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக (தாலி புலாக நியாயமாக) சிலவே எடுத்துக்காட்டினோம். ஆகவே இப்புதியவுரை ஏனையவுரைகளைக் காட்டிலும் பல்லாற்றானும் சிறப்பெய்தி விளங்குகின்றதெனலாம்.

இவ்வண்ணம் பதிற்றுப்பத்துக்குச் சிறந்தவுரையெழுதிச் செந்தமிழுக்குச் சிறப்புத்தந்த ஞானச் செல்வம் அருளம்பலவனார் அவர்களுக்கு எல்லா நலனும் தந்து இனிது காக்க என ஞானமா நடராசப் பெருமான் திருவடியினைப் போற்றுகின்றேன்.

## பண்டிதமணி சு. அருளம்பலவனார்



தமிழிலும் சமயத்துறையிலும் பண்டிதமணி அருளம்பலவனாரின் பங்களிப்பு ஈழத்து வரலாற்றில் ஓர் மைல் கல்லாகும்.இவர் தனது 18வது வயதில் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று ஆசிரியராக விளங்கினார்.மாணவர்களுக்கு சைவத்தையும் தமிழையும் சிறந்தமுறையில் போதித்ததுடன் நிற்காது சமயத்துறையில் மிகுந்த ஈடுபாடு காட்டி பல ஆய்வுகளை மேற்கொண்டார்.இவர் முதலில் திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையை எழுதி வெளியிட்டார்.பின்னர் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையை இரு பாகங்களாக வெளியிட்டார்.இதனால் இவருக்கு பண்டிதமணி என்ற பட்டம் வழங்கப்பட்டது.இவரது ஆராய்ச்சியுரை 1961ஆம் ஆண்டு இலங்கை அரசின் சாகித்திய மண்டல பரிசினைப்பெற்றது.அதன்பின்னர் திருவாசக ஆராய்ச்சியுரையை எழுத ஆரம்பித்தபோது உடல்நலம் குன்றியநலையில் அவரது அகத்துணைவியாரின் ஒத்துழைப்படன் ஆராய்ச்சியுரையினை நிறைவேற்றினார்.இவ்வுரைக்கும் 1973ஆம் ஆண்டு மீண்டும் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தமை பெருமைக்குரியதாகும்.தமிழுக்கும் சைவத்துக்கும் இவர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியதாகும்.இவரது இவ் ஆராய்ச்சியுரைகள் இலங்கை பல்கலைக்கழகத்திலும் தமிழகத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பாடநூல்களாக விதந்துரைக்கப்பட்டுள்ளமை காரைநகருக்கு பெருமைதரக்கூடியதாகும்.காரைநகர் மக்கள் இவருக்கு பெரும்பாராட்டு விழா எடுத்து பொற்கிளி வழங்கியதுடன் சங்கநூற்செல்வர் என்ற பட்டமும் அளித்து மகிழ்ந்தனர்.

காரை வசந்தம் 2011 சிறப்புற வாழ்த்துக்கள்

*With the best compliments*

*from*

லிங்கராஜன் நாகலிங்கம்

பலகாடு, காரைநகர்

# Kajanth Grocery

***Video - Vegetable - Money Transfer, Meat***



துரித பணமாற்றுச் சேவை, உலர் உணவுப் பொருட்கள்,
உடன் மரக்கறி, கோழி, ஆட்டு இறைச்சி,
கணவாய், இறால், மீன்
இன்னும் பல.........





**S&Rentals of**
**Tamil Movies**
**Audios & CD's**
**Video Transfer**
**from any Systems**

*தமிழ்ப் படங்கள்*
*ஓடியோக்கள், சீடிக்கள்*
*மற்றும் வீடியோ பிரதிமாற்றம்*

*Kumar*

**Tel: 416- 240- 0039**

**1708 Jane St. Weston, Ont. M9N 2S4**
**(Jane & Lawrence)**

# DURCAA SUPERMARKET

QUALITY YOU CAN TRUST



Tel: 905.796 6762



86 Kennedy Road
Brampton, ON



*With the best compliments from*

We Clean Green
Environmentally
Responsible Company

# FRAZ ENTERPRISES INC.

Professional Carpet & Upholstery Cleaning Services

Why go green?

* Janitorial Services
* Office Cleaning Specialist
* Carpet Cleaning Commercial or Residential
* Environmentaly responsible
* Clean Green
* Certified and Insured
* 24 Emergency Services at 416-807-5817
* On Time

**Afraz Mohammed**

**Tel:905-799-5817 Fax:905-799-6491**

**www.frazenterprises.ca**

by:gtm365.com 647-706-6611




தனித்துவமான துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்

# மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

**பொன்விழா கண்ட நிறுவனம்**



53 ஆண்டுகள் வணிகத் துறையிலும்
20 ஆண்டுகள் கனடாவில்
தனித்துவமான பணமாற்றுச் சேவையிலும்
தமிழ் மக்கள் இதயங்களில் இடம் பிடித்தவர்கள்

**இரு இடங்களில் சேவை**

3228 Eglington Ave. East
Suite # 3 (Markham & Eglinton)
Scarborough, ON, M1J 2H6


Tel: 416.267.8221

3351 Markham Road,
Suite #109 (Markham & Steels)
(Red building on Markham Rd)
Scarborough, ON, M1X 0A6

Tel: 416.321.8221

# Find your Dream Home with

NANO COMPUTER



- Residential
- Commercial
- Downtown Condos
- Investment Properties
- Lands for Sale

**Call for Free Home Evaluation**

HOMELIFE HIGHER STANDARDS

## HomeLife/Future

**Realty Inc., Brokerage***

**Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8**

**Tel : 905-201-9977 Fax : 905-201-9229**

Independently Owned and Operated

## Raj Nadarajah

**Nagendrarajah**

Sales Representative


## 416-333-6115

**nanohomes@gmail.com**



# குமார் ஒருவர் துறைகள் இரண்டு

✱ கல்விச் சேமிப்புத் திட்டம் ✱ காப்புறுதி



RBC Insurance BMO Manulife Financial Industrial Alliance Pacific Canada Life™

## மேலும் பல காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதி

கட்டிய பணம் திரும்பப் பெறக்கூடிய ஆயுள் காப்புறுதி **Life Insurance**

✱ **Term Life Insurance**

✱ **Permanent Life Insurance**

இதுவரை மரணத்தைத் தழுவிய சிலருக்கு ஐந்து நாட்களில் ஆயுள் காப்புறுதித் தொகையைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்

**Kumar**
**Tel: 416-491-4558**
**Cell: 416-566-7924**

**Critical Illness Insurance**

Heart Attack, cancer, stroke or Coronary Artery Bybass Surgery போன்ற 22 வகை நோய்கள் உங்களைப் பீடித்தால் உங்கள் Insurance பணம் முழுவதும் உங்களுக்குக் கிடைக்கிறது. இப்படியான வருத்தங்கள் வரா விடடாலும் நீங்கள் கட்டிய பணம் முழுதும் திரும்பக் கிடைக்கும்.

**Diability Insurance**

வேலை செய்ய முடியாதபடி ஏலாத்தன்மை ஏற்படின் உங்கள் மாத வருமானம் வரக்கூடிய வகையில் Insurance செய்யலாம்.

**Mortgage Insurance**

Mortgage எடுத்த வங்கியில் Mortgage Insurace எடுத்தால் மரணம் ஏற்படும் பட்சத்தில், அந்த நேரத்தில் உங்களுக்கு எவ்வளவு கடன் (Mortgage) இருக்கிறதோ அதை வங்கி கட்டி விடும். ஆனால் எங்கள் Plan, நீங்கள், Mortgage எடுத்த தொகை முழுவதையும் உங்களுக்குச் செலுத்தும். நீங்கள் உங்கள் கடனைச் செலுத்திவிட்டு மிகுதியை வைத்திருக்கலாம் அல்லது முழு Insurance பணத்தையும் வைத்துக்கொண்டு மாதாந்த Mortgage பணத்தைச் செலுத்திக் கொண்டு வரலாம். Mortgage எடுத்த வங்கி மாறினாலும் இத் திட்டத்தில் Insurance தொகையோ அல்லது கட்டுப்பணமோ மாறாது.

## 16 வருடங்களுக்கு மேலாக 7,000க்கும் மேற்பட்டோருக்கு நாம் காப்புறுதி செய்து கொடுத்துள்ளோம்

## வீடுகள், வியாபாரநிலையங்கள் வாங்க விற்க

HomeLife Higher Standards

## Kumar Kathiravelu

Sales Representative

**Cell: 416-566-7924**

E.mail:kumar.k@sympatico.ca



REALTOR® MLS Multiple Listing Service®

**HomeLife/Landmark Realty Inc., Brokerage**

Independently Owned and Operated

**Scarborough Office:**
5200 Finch Ave.E., Suite 206
Toronto, ON. M1S 4Z4
TEL: 416 293 5093
FAX: 419 293 5237

**North York Office:**
75 The Donway West, Suite 708
Toronto, ON. M3C 2E9
TEL: 416 386 1200
FAX: 419 386 1500

**அழையுங்கள்: குமார் 416-491-4558**

**Cell: 416-566-7924 E-Mail: kumar.k@sympatico.ca**

# CAP REIT

## Canadian Apartment Properties Real Estate Investment Trust

We have you covered in Scarborough

1757 Victoria Park Ave
(Victoria Pk & Lawrence)
1,2 Bedrooms from $850
Utilities Included 416-759 9977

10 & 30 Tuxedo Court
(Markham & Ellesmere)
1,2,3 Bedrooms from $929
Utilities Included 416-289 7423

25 Bay Mills Blvd
(Warden & Sheppard)
1,2 Bedrooms from $960
Utilities Included 416-293 0924

215 Markham Road
(Markham &Eglinton)
1,2 Bedrooms from $880
Utilities Included 416-267 5223

370 McCowan Road
(McCowan & Eglinton)
1,2,3 Bedrooms from $905
Utilities Included 416-266 7025

567 Scarborough Golf Club
(Scarborough Golf Club & Lawrence)
1,2 Bedrooms from $865
Utilities Included 416- 431 6994

1050 Markham Rd
(McCowan & Ellesmere)
Jr1,1,2 Bedrooms from $720
Utilities Included 416 - 438 3400

4000/4010 Lawrence Avenue East
(Lawrence & Kingston)
1,2,3 Bedrooms from $825
Utilities Included 416- 724 4040

30 Livonia Place
(Neilson & Ellesmere)
1,23 bedrooms from $870
Utilities Included 416- 281 5353

## மிகவும் தரமான வாடகை குடியிருப்பு

## Visit our website

## www.capreit.net

# VPS Auto Collision Ltd.



- Custom Paint & Body work
- Auto Mechanical and complete shoomping
- Speciallist in Insurance claims
- Unibody frame straighting and more

**Call: Suthaker**

266 Rutherford Road South,
Unit #7, Brampton ON, L6W 3X3

Tel: 905.455.4580, 905.455.5931
Fax: 905.455.5966



Residential and Commercial

# Mortgages

90% வரை இரண்டாம் அடமானம்

கடன் அனைத்துக்கும் ஒரு மாதாந்த கட்டணம்

கிறடிற் ஸ்கோர் குறைவானாலும் மோட்கேச் பெறமுடியும்

416-283-2377 EXT 218



- 1st Mortgage
- 2nd Mortgage to 90%
- Debt Consolidation
- Refinancing

CMP Canadian Mortgage Awards


OBSIDIAN

**MOHAN CANAGASABAI**

Mortgage Agent Lic #M08009713


DIRECT 647-273-3766 FAX 416-283-5820
35 GRAND MARSHALL DRIVE, SCARBOROUGH ON M1B 5W9

Some Conditions Apply. Rates may chance without notice. Brokerage Lic #10473



Graphic Land

Perfection in Designing is our Priority



சகல விதமான அச்சுத் தேவைகளையும்
கண்கவரும் வகையில் கலை வண்ணத்துடன் செய்து கொள்ள
நாடுங்கள்

285 Progress Ave., Unit #5, Scarborough, ON. M1P 2Z3

Bus: 416 412 0900 Cell: 647 219 7576 Fax: 1866 204 2484
Email: graphicland@rogers.com www.graphicland.ca

# Canada's #1 Tamil Newspaper

உங்கள் அபிமான உதயன் பத்திரிகையை உலகத்தின் எந்த இடத்திலிருந்தும் வாசிக்க

www.canadauthayan.ca



www.canadauthayan.ca

UTHAYAN

உதயன்

பிரதம ஆசிரியர்

ஆர். என். லோகேந்திரலிங்கம்

வாரந்தோறும்
பத்தாயிரத்திற்கும்
அதிகமான பிரதிகளையும்,
இலட்சக்கணக்கான
வாசகர்களையும்
தன்னகத்தே கொண்ட
உதயன் பத்திரிகை
பிரதி வெள்ளி தோறும்
கனடாவில்
வெளிவருகின்றது.



Tel:416-752-1524

Fax: 416-752-6703

E-mail: uthayannews@yahoo.com

885, Progress Avenue, Unit No. 107
Scarborough, ON M1H 3G3

கனடா – காரை கலாச்சார மன்றம் செப்ரெம்பர் 18, 2011 இல் நடாத்திய தமிழ்த்திறன் போட்டியில் பங்குபற்றியோர் விபரம்


தருணிகா பாலசுப்பிரமணியம்


ராகுலன் செந்தூரன்


நிதுஷா சிவபாதசுந்தரம்


ஆருஷன் சுதாகரன்


சிவஜா சிவகரன்


நிந்துஜா மோகனேந்திரன்


நமிகா வசந்தகுமார்


சுபிகா வசந்தகுமார்


நேத்ரா ஆறுமுகநாதன்


சயந்தன் கணேசலிங்கம்


கிரிஜானி நடனசபேசன்


துர்கா சிவகுமார்


ஆதினி விநாயகமூர்த்தி


மாதங்கி மகாராஜா


துளசி தவராஜா


ஜனகன் செந்தூரன்


துளசி யோகேஸ்வரன்


சிவகஜன் சிவகரன்


பவிஷா மோகனேந்திரன்


வாசுகி தயானந்தராஜா


ஸ்ரீராம் ரஞ்சன்


கிரிஷன் பிறைசூடி


கார்த்திக் சிவகுமார்


பிரியங்கா கேதீஸ்வரன்


ஹரினி விநாயகமூர்த்தி


ஆர்த்தி ரமேஷ்


மீரா ஸ்ரீவர்ணசூர்யா


மிதுஷா ஸ்ரீவர்ணசூர்யா


மனோஜ் சிவபாதசுந்தரம்


அனோஜன் சுதாகரன்


தனுஷ்காந்த் யோகேஸ்வரன்


வர்ஷா மணிவண்ணன்


சிநேகா மணிவண்ணன்


ஆரபி ராஜமோகன்


நிலுக்ஷனன் தயானந்தராஜா


ஷாமினி தயானந்தராஜா


அஞ்சனா இந்திரன்


மதுரன் காந்திநாதன்


தனுஷன் மகாராஜா


செழியன் சோதிநாதன்


சிந்தியா வில்வராஜா


மீரா வில்வராஜா


இந்துஜன் பஞ்சலிங்கம்


அனுஷா ஸ்ரீவர்ணசூர்யா


லக்ஷிகா மோகனேந்திரன்


நிஷாந்தி கணேசலிங்கம்


தாரிணி தேவகுமார்


அஜன் இந்திரன்


நிதுஷா பரமானந்தராஜா


ஷிரோமி காந்திநாதன்


மதுரா சோதிநாதன்


மயூரா சோதிநாதன்


காயத்திரி பரமேஸ்வரன்

கனடா – காரை கலாச்சார மன்றம் செப்ரெம்பர் 18, 2011 இல் நடாத்திய தமிழ்த்திறன் போட்டியில்
வெற்றிபெற்றோர் விபரம்

## பண்ணிசைப் போட்டி

### பாலர் பிரிவு

முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம்


துர்க்கா சிவகுமார்


ஆதிஷ் விநாயகமூர்த்தி


மாதங்கி மகாராஜா


சயந்தன் கணேசலிங்கம்


ஆருஷன் சுதாகரன்


நமிகா வசந்தகுமார்

### கீழ்ப் பிரிவு

முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம்


கார்த்திக் சிவகுமார்


பிரியங்கா கேதீஸ்வரன்


ஹரினி விநாயகமூர்த்தி


ஆர்த்தி ரமேஷ்


துளசி யோகேஸ்வரன்


பவிஷா மோகனேந்திரன்

### மத்திய பிரிவு

முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம்


வர்ஷா மணிவண்ணன்


ஹரிணி தயானந்தராஜா


மிதுஷா ஸ்ரீவர்ணசூர்யா


நிலுக்ஷனன் தயானந்தராஜா


மீரா ஸ்ரீவர்ணசூர்யா


ஆரபி ராஜமோகன்

மேற் பிரிவு முதலாம் இடம் இரண்டாம் இடம் மூன்றாம் இடம்


தாரணி தேவகுமார்


லக்ஷிகா மோகனேந்திரன்


நிஷாந்தி கணேசலிங்கம்


அனுஷா ஸ்ரீவர்ணசூர்யா

அதிமேற் பிரிவு முதலாம் இடம் இரண்டாம் இடம் மூன்றாம் இடம்


நிதுஷா பரமானந்தராஜா


காயத்திரி பரமேஸ்வரன்


அஜன் இந்திரன்


ஷிரோமி காந்திநாதன்

## பேச்சுப் போட்டி

பாலர் பிரிவு முதலாம் இடம் இரண்டாம் இடம் மூன்றாம் இடம்


துளசி தவராஜா


துர்கா சிவகுமார்


சயந்தன் கணேசலிங்கம்

கீழ்ப் பிரிவு முதலாம் இடம் இரண்டாம் இடம் மூன்றாம் இடம்


துளசி யோகேஸ்வரன்


பவிஷா மோகனேந்திரன்


வாசுகி தயானந்தராஜா


ஜனகன் செந்தூரன்

மத்திய பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  தனுஷ்காந்த் யோகேஸ்வரன் |  ஆரபி ராஜமோகன் |  வர்ஷா மணிவண்ணன் |

மேற் பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் |
|---|---|
|  நிஷாந்தி கணேசலிங்கம் |  இந்துஜன் பஞ்சலிங்கம் |

அதிமேற் பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  நிதுஷா பரமானந்தராஜா |  மதுரா சோதிநாதன் |  மயூரா சோதிநாதன் |

## வாசிப்பு போட்டி

பாலர் பிரிவு

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|
|  துர்கா சிவகுமார் |  துளசி தவராஜா |  கிரிஜானி நடனசபேசன் |

**கீழ்ப் பிரிவு**

முதலாம் இடம்



வாசுகி தயானந்தராஜா

இரண்டாம் இடம்



துளசி யோகேஸ்வரன்

மூன்றாம் இடம்



கார்த்திக் சிவகுமார்

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்



ஆரபி ராஜமோகன்

இரண்டாம் இடம்



தனுஷ்காந்த் யோகேஸ்வரன்

மூன்றாம் இடம்



வர்ஷா மணிவண்ணன்

**மேற் பிரிவு**

முதலாம் இடம்



நிஷாந்தி கணேசலிங்கம

இரண்டாம் இடம்



இந்துஜன் பஞ்சலிங்கம்

மூன்றாம் இடம்



லக்ஷிகா மோகனேந்திரன்

**அதிமேற் பிரிவு**

முதலாம் இடம்



மதுரா சோதிநாதன்

இரண்டாம் இடம்



நிதுஷா பரமானந்தராஜா

மூன்றாம் இடம்



மயூரா சோதிநாதன்

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

காரை வசந்தம் 11வது ஆண்டு கலைவிழாவில் கலந்து கொள்ள வருகைதந்த அனைத்து கனடா வாழ் காரைநகர் மக்களுக்கும், அறிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும், அந்தணப்பெருமக்களுக்கும்,

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துள்ள கணக்காய்வாளர் திரு. கனகராசா கந்தையா அவர்களுக்கும் அவர்தம் பாரியாரிற்கும்,

இன்றைய விழாவினை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த கலாநிதி தி. சிவகுமாரன், திருமதி. சிவகுமாரன், குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் வி.விஜயரட்ணம், பல் வைத்திய நிபுணர் டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம், திருமதி ஆதிகணபதி அவர்களுக்கும்,

இவ்விழாவில் கடவுள் வாழ்த்து, கனேடிய தேசிய கீதம், தமிழ்தாய் வாழ்த்து, ஆகியவற்றை வழங்கிய மாணவர்களுக்கும் இவற்றை பயிற்றுவித்த ஆசிரியர் இசைக்கலா வித்தகர் ஹம்சத்வனி சிங்கராஜா அவர்களுக்கும் மன்றகீதத்தை நடனவடிவில் வழங்கிய நாட்டியக்கலைமணி திருமதி. குமுதினி ஸ்ரீகாந்தன் அவர்களுக்கும் அவர்தம் மாணவர்களுக்கும்,

விழாவினை அலங்கரித்த முதல் நிகழ்வான நாதம் கீதம் சங்கீதம் இசைநிகழ்ச்சியினை வழங்கிய இசைக்கலாபாரதி சத்தியசொரூபி தீபன் அவர்களுக்கும் மிருதங்ககலா வித்தகர் ரதிரூபன் பரஞ்சோதி அவர்களுக்கும் மற்றும் சக கலைஞர்களுக்கும்,

பாப்பாப் பாட்டு மற்றும் fusion நடனங்களை வழங்கிய பாலவிமல நர்த்தனாலய அதிபர், பரதகலா வித்தகர் திருமதி சித்ரா தர்மலிங்கம் அவர்களுக்கும் திரைஇசை நடனத்தை வழங்கிய நடனகலா பாரதி, நாட்டியக் கலைமைணி செல்வி நிர்த்திகா சித்திரவடிவேல் அவர்களுக்கும் தனி நடனத்தை வழங்கிய செல்வி காயத்திரி பரமேஸ்வரன் அவர்களுக்கும் Heal the World மற்றும் உயிரும் நீயே நடனங்களை வழங்கிய நிரோ கிரியேஷன்ஸ் அதிபர் ஸ்ரீமதி நிரோதினி பரராஜசிங்கம் அவர்களுக்கும்,

வீணா கானம் வழங்கிய வீணாலயம் அதிபர் திருமதி. ஜெயந்தி ரட்ணகுமார் அவர்களுக்கும் அவர்தம் மாணவர்களுக்கும் அந்நிகழ்ச்சியில் மிருதங்கம் வாசித்த மிருதங்ககலா வித்தகர் ரதிரூபன் பரஞ்சோதி அவர்களுக்கும்,

Open House சமூக நாடகத்தை வழங்கிய காரை மணிவண்ணன், வேலணையூர் செல்வம் மற்றும் அவர்தம் குழுவினருக்கும் Luxury வறுமை -- 2 நாடகத்தை வழங்கிய கனடா காரை கலாச்சார மன்ற கலைப்பிரிவினருக்கும் புத்தகப் பொங்கல் சிறுவர் நாடகத்தை வழங்கிய கிருஸ்ணவேணி சோதிநாதன் குழுவினருக்கும் அதில் நடித்த காரை சிறார்களுக்கும்,

காரை வசந்தத்தின் கடந்த 10வருட நிகழ்வுகளை தொகுப்பாக வழங்கிய கே.கே.எலெக்ரோனிக்ஸ் ஸ்தாபனத்தினருக்கும்,

விழாவுக்கான மாலைகள், குத்துவிளக்கு ஆகியவற்றை வருடந்தோறும் எமது மன்றத்திற்காக வழங்கிவரும் வாகீசர் ஐயாவுக்கும்,

கடந்த ஆகஸ்ட மாதத்தில் நடைபெற்ற தமிழ்த் திறன் போட்டிகளில் பங்கு பற்றிய சிறார்களுக்கும், இந்த போட்டிகளுக்கு நடுவர்களாக கடமையாற்றிய ஆசிரியப் பெருமக்களுக்கும், பண்ணிசை போட்டி நடுவர்களாகக் கடமையாற்றிய சங்கீத ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும்,

இவ்விழாவை நடத்துவதற்கு மண்டபத்தை வழங்கி சிறந்த முறையில் ஒலி, ஒளியமைப்பு செய்த Chinese Cultural Centre நிர்வாகிகளுக்கும்,

விழாவுக்கான பிரதான அனுசரனையாளர்கள் டாக்டர் வி. விஜயரத்தினம் அவர்களுக்கும், ஏனைய அனுசரனை வழங்கும் Double Seal Insulation நிறுவன அதிபர் திரு. மகாதேவன் பாலசுப்பிரமணியம், காசிப்பிள்ளை சக புத்திரர்கள் நிதி நிறுவன அதிபர் திரு. முருகேசு காசிப்பிள்ளை, பல்வைத்திய நிபுணர் டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம், Home Life / Gta Reality Inc முகவர் திரு. ரவி ரவீந்திரன், வரசித்தி அன்ட் கோ நிறுவன அதிபர் P.S.சுதாகரன், Capreit நிறுவனம் திரு. கோபால் மயில்வாகனம், Nano Micro Computer & Home Life Future Reality Inc. திரு. ராஜ் நடராஜா, RBC Insurance முகவர் திரு. குமார் கதிரவேலு, K.K. Electronics நிறுவன அதிபர் திரு.பொன்னம்பலம் குழந்தைவேலு ஆகியோரிற்கும்,

விழாவுக்கான விளம்பரங்களை வெளியிட்டு உதவிய CMR, TVI, Tamil One, CTBC, கீதவாணி, உதயன் நிறுவனங்களுக்கும்

இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய P.S சுதாகரன், ஞானபண்டிதன், கிருஸ்ணவேணி சோதிநாதன், S. தவராஜா, சாலினி குழந்தைவேலு ஆகியோருக்கும்


இவ்விழாவின் ஒருங்கிணைப்பாளர் திரு. கோடீஸ்வரன் ஆறுமுகம் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றும் அனைத்துத் தொண்டர்களிற்கும்,


இவ்விழா • நிகழ்ச்சிகளை வருடா வருடம் ஒளிப்பதிவு செய்து வரும் K.K.Electronics நிறுவனத்தினருக்கும், ஊழியர்களுக்கும், புகைப்பட அனுசரனை வழங்கும் பாரத் ஸ்ருடியோ நிறுவன உரிமையாளர் திரு. சோமா அவர்களுக்கும்

காரை வசந்தம் 11ஆண்டு மலரை வெளியிடுவதற்கு உதவிய மலர் குழுவிற்கும், மலரை வடிவமைத்து உதவிய திரு.கனகசபாபதி மாணிக்கம், விளம்பரங்களை செய்துதவிய மாறன் கணேசன், அழகிய வண்ணத்தில் அட்டைப்படத்தை உருவமைத்துத் வழங்கிய திரு. ஞானபண்டிதன் பாலசுப்பிரமணியம், சிறந்த முறையில் அச்சுப்பதிவு செய்த Graphic Land நிறுவனத்தினருக்கும்,

Karianagar.com இணையத்தள ஆலோசகர் திரு. விமலசிறி குலசேகரம் அவர்களுக்கும், தினமும் இணையத்தள பராமரிப்பு செய்யும் K.K. Electronics உரிமையாளருக்கும். Karaianagar.com இணையத் தளத்திற்கு காரைநகரிலிருந்து உடனுக்குடன் செய்திகளை வழங்கும் செய்தி நிருபர்களாகிய சயந்தன் ஆகியோருக்கும்,

இவ்விழாவின் வெற்றிக்கும் பொலிவிற்கும் அயராது உழைத்த மன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் கனடா - காரை கலாசார மன்றம் தனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.






**Ravi R. Raveendran** BSc.(Eng)
Real Estate Broker
**416.817.8479**

HomeLife/GTA Realty Inc.
5215 Finch Ave East, Suit 203,
Toronto, Ontario, M1S 0C2
Bus: 416-321-6969

HOMELIFE
HIGHER STANDARDS



# காரை வசந்தும் சிறப்புற வாழ்த்துக்கள்

காரை அன்னையின் செல்வங்கள்

எடுக்கும் விழா காரை வசந்தம் இனிதாய் முடிந்திடும்

இன்னும் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து

இமயப் பணிகளை மன்ற மாற்றிடும்.

# குழந்தை வைத்தியநிபுணர்

## Dr.V.Vijayaratnam M.D

**M.R.C.P(U.K), M.R.C.P.C.H, F.R.C.P(Canada), F.A.A.P, D.C.H(London), D.C.C.H(Edin)**

3430 Finch Ave E Unit#6A
Scarborough ON. M1W 2R5
Tel:416-496-1990
Fax:416-496-1984

600 Sherbourne St Suite #711
Toronto,ON. M4X 1W4
Tel:416-929-0929
Fax:416-929-8084